மார்ச் 18, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

## சமாதானத்தின் விரோதி யார் புலிகளா, அரசாங்கமா?

## துணிவுக்கு ஒரு தமிழ் நீதிபதி

## அமெரிக்க தூதருக்கு தாயகம் பற்றி என்ன தெரியும்?













# கங்குலியின் கிரிக்கெட்டை விட காதல் விளையாட்டு பிரமாதம்!

## தமிழ் நாட்டு சரத்குமார் — ராதிகாவும் சளைத்தவர்கள் அல்லர்

இந்திய கிரிக்கெட் கப்டன் கங்குலி சிறந்த ஆட்டக்காரர், என்றாலும் அவருடைய கிரிக்கெட்டை விடச் சினிமா நடிகை நக்மாவுடன் அவர் நடத்தும் காதல் விளையாட்டையே எல்லோரும் பிரமாதம் என்கிறார்கள். அது பற்றி சினிமா மற்றும் கிரிக்கெட் வட்டாரங்களில் அதிகமாகப் பேசிக் கொள்கிறார்கள்.

இத்தனைக்கும் கங்குலி ஏற்கனவே திருமணமானவர். கொல்கொத்தாவை (கல்கத்தா) சேர்ந்தவர். வசதியான குடும்பம். இவரது தந்தைக்கு மிகப்பெரிய அச்சகம் ஒன்று சொந்தமாக உள்ளது. பிராமணர்களான கங்குலியின் குடும்பத்தவர்கள் ஆசாரம் மிக்கவர்கள். இன்றும் சகோதரர்கள், அத்தை,



கங்குலியும் நக்மாவும்

மாமா, சித்தப்பா என்று 40 க்கும் மேற்பட்டோர் கூட்டுக்குடும்பமாக ஒரே வீட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் வீட்டின் முன்னால் இவர்களுக்குச் சொந்தமான 20க்கு மேற்பட்ட கார்கள் எப்போதும் நின்று கொண்டிருக்கும். இவர்களது வீட்டுக்குப் பக்கத்திலேயே (கங்குலியின் மனைவி) டோனாவின் வீடும் இருந்தது. இதனால் சிறுவயது முதலே கங்குலியும்— டோனாவும் காதலித்து வந்தனர். ஆனால் வீட்டில் சொல்லவில்லை.

சில வருடங்களுக்கு முன் 1996இல் தென்னாபிரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்ள இருந்த கங்குலி திடீரென டோனாவை இழுத்துக் கொண்டுபோய் இரகசியப் பதிவுத் திருமணம் செய்து கொண்டார். இது பின்னர் பெற்றோருக்குத் தெரியவந்தது. இருவரையும் பிடித்து திருமணத்தை நடத்தி வைத்தனர்.

கங்குலி— டோனா தம்பதியருக்கு பிள்ளைகளும் பிறந்தன.

இந்திய கிரிக்கெட் அணியைப் பொறுத்தவரையில் பெண்கள் விடயத்தில் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதவர்கள் டெண்டுல்கரும் கங்குலியும் தான்.

ஜடேஜா, மொங்கியா போன்ற ஜாலி மைனர்கள் மத்தியில் கங்குலியும் — டெண்டுல்கரும் பெண்களென்றாலே வெட்கப்பட்டு ஒதுங்கி விடுவார்கள். இவர்கள் இருவரும் காதலித்துத் திருமணம் செய்ததையே ஆச்சரியத்துடன் கேலிசெய்யும் இந்திய கிரிக்கெட் அணியினர், கங்குலியின் தற்போதைய நடவடிக்கையை அறிந்து அதிர்ச்சி அடைந்து விட்டனர்.

மும்பையில் பெரிய குடும்பத்தைச் சேர்ந்த நக்மாவுக்கு ஜோதிகா, ரோஷினி என்று இரு தங்கைகள் இருக்கிறார்கள். இவர்களில் ஜோதிகா தற்போது தமிழ்ப்படவுலகில் நம்பர் 1 ஆக இருக்கிறார். ரோஷினி ஒன்று இரண்டு படங்களில் நடித்த பின் மும்பாய்க்கு மூட்டை கட்டி விட்டார்.

நக்மா சினிமாத்துறைக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது. முதலில் 'பாகி' என்ற ஹிந்திப் படத்தில் சல்மான்கானுடன் நடித்தார். அப்போதே நக்மாவின் காதல் வலைவீச்சில் விழுந்தவர்கள் பலர்.

அதன் பின் "காதலன்" திரைப்படம் மூலம் தமிழ்த்திரையுலகிற்கு வந்தார். அந்தப் படம் பெரும் வெற்றிபெற அடுத்து ரஜினியுடன் 'பாட்ஷா'வில் நடித்து தமிழில் முதல்தர நடிகையாக உயர்ந்தார்.

தொடர்ந்து சரத்குமாருடன் சில படங்களில் நடித்த நக்மாவுக்கும் சரத்குமாருக்கும் நெருக்கம் ஏற்பட்டது. அதையடுத்து நக்மாவின் மார்கெட் சரிந்த போதும் நக்மாவை நடிக்க வைக்க வேண்டுமென்பதற்காகச் சில படங்களைத் தாமே தயாரித்தார் சரத்குமார்.

அவற்றில் 'ரகசிய பொலிஸ்' என்ற பெயரில் வெளிநாடுகளெல்லாம் சென்று எடுத்த படம் படுதோல்வி அடைந்தது. சரத்குமார் பெரும் கடனாளி ஆனார்.

அந்த வேளையில் சில உதவிகள் மூலம் சரத்குமாரைக் கவர்ந்தார் நக்மா.

மனைவியை விவாகரத்துச் செய்து விட்டு தன்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி சரத்குமாரை நச்சரிக்கத் தொடங்கினார் நக்மா.

ஆனால் அரசியலில் செல்வாக்குப் பெற ஆசைப்பட்ட சரத்குமார், நக்மாவுடனான தனது தொடர்பு வெளியே தெரிய வருவதை விரும்பவில்லை. தனது எதிர்காலம் பாதிக்கப்படும் என்று நினைத்து உறவை மறைத்து விட்டார்.

இதனால் கோபமடைந்த நக்மா சரத்குமாரை பகிரங்கமாகத் திட்டத் தொடங்கினார். சரத்துக்கும் தனக்குமுள்ள தொடர்புகளை மெல்ல மெல்ல வெளியே விட்டார். இதனால் ஆத்திரமடைந்த சரத், தனது ஆட்கள் மூலம் நக்மாவை மிரட்ட, தப்பினோம் பிழைத்தோம் என்று மும்பாய்க்கு ஓடினார் நக்மா.

பின்னர் மும்பாயிலிருந்து ஹைதரபாத்திற்கு சென்ற நக்மா அங்கு முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் மகனைத் தனது வலையில் வீழ்த்தினார்.

இருவரும் சுற்றித்திரிவதை வெறுத்த நரசிம்மராவின் கட்சியினர் அரசியல் ரீதியாக நக்மாவை மிரட்டினர். வருமான வரித்துறையினர் மூலம் நக்மாவின் வீட்டைச் சோதனையிடச் செய்தனர்.

இதனால் பயந்து போன நக்மா மீண்டும் மும்பாய்க்கு ஓடினார். இதற்கிடையில் பெரும் வியாபாரப் புள்ளியாக இருந்த நரசிம்மராவின் மகனை ஒரு கடனாளியாக்கிவிட்டே நக்மா சென்றார். கஷ்டப்பட்டுப்போன நரசிம்மராவின் மகன் நடிகர் ரஜினிகாந்திடம் 2 கோடி ரூபா கடனாகப் பெற்றார். இப்போது அவரை ஏமாற்றிவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

இந்த நிலையில் சினிமாத் துறையிலிருந்து ஒதுங்கியிருந்த நக்மாவை "தீனா" என்ற தனது படத்தில் ஒரு பாடல் காட்சியில் மட்டும் நடித்துத் தரும்படி நடிகர் அஜித்குமார் கேட்டார்.

ஆனால் மீண்டும் தமிழ் நாட்டுக்கு வந்தால் சரத்குமாரின் தொல்லை தொடரும் என்று பயந்து அதனைத் தவிர்த்து வந்தார் நக்மா.

அண்மையில் சரத்குமாரும் நடிகை ராதிகாவும் காந்தர்வ திருமணம் முடித்த செய்தியைக் கேள்விப்பட்ட பின்பே நக்மா மீண்டும் தமிழ் நாட்டுக்கு வரச் சம்மதித்தார். தீனாவில் நடித்து படம் வெளியாகிய நிலையில் அடுத்த அஜித்குமாரின் படமாகிய சிட்டிஷனிலும் நடித்து வருகிறார் நக்மா.

பலரைக் கடன்காரராக்கி இன்னும் பலரை விவாகரத்துக்குள்ளாக்கிய நக்மாவின் வலையில் தற்போது கங்குலி விழுந்தது ஒரு சினிமாக் கதை போலவே உள்ளது.

1998 இல் சார்ஜா கிண்ணத்துக்கான ஆட்டங்களில் கலந்துக் கொள்ள இந்திய அணி சார்ஜாவுக்குப் பயணம் மேற்கொண்டது.

இவர்கள் பயணம் செய்த அதே விமானத்தில் சார்ஜா கிரிக்கெட் அமைப்பாளர்களின் பேரில் நக்மாவும் பயணம் செய்தார்.

விமானத்துக்குள் ஒரு சந்தர்ப்பத்தில் நக்மா மீது கங்குலி தவறுதலாக மோதிவிட, நக்மா கீழே விழப் போக, அவரைக் கங்குலி தாங்கிப் பிடித்து விட்டார்.

மன்னிப்புக் கேட்டுவிட்டு இருவரும் விலகிச் சென்று விட்டனர். பின்னர் சார்ஜாவில் வைத்து அமைப்பாளர்களால் இருவரும் அறிமுகப் படுத்தப்பட்டனர்.

அப்போதுதான் தன்னில் மோதியது கங்குலி என்று நக்மாவுக்கும், தான் தாங்கிப் பிடித்தது நக்மாவைத்தான் என்று கங்குலிக்கும் தெரியவந்தது. அத்தோடு நட்பு இறுகியது.

கடந்த ஆண்டு லண்டனில் நடைபெற்ற கவுண்டி போட்டிகளில் கங்குலி சென்றிருந்த போது நக்மாவும் அவருடன் சென்றிருந்தார்.

பின்னர் தமிழ் நாட்டில் நக்மா படப்பிடிப்பில் கலந்து கொள்ளும் போதெல்லாம் கங்குலி தமிழ் நாட்டுக்கு அடிக்கடி வந்து போவது வழக்கமாகியது. இதனை அப்பொழுது எவரும் பெரிதுபடுத்தவில்லை.

ஆனால் இவர்கள் இருவருக்குமிடையில் ஏற்கனவே காதல் ஆரம்பமாகிவிட்டது என்ற விடயம் அண்மையில் இருவரும் ஸ்ரீ காள ஹஸ்தி என்ற இடத்தில் உள்ள புனித தலத்திற்குச் சென்று திரும்பியபோது தான் தெரியவந்தது.

ஆந்திர மாநிலத்தின் திருப்பதியில் உள்ள இந்த ஸ்ரீ காளஹஸ்தி என்ற புனித தலத்தில் நாகதோஷ நிவர்த்தி பூஜை செய்தால் நீண்ட நாள் திருமணமாகாமல் இருக்கும் பெண்களுக்குத் திருமணம் கைகூடும். திருமணம் செய்து கொள்ள மறுக்கும் ஆண்களையும் இந்தக் கோவிலுக்கு அழைத்து வந்தால் அவர்களது மனம் மாறி திருமணம் செய்து கொள்வார்கள். இந்த நம்பிக்கை தொன்று தொட்டு உள்ளது.

இந்த நிலையில் இரகசியமாக கங்குலியும் — நக்மாவும் அங்கு போய் வந்தது இருவரும் திருமணம் செய்யப்போகிறார்கள் என்பதை உறுதிப்படுத்தியது.

காளஹஸ்திக்குப் போனவர்கள் அங்கே காணப்பட்ட பெரும் கூட்டத்தைக் கண்டு மிரண்டிருக்கிறார்கள். அர்ச்சனை செய்வதற்காக பெயர் விவரங்களைக் கேட்ட போது இருவரும் தடுமாறியிருக்கிறார்கள். பூஜை முடிய முன்பே செருப்பைக் கூட விட்டுவிட்டு கங்குலி ஓடிவந்து காரில் ஏறி விட்டார். இந்தப் பதற்றமே இருவர் மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் பற்றி கங்குலியிடம் பத்திரிகையாளர்கள் கேட்டால், கடுகாய் வெடிக்கிறாராம். நக்மாவோ கழுவுகிற மீனில் நழுவுகிற மீனாகி விடுகிறார். ஆனால் நக்மாவின் தாயாரோ இன்னும் 15 நாளில் இது பற்றி சொல்கிறோம் என்கிறாரே தவிர இதனை மறுக்கவில்லையாம்.

15 நாட்களுக்குள் கங்குலியை மடக்கி எப்படியாவது டோனாவை விவகாரத்துச் செய்ய வைத்து விடுவதே நக்மா தரப்புத் திட்டமென்று சொல்லப்படுகிறது.

ஆனால் இந்தச் செய்திகளில் மிகவும் குழம்பிப்



ராதிகாவுடன் சரத்குமார்

போயிருக்கும் டோனா "எனது கணவர் பற்றி எனக்குத்தெரியும். நான் அவர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன்" என்று சொல்லுகிறாராம்.

கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் ஹிந்தி நடிகைகளின் வலையில் விழுவது ஒன்றும் புதிய விடயமல்ல.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் விவியன் ரிச்சட்ஸ், நீனா குப்தா என்ற நடிகையைக் காதலித்தார். குழந்தை பிறந்து மூன்று வருடங்களின் பின்பே தனது காதலை ஒப்புக் கொண்டார்.

முன்னாள் இந்தியக் கப்டன் அசாருதீன் தனது மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு சங்கீதா பிஜ்லானி என்ற நடிகையைத் திருமணம் செய்து குடித்தனம் நடத்தி வருகிறார்.

மற்றும் ரவிசாஸ்திரி—அம்ரிதா சிங் என்று பட்டியல் நீள்கிறது.

ஆயினும் நீயுமா கங்குலி? (You too Ganguly) என்று பரிதாபமாகப் பெருமூச்சு விடுகிறார்கள் ரசிகர்கள்.

— குமரன்

# கேட்டது கிடைக்காமலே சத்தியாக்கிரகம் வாபஸ்!

## மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

தோட்டத்தொழிலாளர்களின் 400 ரூபா சம்பள உயர்வுக்காக கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் வெள்ளிக்கிழமையுடன் முற்றுப் பெற்றது.


ஆறுமுகம்

தொழில் அமைச்சர் அலவி மௌலானாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் சத்தியாக்கிரகப் போராட்டத்தை வாபஸ் பெற்றார்.

தொழில் அமைச்சில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்ட விடயங்கள் வருமாறு:-

தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை நாட்சம்பளம் தொடர்ந்து 101 ரூபாவாக இருக்கும். இதில் மாற்றம் இல்லை.

தேயிலை விற்பனை போனஸாக முன்பு வழங்கப்பட்ட 6 ரூபா இனிப் 15 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்களின் வருகை போனஸ் நாள் வீதம் குறைக்கப்படும். மாதம் 19 நாட்கள் வேலை செய்தால் நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் கிடைக்கும்.

றப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளம் தொடர்ந்து 98 ரூபாவாகவே இருக்கும். 20 நாட்கள் வேலை செய்தால் வருகை போனஸாக 14 ரூபா வழங்கப்படும். முன்னர் 25 நாட்களுக்கு மேல் வேலை செய்தால் மாத்திரமே இந்தத் தொகை வழங்கப்பட்டது.


ராஜா செனவிரத்ன

ஒப்பந்தத்தின் பிரகாரம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நாட் சம்பளம் 121 ரூபாவாகவிருக்கும். ஆனால் 101 ரூபாவுக்கு மட்டுமே ஊழியர் சேமலாப நிதியும் ஊழியர் நம்பிக்கை நிதியமும் செலுத்தப்படும். மிகுதி 20 ரூபாவுக்கு இல்லவே இல்லை.

அமைச்சர் அலவி மௌலானாவுடன் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் இ.தொ.கா. சார்பில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், ஆர். யோகராஜன், ஹரி சந்திரசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டுக் கமிட்டியின் சார்பாக அதன் தலைவர் மலியகொடவும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் சார்பாக அதன் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்னவும் கலந்து கொண்டனர்.

அரச தரப்பில் அமைச்சர் அலவி மௌலானாவுடன் அமைச்சர்கள் மங்கள சமரவீர, எஸ்.பி.திஸநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தையின் முடிவில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும், மலிய கொடவும் ராஜா செனவிரத்னவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு பக்க பலமாக இருந்த தொழிற்சங்கங்கள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படவில்லை.

இ.தொ.காவும் மற்றைய இரு தொழிற்சங்கங்களும் கடந்த ஆண்டு ஜூனில் ஏனைய தொழிற்சங்கங்களை ஓரம் கட்டி விட்டுக் கம்பனிகளுடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டன.

கூட்டு ஒப்பந்தத்தின் படி தோட்டத் தொழிலாளர்களுக்கு 121 ரூபா நாட் சம்பளம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் எல்லாத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 400 ரூபா தோட்டத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றே சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இந்த 400 ரூபா கிடைக்கவில்லை.

இவர்களுடைய கோரிக்கையின்படி நாட்சம்பளமாக 137 ரூபா வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 121 ரூபாவே வழங்கப்பட்டுள்ளது.

மாதம் 400 ரூபா அதாவது நாளொன்றுக்கு 137 ரூபா கிடைக்கும்வரை போராட்டம் ஓயாது. நியாயமான முடிவு கிடைக்காவிட்டால் அமைச்சர் பதவியைத் தூக்கி எறியவும் தயங்கமாட்டேன் என்றார் ஆறுமுகம் தொண்டமான்.

"சம்பள உயர்வுப் போராட்டம் ஒரு சமூக எழுச்சிப் போராட்டமாக உருவெடுத்துவிட்டது. தேசியப் பிரச்சினையாகிவிட்டது. அமைச்சர் ஆறுமுகத்தின் தலைமையில் ஒன்றுபட்டுவிட்டோம். வெற்றி நிச்சயம்" என இதர தொழிற்சங்கத் தலைவர்களும் குரல் கொடுத்தனர்.

தோட்டத் தொழிலாளர்களும் பெரும் எதிர்பார்ப்புகளுடன் காத்திருந்தனர்.

இவர்களுடைய போராட்டம் வெற்றி பெற்றதா? கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டனவா? இவை கேள்விக்குரியவையாகவே அமைந்து விட்டன.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் 23 நாட்கள் சத்தியாக்கிரகம் செய்தும் அதனைக் கண்டு கொள்ளாத அரசாங்கமும் அமைச்சர்களும் அவர் இராஜினாமா செய்யப் போவதாக அறிவித்ததும் ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டில் இல்லாத வேளையிலேயே சிரேஷ்ட அமைச்சர்கள் தீவிரமாகச் செயற்பட்டு எப்படியோ தீர்வுக் கண்டுள்ளனர்.

இது தொழிலாளர்கள் மீது கொண்ட அக்கறையா? இல்லை ஆறுமுகம் ஒதுங்கிவிட்டால் அரசு ஆட்டம் கண்டு விடும், தமது பதவிகளும் போய்விடும் என்ற பீதியா என்று அவதானிகள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இ.தொ.காவும் மற்றைய இரு தொழிற்சங்கங்களும் சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் கைவிட்டது குறித்து மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனிடம் கேட்டபோது அவர் கருத்து எதுவும் தெரிவிக்க மறுத்துவிட்டார். "பொறுத்திருந்து பார்ப்போம்" என்று மட்டும் அவர் பதில் அளித்தார்.

# கோயில் கட்டுவதற்கு இனி அரசு நிதி கிடைக்காது!

பெருந்தோட்டங்களில் கோயில் கட்டுவதற்கு இனி அரச நிதி வழங்கப்படமாட்டாது. மலையகத்தில் உள்ள பெருந்தோட்டங்களில் கோயில் கட்டுவது இன்று ஒரு வியாபாரமாகி விட்டது. குறிப்பிட்ட சிலருக்கு வருமானம் தரும் தொழிலாகவும் இது அமைந்துவிட்டது.

"கடந்த காலங்களில் இப்படியான பணிகளின்போது துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. அரசியல்வாதிகளின் துணையுடன் இவர்கள் தப்பிக்கொள்கின்றனர்.

இப்படி வேதனைப்படுகிறார் மத்திய மாகாண அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன்.

மத்திய மாகாண சபையில் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு, உல்லாசப் பிரயாணத்துறைகள், தமிழ் மொழி விவகார, இந்துக் கலாசார தமிழ்க் கல்வி விவகார அமைச்சராக இவர் பணிபுரிகிறார்.

இவர் தனது பொறுப்பில் உள்ள அமைச்சுக்களின் மூலம் தோட்டப்புற மக்களின் நல்வாழ்வுக்காகப் பெருந்தொகையான பணத்தை ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

இவரின் நோக்கம் நிறைவேறியதா? இவர் ஒதுக்கிய நிதி மக்களைச் சென்றடைந்ததா? இது இன்று கேள்விக்குரியதாகிவிட்டது.

அட்டன் சத்தியாக்கிரக மேடையில் தனது சகாக்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும் போதே அமைச்சரின் ஆதங்கம் வெளிப்பட்டது.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது என்பது சரிதான். அதற்காக இருக்கும் கோயில்களை எல்லாம் இடித்துக் கட்டுகிறோம், புனர்நிர்மாணம் செய்கிறோம் என்ற பெயரில் பொது நிதியை வீண் விரயம் செய்யவேண்டுமா?

"மலையகத்தில் வீட்டு வசதி இல்லை. குடி தண்ணீர், மலசலகூட வசதிகள் இல்லை. சரியான போக்குவரத்துப் பாதைகளும் கிடையா. வாசிகசாலைகள் இல்லை. போதுமான பாலர் பாடசாலைகள் இல்லை. சில தோட்டங்களில் மயானங்கள் கூட இல்லை.

"இவற்றை எல்லாம் பற்றி இவர்கள் சிந்திப்பதே இல்லை. ஆனால் இவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் கோயில் கட்ட வேண்டும். ஒலிபெருக்கிக் கருவிகள் வேண்டும். விளையாட்டு மைதானம் வேண்டும் என்பவையே.

"ஒரு சில தோட்டங்களைத் தவிர பெரும்பாலான தோட்டக் கோயில்கள் அரைகுறையாகக் கட்டப்பட்டு நித்திய பூஜைகள் கூட இல்லாமல் காணப்படுகின்றன.


இராதாகிருஷ்ணன்

"கோயில்களுக்குச் சொந்தமான ஒலி பெருக்கிகள் சங்கக் கூட்டங்களுக்கும் வைபவங்களுக்கும் வாடகைக்கு விடப்படுகின்றன. இவற்றினால் பொறாமையும் போட்டியும் உருவாகி உட்பூசல்களும் பகைமையும் ஏற்பட்டு அமைதி இன்மை காணப்படுகின்றது.

"நல்ல நோக்கத்தோடு வழங்கப்பட்ட நிதியால் சமுதாயத்துக்கு எந்த நன்மையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை"

"ஊழல் பேர்வழிகள் கட்சியின் பெயராலும் சங்கத்தின் பெயராலும் தமக்கென ஒரு கூட்டத்தைக் கூட்டி வைத்துக்கொண்டு அரசியல்வாதிகளின் நிழலில் குளிர் காய்கின்றனர். இதனால் இனிமேல் கோயில் திருப்பணிகளுக்கு என நிதி வழங்கப்படமாட்டாது. கோயிலைக் கட்டிக்கொண்டால் சிலைகள் அல்லது கலசங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

அதுவும் கூட பணமாக வழங்கப்படமாட்டாது. அத்தியாவசியத் தேவைகளுக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் மட்டுமே அமைச்சின் நிதி செலவிடப்படும்" - இப்படி அமைச்சர் மேலும் கூறினார்.

சில தோட்டங்களில் கோயில் பரிபாலனசபை என ஒன்று இருக்கும்போதே தோட்ட உத்தியோகத்தர்களும் சில வியாபாரிகளும் சிலரைத் தமது கைக்குள் வைத்துக்கொண்டு, "கோயில் கட்டட நிர்மாணக்குழு" என ஒன்றை அமைத்துக்கொண்டு சுரண்டலில் ஈடுபடுகின்றனர்.

"கோயிலின் பெயரில் வங்கியில் நிதி வைப்பிலிடப்படுவதில்லை. தமது சொந்தப் பெயரிலேயே வைப்பிலிட்டு வட்டி பெறுகின்றனர். என்ன செய்வது? ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். அவர்களுக்கு வக்காலத்து வாங்கவும் ஒரு கோஷ்டி இருந்து அவர்களைக் காப்பாற்றுகின்றதே!

"நமது மக்களின் அடிமைத்தனம் மாறவேண்டும். ஏன், எதற்கு, எப்படி - என்ற கேள்விகள் இவர்கள் மத்தியில் இருந்து கிளம்பவேண்டும். இக்கேள்விகளுக்கு விடை காணும்போது விடிவு நிச்சயம்.

இப்படி அமைச்சர் மேலும் கூறினார்.


துரை - திருமண சேவை

எமது ஸ்தாபனத்தில் உள்நாடு, வெளிநாடு, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் - மணமகன்மார்கள், மணமகள்மார்கள், 3800க்கு மேற்பட்ட பதிவுகள் பதியப்பட்டுள்ளன.

யாழ், கிழக்கிலங்கை, கொழும்பு, மலையகம் பல் வேறுபட்ட குலத்தவர்கள் வெவ்வேறு தராதரமுடையவர்கள், வியாபாரிகள் முதல் உயர் தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் வரை உள்ளனர்.

உங்கள் தகுதி, குலம், படிப்பு, மதம் என்கிற அடிப்படையில் மணமகனையோ அல்லது மணமகளையோ தெரிவு செய்வது எளிது.

குறுகிய காலத்தினுள் அனேகருக்கு திருமணம் செய்து வைக்கபட்டதை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அத்துடன் வசதியற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் திருமணத்திற்கு உதவிகள் செய்து தரப்படும். நகைகள் செய்ய வசதியற்றவர்களுக்கு நகைகள் செய்ய உதவி வழங்கப்படும். நகைகளுக்கான பணம் தவணை முறையில் செலுத்தலாம்

C/o. THURAI TRADE CENTRE,
3A, JEYAWARDANA MAWATHA, GALLE ROAD, DEHIWELA, SRI LANKA.
TEL : 074 - 200458, 074 - 204534 FAX : 0094 - 74200458

TALENT



நம்பவே முடியவில்லை ஆனால் உண்மை!

தலைநகரில் சிற்றிகெப்ஸ் மட்டுமே ஆகக்குறைந்த கட்டணத்திற்கு வேன்/கார் பயண சேவையை வழங்குகிறார்கள்.
*திருமண வைபவங்களுக்கான செகுக கார்.
*24 மணிநேரமும் தொடர்ச்சியான சேவை.

552222 - 4

விசேட மலிவு கட்டணத்தில், கொழும்பிலிருந்து கட்டுநாயக்க விமானத்தளத்திற்கு சென்று வர ரூபா 1000/- மட்டுமே.

வேனில் : கொழும்பு நகருக்குள் பயணம் கி.மீ ரூபா 18/-,
ஒரு நாளில் திரும்பி வருகின்ற தூரபிரயாணங்களுக்கு, கி.மீ ரூபா 11/-
காரில் : கொழும்பு நகருக்குள் பயணம் - கி.மீ ரூபா 27/50-

City Cabs

No. 422, Galle Road, Colombo -06. Tel: 552223-4, 507171

பணத்தையும், நேரத்தையும் மீதப்படுத்த நாம் உதவுகிறோம்

TALENT A & M

சுடர் ஒளி

18 மார்ச், 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

# துணிவுக்கு ஒரு தமிழ் நீதிபதி

நீதித்துறையின் அதி உயர் பதவிகளில் ஒன்று உயர் நீதிமன்ற நீதியரசர் பதவி. அந்தப் பதவிக்குச் சி.வி.விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நீதியரசர் விக்னேஸ்வரன் தாம் நியமனம் பெற்ற உடனேயே அரசாங்கம் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அடுத்தடுத்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அரசுகள் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகங்களையும் அம்பலப் படுத்தியிருக்கிறார்.

தமிழ் மக்களின் இன்றைய அவலநிலை அவர்களின் உணர்வுகள் அபிலாஷைகள் ஆகியவற்றையும் எடுத்துக்கூறியிருக்கிறார்.

நிலையைச் சீராக்க அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனையும் தெரிவித்திருக்கிறார்.

தம்மை வரவேற்பதற்காகக் கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வைபவ ரீதியான அமர்வின்போதே நீதியரசர் விக்னேஸ்வரன் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் பற்றிய உண்மை நிலையை இலங்கையர்கள் அனைவருக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

இந்தத் துணிவு, இந்த இனப்பற்று வேறு யாருக்கு வரும்?

சட்டத்துறையிலும், நீதித்துறையிலும் மற்றெல்லாத்துறைகளிலும் இதற்கு முன்னரும் எத்தனையோ தமிழர்கள் உயர் பதவிகளில் இருந்திருக்கிறார்கள்.

இப்போது அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் பதவி பெற்று ஆட்சிப் பொறுப்பிலும் தமிழர்கள் சிலர் இருக்கிறார்கள்.

பதவி வழங்கியவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதிலும், பதவியைக் காப்பாற்றிக் கொள்வதிலும், சுகபோகங்களை அனுபவிப் பதிலுமே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருக் கிறார்கள். அதனால் மனச்சாட்சி அவர்களிடமிருந்து விடைபெற்று விடுகிறது. இன உணர்வு அற்றுப்போகிறது. மக்களின் துயரங்கள் அவர்களின் கண்களுக்குத் தெரிவதில்லை. அரசுக்குப் பிடிக்காத எதைப்பற்றியும் வாய் திறப்பதில்லை.

இப்படிப்பட்டவர்கள் மத்தியில் நீதியரசர் விக்னேஸ்வரன் வித்தியாசமானவராக இருக்கிறார்.

தாம் தமிழன் என்பதால் தமிழிலும் பேச வேண்டும் என்று கூறித் தமிழிலும் நீதியரசர் உரை நிகழ்த்தினார்.

சிங்கள மொழியும் சிங்களக் கலை, கலாசாரமும் பழக்கவழக்கங்களும் சிங்களவர்களுக்கு எப்படி முக்கியமோ அப்படித்தான் தமிழர்களுக்குத் தமிழ் மொழியும் தமிழ்க் கலை, கலாசாரமும் பழக்க வழக்கங்களும் முக்கியம். அவற்றை வளர்க்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் வேண்டும் என்றார்.

வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையினராக இருந்த தமிழ் பேசும் மக்கள் ஆட்சி அதிகாரக் காரணங்களுக்காக மற்ற ஏழு மாகாணங்களோடு சேர்த்து நுட்பமான கணித முறையில் சிறுபான்மையினராக்கப்பட்டுவிட்டார்கள் என்று நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றம்சாட்டினார்.

தமிழ் மக்கள் வெறும் அதிகாரப் பரவலாக் கலையோ அதிகாரப் பகிர்வையோ கோரி நிற்கவில்லை. தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளைத் திரும்பப் பெறவே அவர்கள் விழைகிறார்கள். தமது தாய் மொழியில் தம்மைத்தாமே ஆளவேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள்.

1956இல் சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்கியது -

1947ஆம் ஆண்டின் அரசமைப்புச் சட்டத்தில் இருந்த 29 (2) சரத்தைப் பிந்திய இரண்டு அரசமைப்புச் சட்டங்களிலும் நீக்கியது -

1958, 1977, 1983இனக்கலவரங்கள் - இவை எல்லாம் தமிழ் மக்களின் மனதில் ஆழப் பதிந்த வடுக்கள்.

இவற்றை நீக்குவதற்குச் செய்யவேண்டியது என்ன?

தமிழுரிமை இன்று சட்டத்தில் இருந்தாலும் அது நடைமுறையில் இல்லை. ஆகவே ஏழு மாகாணங்களிலும் (இணைப்பு மொழியான ஆங்கிலத்தோடு) சிங்களம் அதிகாரம் செலுத்தும் மொழியாக உள்ளது போல் வடக்கு, கிழக்கில் தமிழ் அதிகார மொழியாக வேண்டும். இரண்டு மாகாணங்களிலுமுள்ள அனைத்து மாணவர்களுக்கும் தமிழ் கட்டாய பாடமாக்கப்படவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

தனது உயர் பதவி, பணம், அதிகாரம், செல்வாக்கு, அனைத்தையும் துச்சமாக எண்ணித் தனது இனத்துக்காகவும் முழு நாட்டின் நன்மைக்காகவும் வேறு எந்தத் தமிழன் இப்படி எல்லாம் துணிந்து சொல்வான்?

நீதியரசர் விக்னேஸ்வரனை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

# சமாதானத்தின் விரோதி புலிகளா, அரசாங்கமா?

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடு தலைப் புலிகளுக்கும் இடையிலான போர் 18 வருடங்களாகத் தொடர்ந்து வருகிறது.

மக்கள் சமாதானத்துக்காக ஏங்கு கிறார்கள். ஆனால் சமாதானம் ஏற்பட இன்னும் வழி பிறக்கவில்லை.

உண்மையில் சமாதானத்தின் விரோதி யார்?

அரசாங்கம் என்கிறார்கள் தமிழீழ விடுதலைப்புலிகள்.

இல்லை, புலிகள்தான் என்கிறது அரசாங்கம்.

சிறுபான்மையினரான தமிழ் மக்களைப் போலவே பெரும்பான்மையினரான சிங்கள மக்களும் சமாதானம் வேண்டும் என்கிறார்கள்.


சந்திரிகா

ஆனால் சமாதானத்தை அடைவதற்கு அவர்களில் சில பிரிவினர் கூறும் வழி வினோதமானது.

சண்டை தொடரவேண்டும். அதில் வெற்றி பெறவேண்டும். புலிகளை முற்றாக அழித்தொழிக்கவேண்டும். அந்த அழிவிலேயே சமாதானம் பிறக்கும் என்கிறார்கள் அவர்கள்.

சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஜே.வி.பி. போன்ற இடதுசாரித் தீவிரவாதக் கட்சியினரும் வணக்கத்துக்கும் மதிப்புக்கும் உரிய மகாசங்கத்தினருமே யுத்தத்தின் மூலம் சமாதானம் காணவேண்டும் என்கிறார்கள்.

சுதந்திரக் கட்சியானாலும் சரி ஐக்கிய தேசியக் கட்சியானாலும் சரி அதிகாரபீடம் ஏறுவதற்கு சிங்கள தீவிரவாதக் குரலுக்கு செவிசாய்த்து ஆகவேண்டும். தவறினால் தேர்தல்களில் வாக்குகள் கிடைக்கமாட்டா.

மகாசங்கத்தினரையும் அந்தக் கட்சிகள் பகைத்துக் கொள்ளமுடியாது. மகாசங்கத்தின் ஆதரவு இருந்தால்தான் அதிகப்படியான வாக்குகள் கிடைக்கும்.

எந்த அரசாங்கமும் இவற்றை வெளியில் சொல்வதும் இல்லை; காட்டிக்கொள்வதும் இல்லை. அவற்றின் நடவடிக்கைகள் மூலம் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டியதுதான்.

பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவே அரசாங்கம் விரும்புகிறது. பேச்சுவார்த்தைக்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சொல்லி வருகிறார்.

தனது தற்போதைய ஐரோப்பிய விஜயத்தின்போது முதலாவதாக ஜேர்மனியில் காலடி வைத்துள்ள ஜனாதிபதி அங்கே என்ன சொன்னார்?

"தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு அந்தத் தீர்வை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறும் காலம் வெகு தொலைவில் இல்லை" இப்படி ஜனாதிபதி கூறினார்.

அதேவேளை பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளராகப் பணியாற்றும் நோர்வே அரசு இருதரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அரசு வேண்டியளவு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது.

அரசாங்கத்தின் அடிமனதில் புலிகளிடம் பறிகொடுத்த ஆனையிறவே எப்பொழுதும் இருந்துவருகிறது. ஆனையிறவைப் புலிகளிடமிருந்து மீண்டும் கைப்பற்றிவிட்டால் அது போதும்.

அந்த வெற்றிப் பலத்துடன் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி ஆலோசிக்கலாம் என்பதே அரசின் இன்றைய நிலைப்பாடு என்று விஷயம் அறிந்த வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

தம்மிடம் இப்போது நிறைய ஆயுத பலம் இருக்கிறது. அவற்றைக் கையாள வீரர்களும் இருக்கிறார்கள் என்று அரசுபெருமையாகக் கூறிக்கொள்கிறது.

அப்படியானால் புலிகள் ஒருதலைப் பட்சமாக யுத்தநிறுத்தம் செய்து அதன் அடிப்படையில் தாக்குதல்கள் அனைத்தையும் நிறுத்திக்கொண்டுள்ள இவ் வேளையில் அரச படைகள் ஆனையிறவைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபடாதிருப்பது ஏன் என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

புலிகள் இப்போது பலவீனம் அடைந்திருப்பதாகப் படைத்தரப்பில் கூறப்பட்டாலும் புலிகளின் தாக்குதல் திறனைக் குறைத்து மதிப்பிட்டு விஷப் பரீட்சையில் உடனடியாக இறங்கப் படையினர் தயாராக இல்லை.

அரசும் காலம் கனியும் வரை "சமாதானம்", "பேச்சுவார்த்தை" என்ற மந்திரங்களை உச்சாடனம் செய்துகொண்டிருக்கப் போகிறது. சர்வதேச சமூகம் எவ்வளவு காலத்துக்கு அந்த மந்திரத்தில் கட்டுண்டு இருக்குமோ!

## காண்டீபம்

புலிகளைப் பொறுத்தவரையில் தாம் கடந்த வருடம் டிசம்பர் 24ஆம் திகதியிலிருந்து ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் செய்து வருவதிலிருந்தே சமாதானத்தில் தமக்குள்ள ஆர்வம் எவருக்கும் எளிதில் புலப்படும் என்கின்றார்கள்.

நோர்வே நாட்டு விசேஷ தூதுவர் சொல்ஹெய்ம் கடந்த வருட இறுதியில் வன்னியில் பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர் புலிகளின் சமாதான ஆர்வத்தில்தாம் சந்தேகம் கொள்ளவில்லை என்றார். அதை அரசுக்கும் தெரிவித்தார்.

யாழ், மன்னார் ஆயர்கள் வன்னிக்குச் சென்று புலிகளுடன் கலந்துரையாடினார்கள். அவர்களும் புலிகளின் சமாதான ஆர்வத்தை அனைவருக்கும் அறிவித்தார்கள்.

தென்னிலங்கையிலிருந்து புலிகளைச் சந்திக்க வன்னி சென்ற மக்கள் குழுவும் புலிகளின் சமாதான ஆர்வத்துக்குச் சேர்ட்டிபிக்கேட் கொடுத்திருக்கிறது.


பிரபாகரன்

புலிகள்தாம் யுத்தநிறுத்தத்தை அனுஷ்டித்துவரும் வேளையில் அரசும் யுத்தநிறுத்தத்தை அறிவித்து பேச்சுவார்த்தைக்கு வரும் என்று நம்பினார்கள்.

அரசோ புலிகளின் யுத்த நிறுத்தத்தைப் புலிகளின் பலவீனத்தின் விளைவு என்றும் சர்வதேச சமூகத்துக்கு தம்மைச் சமாதானப் பிரியர்கள் என்று காட்டுவதற்கான கபட நாடகம் என்றும் கூறிக் கொச்சைப்படுத்தி வருகிறது. ஆங்காங்கே புலிகளின் நிலைகள் மீது தாக்குதலும் நடத்தி வருகிறது.

புலிகள் அதைப் பொறுத்துக் கொண்டு புதிய தாக்குதல்களை நடத்தாமல் தவிர்த்து வருகிறார்கள். அரசு எவ்வளவு ஆத்திர மூட்டினாலும் புலிகள் பொறுமை காத்துவருவது பெரிய காரியம் என்று பலரும் மெச்சுகிறார்கள்.

புலிகள் தாக்குதலைத் தொடங்கினால் சண்டை உக்கிரம் அடையும். தமிழ்ப் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதுவரை அவர்கள் பட்ட கஷ்டம் போதும். இனிமேலும் அவர்களுக்கு கஷ்டம் வரக் கூடாது என்ற நல்லெண்ணத்திலேயே புலிகள் போரை நிறுத்தி சமாதானம் ஏற்படுத்தி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆனையிறவைக் கட்டிக்காத்து வைத்திருக்கும் புலிகளுக்கு இன்று கூட யாழ் நகரைக் கைப்பற்றுவது ஒன்றும் இயலாத காரியம் அல்ல. அதனால் ஏற்படக்கூடிய அழிவை எண்ணித்தான் அவர்கள் யுத்த முனைப்பை விட்டுச் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தமிழ்ப் பொதுமக்களே கூறிக் கொள்கிறார்கள்.

ஆக சமாதானத்தின் விரோதிகள் யார் என்பதைக் கண்டு கொள்வதில் கஷ்டம் இருக்காது.

# அமெரிக்கத் தூதுவரின் யாழ் நகர அலட்டல்!

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் இம்மாதம் முதல் வாரம் யாழ்ப்பாணம் சென்று தமிழ் மக்கள் முன்னிலையில் அவர்களின் தாயகக் கொள்கை, தமிழீழக் கோரிக்கை பற்றி எல்லாம் அலட்டியிருக்கிறார். போர் நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தை பற்றியெல்லாம் கூறியிருக்கிறார்.

அமெரிக்க அரசாங்கத்தின் இலங்கைப் பிரச்சினைப் பற்றிய நிலைப்பாடு என்று கூறி அவர் தெரிவித்த கருத்துகளின் சாரம் வருமாறு:

போர் நிறுத்தப்பட வேண்டும்.

பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு கிடையாது பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும்.

தனிநாட்டுக் கோரிக்கையை அதாவது தமிழீழக் கோரிக்கையை நாம் நிராகரிக்கிறோம்.

புலிகள் இயக்கம் எங்களைப் பொறுத்த வரையில் ஒரு பயங்கரவாத இயக்கம்.

புலிகள் இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர்.

தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் சமத்துவமாகவும் மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடத்தப்பட வேண்டும்.

இலங்கையோ அல்லது இலங்கையின் எந்த ஒரு பகுதியோ எந்த ஒரு இனத்துக்கும் தனி உடைமை ஆகாது. (அதாவது தாயகக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை). பல இன, மத, மொழிகளைச் சேர்ந்த மக்கள் வாழும் நாடு இலங்கை.

இவ்வாறாக எல்லாம் அமெரிக்கத் தூதுவர் கூறியது இலங்கையின் உள் விவகாரத்தில் தலையீடு செய்தது ஆகாதா?

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இருந்த பிரிட்டிஷ் தூதர் கிளாட்ஸ்டன் தேர்தல் விவகாரங்களில் ஈடுபாடு கொண்டார் என்று குற்றம் சாட்டி இலங்கையிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார்.

அப்படியானால் அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ்...?

அவர் தமிழீழக் கோரிக்கையையும், தமிழீழத் தாயகக் கொள்கையையும் கண்டித்ததால் அது நல்லது தானே என்று அவர் செய்த தவறைப் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பலரும் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டார்கள். சிஹல உறுமய மட்டும் சிறிது உறுமி விட்டு அடங்கிப் போயிற்று.

ஆனால் இந்தியா அப்படி இருக்குமா என்பது தான் கேள்வி. இலங்கையில் அமெரிக்கா எந்த வகையிலும் கால்பதிப்பதை இந்தியா எப்பொழுதுமே விரும்புவதில்லை. அது தென்கிழக்கு ஆசியாவில் தனது சூப்பர் பவர் அந்தஸ்துக்கு பாதகமாக அமைந்து விடும் என்று இந்தியா அஞ்சுகிறது.

தூதுவர்களை விடுங்கள். கடந்த வருடம் நவம்பர் கடைசிவாரத்தில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீட்டர் ஹெய்ன் இலங்கை வந்திருந்தார். அவர் கூறிய சில கருத்துக்கள் தமிழ் மக்களுக்குச் சாதகமாக அமைந்து விட்டன.

அவர் பின்வருமாறு கூறியிருந்தார்: -

அரசும் புலிகளும் போரை நிறுத்திப் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். புலிகள் தமிழ் ஈழம் கோரினாலும் அதற்கு மாற்றீடாகப் பூரண சுயாட்சி கிடைக்குமானால் அதை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயார்.

கொலைகளைச் செய்தவர்களோடு பேசுவதா என்று எண்ணிக்கொண்டு இருந்தால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

பழையனவற்றை எல்லாம் மறந்து புது நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும். அதற்கு நோர்வே அனுசரணை வழங்க முன்வந்திருக்கிறது. பிரிட்டன் அதை வரவேற்கிறது. அழைத்தால் பிரிட்டனும் உதவத் தயார்.

சண்டை வெல்ல முடியாதது. பேச்சுவார்த்தைதான் பிரச்சினைக்குத் தீர்வைத்தரும். அந்தத் தீர்வில் இலங்கை ஒரே நாடு என்ற அரசின் நிலைப்பாடும் புலிகளின் சுயாட்சிக் கோட்பாடும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இப்படி அவர் கூறியதைக் கேட்டு பெரும்பான்மை இனத்தவர்கள் பலரும் நெருப்பெடுத்தார்கள்.

ஆனால் அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸ் கூறிய கருத்துக்களைக் கேட்டு உச்சி குளிர்ந்து இருக்கிறார்கள். என்னே விந்தை!

# திருமலைத் துறைமுகத்தில் பாரபட்சம், புறக்கணிப்பு

## தமிழ் பேசும் ஊழியர்கள் குமுறுகிறார்கள்

இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபையின் இயற்கைத் துறைமுகம் என்ற அந்தஸ்தைப் பெற்றது திருகோணமலைத் துறைமுகம். கடந்த ஆண்டு இது பெற்ற இலாபம் 5 கோடியே 40 லட்சம் ரூபா.

எமது நாட்டில் கூடுதல் வருமானம் பெற்றுத் தரும் நிறுவனங்களில் துறைமுகங்கள் அதிகார சபையும் ஒன்று. அந்த வகையில் துறைமுகங்கள் அதிகார சபையின் திருகோணமலை ஊழியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

1999 ஆம் ஆண்டு திருகோணமலைத் துறைமுகம் பெற்ற தேறிய இலாபம் 5 கோடியே 20 லட்சம் ரூபா ஆகும். கடந்த வருடத்தைவிட 20 லட்சம் ரூபா மேலதிகமாகக் கிடைத்துள்ளது. இந்த நிலையில் வருங்காலத்தில் இலாபம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாக ஊழியர்கள் கருதுகின்றனர். இந்த வருடம் ஜனவரி மாதம் மட்டும் திருகோணமலைத் துறைமுகம் பெற்ற இலாபம் 65 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய வருமானங்களை திருகோணமலைத் துறைமுகம் எவ்வாறு பெறுகின்றது ?

டோக்கியோ சீமெந்து லங்கா (தனியார்) நிறுவனம் தனது சீமெந்து உற்பத்திக்காக வெளிநாடுகளில் இருந்து மூலப் பொருட்களை இறக்குமதி செய்யும் போதும் –

எமது நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சீமெந்தை ஏற்றுமதி செய்யும் போதும்–

பிறிமா சிலோன் (தனியார்) நிறுவனம் கோதுமை மா உற்பத்திக்காக வெளிநாடுகளில் இருந்து கோதுமைத் தானியத்தை இறக்குமதி செய்யும் போதும்–

கோதுமை மா மற்றும் தவிடு போன்றவற்றை ஏற்றுமதி செய்யும் போதும் –

மீன்பிடித் துறைமுகத்தில் வெங்காயம், ஒடியல், புகையிலை போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்யும் போதும் – கட்டணம் அறவிடப்படுகிறது.

மாலுமிகளுக்கான கட்டணம், துறைமுகங்கள் அதிகார சபை வழங்கும் ஊழியர்களுக்கான கட்டணம், உபகரணப் பொருட்களுக்கான கட்டணம் என்பவற்றோடு கப்பல் தரித்து நிற்பதற்கான கட்டணமும் அறவிடப்படுகிறது.

திருகோணமலைத் துறைமுகத்தில் கப்பல் தரித்து நிற்கும் போது ஒரு நாளைக்குப் பெறப்படும் கட்டணம் ஒரு லட்சம் ரூபா ஆகும்.

இதனைவிட கப்பல்களுக்குக் குடி தண்ணீர் வழங்குவதன் மூலமும் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்குவதன் மூலமும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருளை இறக்குமதி செய்வதன் மூலமும் வருமானம் பெறப்படுகின்றது.

இவ்வாறு வருமானம் பெற்றுத் தரும் திருகோணமலைத் துறைமுகம் மத்திய அரசின் அல்லது தலைமைக் காரியாலயத்தின் பார்வையில் எத்தகைய இடத்தைப் பெற்றுள்ளதென்பதே முக்கிய கேள்வி ஆகும்.

விஞ்ஞானம் வளர்ந்து உச்சக் கட்டத்தில் இருக்கும் இந்தக் கால கட்டத்தில் இங்கு பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்கள் எல்லாம் பழையவையாகவே காணப்படுகின்றன. ஆனால் கொழும்பில் புதிதாக வடிவமைக்கப்பட்ட ஆவணங்களே புழக்கத்தில் உள்ளன.

கொழும்பில் உள்ள பழைய இருப்புக்கள் அனைத்தும் இங்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவை துறைமுக கமிஷன் இருந்த காலத்தில் தயாரிக்கப்பட்டவை. அதனால் இன்றைய புதிய நிர்வாகத்துக்குப் பெரிதும் இடைஞ்சலாக இருக்கின்றன.

கொழும்பில் ஒரு காசோலை அளவில் சம்பளப்பட்டியல் கணனியில் அச்சிடப்படுகிறது. ஆனால் இங்கு ஒன்றரை அடி நீளத்தில் கையெழுத்துப் பிரதி போல் சம்பளப் பட்டியல் வழங்கப்படுகின்றது. திருமலையில் அது இன்னும் கணனி மயப்படுத்தப்படவில்லை. நிர்வாகத்துக்குப் போதுமான ஆளணியும் இங்கில்லை.

இங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்படாததும் ஒரு குறையாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வளவு இலாபம் பெற்றாலும் 1998 ஆம் ஆண்டுக்குப் பிறகு இற்றைவரை இவர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். போதிய தொலைபேசி இணைப்புகளோ இயக்குதல் பகுதி ஊழியர்களுக்கான கட்டட வசதியோ இன்னும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. பிறிமா பாலத்தில் தரித்து நிற்கும் கப்பல்களில் வேலை செய்வதற்காகச் செல்லும் ஊழியர்கள் வேலை முடிந்ததும் மரங்களுக்குக் கீழேயும், பிறிமா களஞ்சிய அறைகளின் வெளித் தாழ்வாரத்தடியிலுமே உறங்க வேண்டி இருக்கின்றது.

பனியிலும் மழையிலும் இவர்கள் படும் துயரங்கள் சொற்களில் எழுத முடியாதவை.

இவை ஒருபுறமிருக்க துறைமுக அதிகார சபை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடும் காலாண்டுச் சஞ்சிகையில் தமிழ் ஆக்கங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைச் சொன்னால் நம்பமாட்டீர்கள்.

மொத்தம் 60 பக்கங்கள் கொண்ட சஞ்சிகையில் தமிழுக்கு வழங்கப்பட்டிருப்பது கேவலம் மூன்றே மூன்று பக்கங்கள் தான். அதிலும் ஆயிரம் தமிழ்க் கொலைகள். ஆங்கிலத்தில் இடம் பெறுகின்ற ஆக்கங்கள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்படுவது போன்று தமிழில் மொழிபெயர்க்கப்படுவதில்லை.

இதனால் துறைமுகங்கள் பற்றிய பல சிறந்த தகவல்களை தமிழ் வாசகர்களால் அறியமுடியாமல் போகின்றது.

கொழும்புத் துறைமுகத்தில் 20 சத வீதமும் திருகோணமலை, ஒலுவில் துறைமுகங்களில் 80 சத வீதமும் தமிழ்ப் பேசும் ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

மேற்படி பாரபட்சமும் புறக்கணிப்பும் ஒரு புறமிருக்க மறுபுறம் இவர்கள் மீது சந்தேக அலையும் எழுந்துள்ளது.

ஒரு நிறுவனத்தின் எந்தக் கிளையில் பணிபுரிந்தாலும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டை ஒரே மாதிரியாகத்தான் இருக்க முடியும். ஆனால் அத்தகைய தன்மை துறைமுக அதிகார சபையில் இல்லை. கொழும்புத் துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மஞ்சள் நிற அடையாள அட்டையும், திருமலைத் துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நீல நிற அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளன.

அதே போன்று ஏனைய துறைமுகங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் வெவ்வேறு நிறங்களில் அடையாள அட்டைகள் வழங்கப் பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

கொழும்புத் துறைமுகத்துக்கு ஏதாவது ஒரு அலுவலாகச் செல்லும் திருமலைத் துறைமுக ஊழியர் ஒருவர் உட்செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இங்கிருந்து செல்லும் போதே இதற்கு 'பாஸ்' எடுக்க வேண்டும்.

அதேவேளை, கொழும்பில் இருந்து திருமலைத் துறைமுகத்துக்கு வருபவர்களுக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதில்லை.

எவ்வளவுதான் நேர்மையாக நடந்தாலும் பல கோடி ரூபா இலாபத்தைப் பெற்றுக்கொடுத்தாலும் எங்கள் மீது பொறிக்கப்பட்ட கறை அழியப் போவதில்லை. எமது பகுதி துரித அபிவிருத்தியைக் காணப் போவதில்லை என்று திருகோணமலைத் துறைமுக ஊழியர்கள் குமுறுகிறார்கள்.

**எஸ். எஸ். ஆர்.**

# கிடைத்த வாக்குகள் 19 ஆயிரம்! ஆனால் வாழ்த்துக்கள் 42 ஆயிரம்!!

## உதவி கேட்டு வந்த அதிபர்களிடம் எம்.பி. தகவல்

சங்கர் என்றழைக்கப்படும் குணசேகரம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்தவர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் இவருக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 19 ஆயிரம். ஆனால் இவரது வெற்றி அறிவிக்கப்பட்டவுடன் இவரை மடல்கள் மூலமும் தொலைபேசி மூலமும் வாழ்த்தியோர் 42 ஆயிரம் பேராம்.

இந்தத் தகவலை குணசேகரம் எம்.பியே தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் கல்முனை, சம்மாந்துறைப் பகுதிகளில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் சிலர் குணசேகரம் எம்.பியைச் சந்தித்தனர்.

தமது பகுதிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அவர் உதவ வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.


அப்பொழுதுதான் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

"நீங்கள் கேட்கும் உதவிகளைச் செய்து தருவதற்கு நான் முழு முயற்சிகளையும் எடுக்கிறேன். உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியவை தான். ஆனால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நான் பெற்ற மொத்த வாக்குகள் 19 ஆயிரம். ஆனால் மாவட்டத்தில் இருந்து எனக்கு தொலைபேசி மூலமும் மடல்கள் மூலமும் கிடைத்த வாழ்த்துக்கள் 42 ஆயிரம். அதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது." என்றாராம் எம்.பி.

தமது சொந்த ஊரான ஆலையடி வேம்பில் கூடத் தமக்கு 25 சதவீத வாக்குகளேனும் கூடக் கிடைக்கவில்லை என்று அவர் கவலைப்பட்டாராம்.

உதவி கேட்டு வந்த அதிபர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.




# உவர் மலை சமாதானக் குழு வெறும் கண் துடைப்பா?

திருமலை, உவர்மலைக் கிராம சேவகர் பிரிவில் சமாதானக்குழு ஒன்று அண்மையில் அமைக்கப் பட்டது. குற்றங்களைத் தடுப்பதும் சமாதானத்தை ஏற்படுத்துவதுமே இந்தக்குழு அமைக்கப்பட்டதன் நோக்கம் ஆகும். சமாதானக் குழு சீராக இயங்க பொலிஸ் நிலையம் பொறுப்பாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறு குற்றங்கள் பற்றி விசாரிக்கவும் அவற்றுக்குத் தீர்வு காணவும் சமாதானக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொலிஸ் நிலையத்தினதும், நீதி மன்றத்தினதும் வேலைப்பழுவை சற்றுக் குறைக்கமுடியும் எனக் கருதப்படுகின்றது. பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்தும்படி பொலிசாரை சமாதானக்குழு வேண்டியுள்ளது.

அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் மூன்று மாத கால தற்காலிக அடையாள அட்டை வழங்கல். உவர்மலைப் பகுதியில் மாவட்ட அடையாள அட்டை எடுக்காதவர்களுக்கு மீண்டும் அதனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல். உவர்மலைப் பகுதியில் சிறு சிறு அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்காக ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்தல், சமாதானக் குழு அங்கத்தவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கல்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சமாதானக்குழுவுக்கான தலைவரும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சமாதானக் குழு உருப்படியாக எதையாவது செய்யுமா? அல்லது வெறும் கண்துடைப்பா? விரைவில் தெரியவரும்.



# விஜய், ரஜினி வழியல்ல தன் வழி தனிவழி என்கிறார்

'ப்ரெண்ட்ஸ்' படத்தில் தன் நண்பன் சூர்யாவுடன் நண்பனாகவே நடித்திருக்கிறார் இளைய தளபதி விஜய். ப்ரெண்ட்ஸ்' படமும் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

இந்தச் சந்தோஷத்துடன் 'பத்ரி'யில் நடித்து வருகிறார். கிடப்பில் போடப்பட்டிருந்த 'உதயா'வும் தூசு தட்டப்பட்டு படப்பிடிப்பு நடந்து வருகிறது.

கூடவே 'ஷாஜஹான்' என்ற புதிய படத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இதில் இவருக்கு ஜோடி ரிச்சாபலேட். மகன் பிறந்த சந்தோஷம் +கைவசம் படங்கள் என்று இரட்டை சந்தோஷத்தில் இருக்கும் விஜய்யை 'பத்ரி' படப்பிடிப்பில் சந்தித்தபோது இயல்பாக வரவேற்றார்.

**வணக்கம் ஸார்! ப்ரெண்ட்ஸ் வெற்றியடைந் திருக்கிறது. வாழ்த்துக்கள்.**

விஜய்:- வணக்கம், நன்றி.

**கே:-சமீபகாலங்களாக பிறமொழிப் படங்களில் நடிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறீர்கள் என்ற குறை இருக்கிறதே?**

ப:- 'குஷி'க்கு முன் ஏற்பட்ட இடைவெளி என்னைச் சிந்திக்க வைத்தது. நல்ல கதையம்சமுள்ள படங்களில் நடிக்கிறேன். அது எந்த மொழிக்கதை என்று பார்ப்பதில்லை.

**கே:-அப்படியானால் இனி நீங்கள் நடிக்கும் படங்கள் அனைத்தும் பிறமொழிப் படங்களாகத் தான் இருக்குமா?**

ப:-அப்படியில்லை.எனது 'ப்ரியமானவளே', 'ப்ரெண்ட்ஸ்' இரண்டும் பிறமொழிக் கதைகள். இப்போது நடித்து வரும் 'பத்ரி'யும் பிறமொழிக்கதை. இவற்றை வைத்துத் தான் இப்படியொரு கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ஒரு படம் வெற்றிபெறக் கதை முக்கியம். அப்படிக் கதையம்சமுள்ள படம் வேறு மொழியில் இருக்கிறது என்பதனால் அதைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

**கே:-சமீபத்தில் கல்யாண மண்டபம் திறந்திருக் கிறீர்கள். ரஜினி வழியைப் பின்பற்றுகிறீர்கள் என்று சொல்லலாமா?**

ப:- இல்லை. எனக்கென்று ஒரு தனி வழி உண்டு. அதில் நான் வெற்றிகரமாகப் பயணம் செய்து கொண்டிருக்கிறேன்.

**கே:- அஜித் 'சிட்டிசன்' படத்தில் ஏழு கெட்டப்களில் நடித்து வருகிறார். 'சாக்லெட்' படத்தில் பிரசாந்தும் வெவ்வேறு கெட்டப்களில் நடிக்கப் போகிறார்.**

**உங்களுக்கு அப்படி வேறுபாடான பாத்திரங்களில் நடிக்கும் எண்ணம் இல்லையா?**

ப:-ஆசை இருக்கிறது. ஆனால் அதற்காக அஜித், பிரசாந்த் போல என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். என் ஸ்டைலில் பல கெட்டப்களில் நடிக்கும் ஆசை இருக்கிறது.

**கே:-'ப்த்ரி'யில் நடித்துக் கொண்டிருக் கிறீர்கள் அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன் ?**

ப:-ரசிகர்களைத் திருப்திப் படுத்தப்போகும் விஜய் படம் அது.

**கே:- மென்மையான காதல் கலந்த அக்ஷன் கதைகளைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். இப்படியே தொடர்ந்து நடித்தால் விஜய்க்கு என்று சில பாத்திரங்கள் முத்திரை குத்தப்பட்டு விடுமே?**

ப:-உண்மைதான். ஆனால் ரசிகர்கள் என்னைப்பார்க்க விரும்பும் படத்தில் தானே நடிக்க முடியும். அடுத்து நடிக்கப் போகும் 'ஷாஜஹான்' காதல் கதை.

**கே:-'பத்ரி' படத்தில் சிம்ரனின் தங்கை மோனலுடன் கவர்ச்சிக்காட்சியில் நடிக்கிறீர்கள். 'உதயா'வில் அவரின் அக்கா சிம்ரனுடன் டூயட் பாடுகிறீர்கள். இதை எப்படி உணர முடிகிறது?**

ப:- நான் ஏற்கனவே சிம்ரனுடன் 'துள்ளாத மனமும் துள்ளும்', 'ப்ரியமானவளே' படங்களில் நடித்திருக்கிறேன்.

எல்லாமே நடிப்புத்தானே. நடிப்பு என்று வந்து விட்டால் கதாபாத்திரங்கள் தான் நினைவில் நிற்கும். உறவுகள் அல்ல. எனக்கு அந்தப் பக்குவம் இருக்கிறது. அதனால் தான் அம்மாவுடன் சேர்ந்து காதல் பாட்டுப்பாடக் கூட என்னால் முடிந்தது. மனதைத் தூய்மையாக வைத்துக் கொண்டால் நோ புராப்ளம்.

**கே:-'பத்ரி' படத்தில் 'தூள் கிளப்பும் சண்டைக் காட்சிகள்' அதிகமாமே?**

ப:-ஆமாம். குத்துச் சண்டை வீரனாகவும் அப்பாவி இளைஞனாகவும் நடித்து வருகிறேன்.

**கே:-ஷூட்டிங்குகளுக்காக பல நாடுகளுக்குச் சென்று வந்திருப்பீர்கள். உங்களுக்குப் பிடித்த நாடு எது?**

ப:- லண்டன். இந்த நாட்டுக்கு ஒரு சிறப்பு உண்டு. அது எனது மனைவி சங்கீதா வசிக்கும் நாடு. அதனால் மட்டுமல்ல அழகான நகரம் அது. இங்கு நான் இருக்கும் நாட்கள் சந்தோஷமான நாட்கள்.

**கே:- இந்தக் கால யுவதிகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ப:- நவீன நளாயினிகள்..

**கே:- தாய், தாரம், காதலி இவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டியது?**

ப:- தாயிடம் அன்பு, தாரத்திடம் பரிவு, காதலியிடமிருந்து கனவு, கவிதைகளைக் கற்றுக் கொள்ளலாம்.

**கே:-பெண்களே இல்லாத நகரம் எப்படிப்பட்டது?**

ப:- நரகம்.

**கே:-வாழ்க்கையில் வெற்றி அடையத் தேவையானது?**

ப:- நம்பிக்கை, கடின உழைப்பு.

**கே:-ஆசை, பேராசை வித்தியாசத்தைக் கூறமுடியுமா?**

ப:- உழைத்து உயர வேண்டும் என்று நினைப்பது ஆசை. குறுக்கு வழியில் சீக்கிரமே பணக்காரனாக வேண்டும் என்று நினைப்பது பேராசை.

**கே:-அறிவியல் வளர்ச்சி சினிமாவில் ஆக்கத்திற்கா! அழிவிற்கா! பயன்படுத்தப்படுகிறது?**

ப:- இரண்டிற்குமே பயன்படுகிறது.

**கே:- நீங்கள் சாதனையாக நினைப்பது?**

ப:- பல்லாயிரக்கான ரசிகர்கள் என் மேல் வைத்துள்ள நேசத்தை.

ஷாம்



## நட்சத்திர மறுபக்கம்



# நடன மாஸ்டரின் லீலைகள் அம்பலம்

ஒரு காலத்தில் காதலாவது கத்தரிக் காயாவது என்று மறுத்து வந்தவர் 'ரன்' நடிகை. ஆனால் சமீப காலமாக ''நான் நடன மாஸ்டரைக் காதலிக்கிறேன். திருமணமும் செய்யப்போகிறேன்'' என்று உறுதியாகக் கூறிவருகிறார்.

இதற்கு அடிப்படையான காரணம் நடன மாஸ்டரின் மன்மத லீலை தான் என்ற விஷயம் இப்போது அம்பலத்திற்கு வந்திருக்கிறது.

நடன மாஸ்டரும் நடிகையும் ஒருவரை ஒருவர் காதலித்ததும் நடன ஒத்திகைகளில் நெருங்கிப் பழகியதும் அவரது வீட்டிற்குத் தெரிய வந்தது.

விஷயம் தெரிந்ததும் வீட்டார்கள் கொதித்தெழுந்தனர். ஆனாலும் காதலர்கள் தங்களது காதலில் உறுதியாக இருந்தனர்.

சிறிது காலம் செல்ல ஹீரோ வாய்ப்புகள் நடன மாஸ்டரைத் தேடி வர ஆரம்பித்தன. இதனால் ஹீரோ போதை தலைக் கேற 'ரன்' நடிகையை ஓரங்கட்டப் பார்த்திருக்கிறார் மாஸ்டர். விடுவாரா நடிகை! பொங்கி எழுந்தவர் பத்திரிகைகளுக்குக் காதலைப் பகிரங்கப்படுத்தி விட்டார். தன் மன்மத லீலைகள் அம்பலமாகி விட்டதனால் ஆடிப் போயிருக்கிறார் நடன மாஸ்டர்.

ஆண்டுக் கணக்கில் திரை நட்சத்திரங்களை ஆட்டி வைத்துக் கெண்டிருக்கும் நடனக் குடும்பத்தையே ஆட்டங்காண வைத்து விட்டார் 'ரன்' நடிகை.




கிழக்கு

| | | |
|---|---|---|
| புதன் மரகதம் Emerald | சுக்கிரன் வைரம் Diamond | சந்திரன் முத்து Pearl |
| குரு புஷ்பராகம் Y. Sapphire | சூரியன் மாணிக்கம் Ruby | செவ்வாய் பவளம் Coral |
| கேது வைடூரியம் Catseye | சனி நீலம் Sapphire | ராகு கோமேதகம் Cinnamon |

வடக்கு · தெற்கு · மேற்கு

**Navaratnam**

இங்கு நவகோள்களின் அம்சமான நவரத்தினங்களைப் பற்றிய விபரங்கள் உள்ளன. பிறப்பு எண்ணையும் கூட்டு எண்ணையும் வைத்து இலவசமாக கணித்து கூற அவரவர்க்கு ஏற்ற ரத்தினங்களை அணிந்து அதற்கேற்ப பலன்களையும் நன்மைகளையும் அடையலாம். நன்றி.

ARUL jewellers அருள் ஜுவலர்ஸ்

3, Sea Street, Colombo-11. T.P. 436331

மற்றவர்கள் பேசுவதை நாம் செய்கின்றோம்

இலவசம் முதல் பத்து வாடிக்கையாளர்களுக்கு அழகிய பென்டன்ட்





'அல்லி அர்ஜுனா' படத்தின் நாயகி ரிச்சா பலேட் மும்பையைச் சேர்ந்தவர். காதல் காட்சிகளில் நடிப்பதற்குப் பயப்படுகிறாராம்.

கவர்ச்சிக் காட்சிகளில் அசத்தும் ரிச்சாவுக்கு காதல் பயமா என்று கேட்டால் "சினிமாவில் அணியும் ஆடைகளைப்போன்றே நிஜ வாழ்க்கையிலும் அணிவதனால் ஆடைக் குறைப்பினைப்பற்றிக் கவலையில்லை.

ஆனால் காதல் காட்சிகளில் நடிக்கும் போதுதான் பயமாக இருக்கிறது " என்று கூறுகிறார்.

# கவர்ச்சி புயலுக்கு காதல் பயம்

# ரசிகர்களை காதலர்களாக்கிய விஜய்யின் 'ப்ரியமானவளே' படம்

படத்தைப் பார்த்துப் பிரிந்த தம்பதியினர் ஒன்று சேர்ந்ததைப்போல் பிரசாந்தின் 'பிரியாத வரம் வேண்டும்' படத்திலும் நடைபெற்றிருக்கிறது.

திருச்சியைச் சேர்ந்த சரவணனும் அமுதாவும் நண்பர்கள். 'பிரியாத வரம் வேண்டும்' படத்தைப் பார்த்த பின்னர் இவர்களது நட்பு காதலாகி யிருக்கிறது. சாதித்தடை குறுக்கே நிற்கவே, சென்னை வந்து 'ஸ்டார்' படப்பிடிப்பில் பிரசாந்தைச் சந்தித்திருக்கிறார்கள்.

அவர்களது பிரச்சினைகள் முழுவதையும் கேட்டறிந்தார் பிரசாந்த். பின்னர் அவர்களது பெற்றோரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விஷயத்தை எடுத்துக் கூறியிருக்கிறார்.

இறுதியில் பெற்றோர்களின் சம்மதத்துடன் காதலர்களுக்குத் திருமணம் செய்து வைத்திருக்கிறார்.

(ஓ! பிரியாத வரம் வேண்டும் என்பது இது தானோ!)





# ஜோதிகாவின் லேட்டஸ்ட் காதல்

லேட்டஸ்ட்டாக ஹொலிவூட் நடிகர் 'பென்ட்லி மிட்சம்'உடன் நெருங்கிப் பழகுகிறார் ஜோதிகா.

படப்பிடிப்பில் இருவரும் 'திக்' ப்ரெண்ட்ஸ் ஆகி விட்டார்கள்.

இருவரது விளையாட்டுக்களாலும் படப்பிடிப்புத்தளமே கிளுகிளுப்புத் தளமாக மாறிவிட்டதாம்.

இது இப்படி இருக்கையில், தன்னை 'வாலி'யில் சோனாவாக அறிமுகப்படுத்திய சூர்யாவுடனும் நட்பைப் புதுப்பித்துக் கொண்டுள்ளாராம்.

# வரவிருக்கும் வசந்தங்கள்

அசத்தல் : லூட்டியைத் தந்த கையோடு மிஸ்டர் நாரதரில் கலகமூட்டி வருகிறார் சத்யராஜ்.

இவர் அடுத்து நடிக்கப்போகும் படம் 'அசத்தல்'.

கதாநாயகியாக ரம்யாகிருஷ்ணன் நடிக்கிறார்.

'லேடி கப்டன்': 'பாரத ரத்னா', 'கமாண்டர் ஜெயந்தி' படங்களைத் தொடர்ந்து லேடி சூப்பர் ஸ்டார் விஜயசாந்தி நடிக்கும் படம் இது.

வழக்கம் போலவே அக்ஷனில் வெளுத்துக் கட்டப்போகிறாராம் விஜயசாந்தி.

# திரை மறைவில்

கோலிவூட்டின் புதிய இளமை வரவு இந்த நடிகை. 'ரன்' நடிகையின் தங்கை என்பது தான் இவரது தற்போதைய முகவரி.

ஒரு பார்வையே போதுமென்று சொல்லும் படத்தில் லவ்வர்ஸ் டேயின் நாயகனுடன் சேர்ந்து நடித்து வருகிறார்.

லவ்வர்ஸ் டேயுடன் காணாமல் போயிருந்த நாயகனைத் தேடிப் பிடித்து நாயகனாக்கி இருக்கிறார்கள்.

இது இப்படியிருக்க முதற் சந்திப்பிலேயே வாரிசு நடிகைக்கும் நாயகருக்குமிடையே காதல் தீ பற்றிக் கொண்டு விட்டதாம்.

ஷூட்டிங்கை மறந்து விட்டு கிளிகள் ஜோடியாகத் தனிமை தேட ஆரம்பித்து விட்டனவாம். நொந்து போயிருக்கிறார் தயாரிப்பாளர்.

**

டிஸ்கோ சாந்தியின் இதயத்தைப் பறித்தவர் தயாரிக்கும் படத்தில் (தெலுங்கு) நடித்து வருகிறார் மடிப்பு அம்சா எனப் பெயரெடுத்த விசித்திர நடிகை.

படத்தின் ஸ்டண்ட் மாஸ்டருடன் நடிகை ஒத்துழைக்க மறுத்து விட்டாராம். அதனால் நடிகையை அறையும் காட்சியில் உண்மையிலேயே ஓங்கி அறைந்து பழி தீர்த்துக் கொண்டாராம் ஸ்டண்ட் மாஸ்டர்.

டேக் ரீடேக் என மாறி மாறி ஸ்டண்ட் நடிகர் அறைந்து கொண்டிருந் திருக்கிறார். பொறுத்துப் பார்த்து முடியாத பட்சத்தில் நடிகை தான் திருப்பி அறைந்து தன் கைவரிசையைக் காட்டியிருக்கிறார். அத்தோடு விடவில்லை நடிகை. நடிகர் சங்கத்தில் முறை யிட்டிருக்கிறார்.

**

'அலைபாயுதே'யை அடுத்து மின்னலைத் தெரிய வைத்த மாதவ நடிகர் 'ஜோதி' மயமான நடிகையுடன் சேர்ந்து 'டும் டும்' கொட்டி வருகிறார்.

படத்தின் தயாரிப்பாளரான அழகான பெருமாளுக்கும் மாதவ நடிகருக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாம்.

**



மிஸிஸ் நாரதராக நடித்த 'உன்னி' நடிகை புராமிஸ் கிங் நடிகரோடு ஒட்டுண்ணியாக ஒட்டிக் கொண்டு விட்டாராம். இப்போது புராமிஸ் கிங்கின் முதல் வேலை அம்மணிக்கு சிபாரிசு செய்வது தானாம்.

**

தொடையழகைக் காட்டி முன்னேறிய நடிகை கட்சியொன்றில் சேரப்போகிறார்.

# சின்னச்சின்ன ஆசை..

* மும்தாஜூக்கு ஒரு படத்திலாவது அஜித் துடன் சேர்ந்து நடித்து விட வேண்டுமாம்.

* நடிப்பதை விட வசுந்தராவிற்கு பாடுவதிலேயே அதிக இன்ரஸ்ட். நாள் முழுவதும் பாடிக் கொண்டிருக்க வேண்டும். என்பது அவரது சின்னச்சின்ன ஆசை யாம்.

* "எப்படியாவது நடிச்சு நல்ல ஆர்ட்டிஸ்ட் என்று பெயரெடுக்கணும் " இது மீண்டும் நடிக்க வந்த லட்சுமியின் மகள் ஐஸ்வர்யா வின் ஆசை



# முரளிக்கு மும்தாஜ் காதல் அழைப்பு

மலையும் மடுவும் நிறைந்த இருட்டான பகுதி! மலையில் இருந்து துள்ளி விழும் அருவி அருகே காட்டு பங்களா! அதன் உள்ளே முரளி துப்பாக்கியுடன் நுழைய,தீவிரவாதியைத்தேடி வந்தவரின் கண்களில் அகப்பட்டார் காதல் பைங்கிளி மும்தாஜ். அவர் காதல் மயக்கத்துடன் முரளியை நோக்கி " வாடா வாடா பையா..நான் வாட்ட சாட்டமான ஆளு...என்று பாடியபடி காதல் அழைப்பு விடுக்கும் பாடல் காட்சியொன்று ' சொன்னால் தான் காதலா' படத்திற்காக அண்மையில் படமாக்கப்பட்டது.

இப்படத்தை சிம்பு சினி ஆர்ட்ஸூக்காக டி.ராஜேந்தர் தயாரிக்கிறார்.



# சுவாவுக்கு சுஜாதா பாராட்டு

சுவலட்சுமி தன் பெயரில் ஒரு வெப்சைட்டை உருவாக்கியிருக்கிறார்.

இதை எதேச்சையாகப் பார்த்திருக்கிறார் எழுத்தாளர் சுஜாதா.

வெப்சைட்டுக்குள் திறமைகள் பளிச்சிட்டதைக்கண்டிருக்கிறார்.

ஒரு நடிகைக்குள் இத்தனை திறமையா? என்று மனந்திறந்து பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.



# கார்த்திக்கின் ஓயாத அலைகள்!

" என் அலை எப்பவுமே ஓய்ந்ததில்லை. மிதமிஞ்சின உச்சத்தில் இருந்ததுமில்லை. தொலைந்து போனதுமில்லை. நான எப்பொழுதும் ஒரே மாதிரியானவன். ஒரு படமும் இல்லாதது போன்று இருக்கும். பிறகு பார்த்தால் ஒரே சமயத்தில் நாலைந்து கார்த்திக் படங்கள் வெளியாகி யிருக்கும். இதைப்பற்றி நான் பெரிதாகக் கவலைப் படுவதில்லை" என்கிறார் கார்த்திக் லேசான சிரிப்புடன்.


# RTK GROUP

57, 57/1, Manning Place, Colombo-06. Tel: 505059, 074-515083


**Video Vision**
*Tamil, English movies, Tamil Drama Cassettes, VCDs & Audio Cassettes*
57, 57/1, Manning Place, Colombo-06. Tel: 505059.

**New Branch**
*Tamil, English, Hindi Movies, Tamil Drama Cassettes, VCDs & Audio Cassettes*
59, Hampden Lane, Colombo-06. Tel: 074-516240

**Hardware Stores**
*Cement, Lime, Asbestos, Steel & Building Materials*
57, Manning Place, Colombo-06. Tel: 597677

**Communications**
*Local, IDD, Fax, Photocopy & Connecting Calls*
57A, Manning Place, Colombo-06. Tel: 074-519506, 074-517630

**Transport Services**
*Vans, Lorries. Marine Transport from Colombo to Jaffna and back.*
334, Wolfendhal Street, Colombo-13. Tel: 074-517631, 01-597677



கதவு திறக்கப்பட்டது. மின்னல் வேகத்தில் அவளை உள்ளே இழுத்தான் பெக்கர். அவளது உடைகள் கிழித்தெறியப்பட்டன. என்ன நடக்கிறது என்பதை அவள் நிதானிக்க முன்னரே பெக்கரின் கூர்மையான பற்கள் அவளின் குரல்வளையைக் கடித்துத் துண்டாடி விட்டன. கழுத்தறுபட்ட சேவலாக அவள் துவண்டு விட்ட போது வழிந்தோடிய குருதியை 'சர்...சர்... சர்'என உறிஞ்சிக் குடித்தான் அவன்.

# பனிமலை மீதினிலே...

வீட்டின் கதவை பெக்கர் தள்ளினான். கிரீச்சென அது திறந்து கொள்கிறது. வெளவால்கள் 'பட பட'வென சிறகடிக்கின்றன. 'கீச் கீச்'என்ற அலறல்களுடன் அவை மோதிக் கொள்கின்றன. வீட்டினுள் கப்பிக் கிடக்கும் இருள் இரத்தத்தை உறைய வைக்கிறது.

தட்டுத் தடுமாறி நடந்து சென்று சுவிட்சைப் போட்டான் பெக்கர். சிலந்தி வலைப் பின்னலுக்குள் மறைந்து கிடக்கும் மின்குமிழ் 'பளிச்'சென எரிகிறது. மங்கலான மஞ்சள் வெளிச்சம், பறந்து கொண்டிருக்கும் வெளவால்களின் நிழல்கள் சுவர்களில் பூதாகரமாகத் தெரிகின்றன.

50 வயதைக் கடந்து விட்டாலும் அவன் அழகாகத் தோன்றினான். மூன்று வருடங்களுக்குப் பின்னர் அவன் அன்று வீடு திரும்பியிருந்தான். 20 நண்பர், நண்பிகளுடன் மலைக்கு தங்கம் தேடிச் சென்று இப்பொழுது தனி ஆளாகத் திரும்பியிருந்தான்.

''ஹலோ! பெக்கர் எப்படிச் சுகமா? ரொம்பக் காலத்திற்குப் பின்னர் வந்திருக்கிறாய். உள்ளே வரட்டுமா?''

அவனுடைய பழைய செல்லக் காதலி ரோஷியின் குரல் வாசலில் கேட்கிறது. அவன் வந்ததும் வராததுமாக அவள் தேடிவந்து விட்டாள்.

பதிலொன்றும் உள்ளேயிருந்து வரவில்லை. பெக்கர் குதிரை போல் கனைத்தான். சரி சரி உள்ளே வா என்பது போல் அது ஒலித்தது.

ரோஷி உள்ளே போகவில்லை. வெளியே நின்றவாறு ''மலையில் தங்கம் கிடைத்ததா?'' என்று கேட்டாள். குரலில் ஆர்வம் தொனித்தது. ''அதுசரி, நீங்கள் இருபது பேர் மலைக்குப் போனீர்களே, அவர்கள் எல்லாம் எங்கே.?''

ரோஷி முடிக்கவில்லை. திடீரென பெக்கர் அவள் முன் தோன்றினான். கண்கள் நெருப்புத் துண்டுகளாகக் கனல்கின்றன. அவளுடைய பிடரியைச் சுற்றி வளைத்து வீட்டினுள் இழுத்தான். கிரீச்சென நகர்ந்த கதவு டமாரென மூடுகிறது.

''ஓ ஜீசஸ்!'' என்ற கதறல் வீட்டினுள் கேட்கிறது. பெக்கர் கொடுத்த மண்வெட்டி அடியில் ரோஷியின் மண்டை பிளந்து விட்டது. மூளை சிதறித் தெறிக்கிறது. வெளவால்களின் அலறல்கள் வெருண்டோட வைக்கின்றன. அவை ரோஷியின் சிதறிய மூளையை விழுங்குவதற்காக சண்டை பிடிக்கின்றன.

* * *

பெக்கர் திரும்பி விட்டான் என்ற செய்தி கேட்டு அவனுடைய பல நண்பர்கள் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். ''20 பேர் மலைக்குப் போனீர்களே தங்கம் கிடைத்ததா?'' அவர்கள் ஆர்வத்துடன் கேட்டார்கள்.

இல்லையென்று பெக்கர் தலை அசைத்தான். தனது மஞ்சள் நிறமான பற்களை முழுவதுமாக வெளியில் இளித்துக் காட்டிய வண்ணம், தாடியை வருடி வருடி விட்ட வண்ணம், தன்னைத் தவிர எல்லோருமே பட்டினியால் செத்து ப் போனார்கள் என்று பதில் அளித்தான்.

"மலை உச்சியில் பனி கொட்டியதும் நாம் சிதறி விட்டோம். முழுமலையிலுமே பனி உறைவு ஏற்பட்டதும் ஆளுக்கொரு திசையில் பிரிந்து விட்டோம். எவ்வளவு காலம் தான் அலைந்து திரிவது? சாப்பிடுவதற்கு கொஞ்சமாவது உணவு கிடைக்கவில்லை. இப்படி 19பேரும் பரலோகம் போய்ச் சேர்ந்து விட்டார்கள். நான் எப்படியோ தப்பி வந்து விட்டேன்.''

அவன் சொல்வதை அனைவரும் திகைப்புடன் கேட்டார்கள். 'ஐய்யய்யோ என்ன பரிதாபம்' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்கள்.

''பெக்கர் அடுப்பில் என்ன கறி வைத்திருக்கிறாய் வாசம் மூக்கைப் பிய்த்துக் கொண்டு வருகிறதே!'' என்று கேட்டான் ஒருவன்.

''அதற்கென்ன பெரிய விருந்தொன்றுக்கே கறி இருக்கிறது. எல்லோரும் சாப்பிடலாம்'' என்றான் பெக்கர். அவனுடைய சிரிப்பு அச்சத்தை ஏற்படுத்துகிறது.

ஆற்றங்கரையில் நெருப்பு மூட்டப்பட்டது. அனைவரும் அதைச் சுற்றி அமர்ந்து கொண்டார்கள். விருந்து ஆரம்பமானது. ''அடடா பிரமாதம்! பிரமாதம்! எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஆரவாரஞ் செய்கிறார்கள். கறியின் சுவை அனைவரையும் ஆட்டங்காண வைக்கிறது.

அந்தக் கூட்டத்தில் இளம் மங்கை ஒருத்தி இருந்தாள். நல்ல சதைப்பிடிப்பானவளாக அவள் காணப்பட்டாள். பெக்கரின் பார்வை அடிக்கடி அவள் மீது விழுந்தது. அவளை பார்க்கும் போதெல்லாம் பெக்கர் பெருமூச்சு விட்டான். அவள் கூட பெக்கரின் அழகான தோற்றத்தில் தன்னை இழந்து விட்டிருந்தாள். அவன் பார்க்கும் போதெல்லாம் பாம்புக் குட்டியைப் போன்று நாக்கை வெளியில் நீட்டி நீட்டி ஆட்டிக் காட்டினாள்.

* * *

பெக்கர் அதிகமாக வெளியுலகில் நடமாடுவதில்லை. சில நாட்கள் மொந்த மொந்தக் குடித்துவிட்டு ஆற்றங்கரையில் மல்லாக்காக விழுந்து கிடப்பான்.

ஒரு நாள்

அந்த இளம் பெண் அவனைத் தேடி வந்துவிட்டாள். பெக்கரின் வீட்டுக் கதவை டக் டக்'கெனத் தட்டினாள்.

பெக்கரின் வெறி உமிழும் சிவப்புக் கண்கள் கதவிலிருந்த ஒரு சிறு துவாரத்தின் வழியாக அவளைப் பார்த்தன. அவன் கைகால்களில் விதிர் விதிர்ப்பு, வாயில் எச்சில் ஊறலெடுக்கிறது.

கதவு திறக்கப்பட்டு மின்னல் வேகத்தில் அவள் உள்ளே இழுத்தெடுக்கப்பட்டாள். 'சறேல் சறேல் என உடைகள் கிழித்தெறியப்பட்டன. என்ன நடக்கிறது என்பதை நிதானிப்பதற்கு முன்னரே பெக்கரின் கூர்மையான பற்கள் அவள் குரல்வளையைக் கடித்துத் துண்டாடி விட்டன. கழுத்தறுபட்ட சேவலாக அவள் துவண்டு விட்ட போது வழிந்தோடிய குருதியை 'சர்சர் சர்'ரென உறிஞ்சிக் குடித்தான். மார்பகத்தின் காம்புகளைக் கடித்தான்.

இளம் மான் ஒன்றின் இறைச்சியை புலியொன்று கடித்துக் குதறுவது போன்ற அந்தக் காட்சியை இரு சிறுவர்கள் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். திகிலினால் இரத்தம் உறைந்து போன அவர்கள் தலைதெறிக்க ஓடி ஊர் மக்களுக்கு நடந்த சம்பவங்களைச் சொன்னார்கள். ஊர் திரண்டு விட்டது. கம்பும் தடியுமாக கூட்டம் புறப்பட்டு வந்து விட்டது. பெக்கரின் வீட்டை அக்கூட்டம் முற்றுகையிட்ட போது அப்பெண்ணின் உடல் அடுப்பில் 'கத கத'வென கொதித்துக் கறியாகிக் கொண்டிருந்தது. தலை மட்டும் அச்சாறு செய்வதற்காக ஒரு பாத்திரத்தில் பக்குவமாக வைக்கப்பட்டிருந்தது.

பெக்கரை உயிருடன் பொலிஸ் நிலையம் கொண்டுவர பெரிய கஷ்டமாகிவிட்டது. ஒரு பெரிய அதிரடிப் பொலிஸ் படையே மக்களோடு போராடி அவனை மீட்க வேண்டியிருந்தது.

1873ஆம் ஆண்டில் அமெரிக்காவில் இச்சம்பவம் நடைபெற்றது. நீதிமன்றத்தில் அவன் சொன்ன விசயங்கள் அனைவரையும் திகிலடையச் செய்தன.

மலைக்கு தங்கம் தேடிப் போனார்கள் அல்லவா? அந்தக் கதையைத்தான் அவன் சொன்னான்.

மூன்று மாத காலம் அவர்கள் அனைவரும் ஒன்றாக இருந்தார்கள். அதன் பின்னர் பனி கொட்டத் தொடங்கி விட்டது. கையிலிருந்த உணவும் முடிந்து விட்டது. மலைக்காட்டில் பனிக்கட்டிகளைத் தவிர எதுவும் உணவாகக் கிடைக்கவில்லை. மலைக்குச் சென்ற 20 பேரில் சுவான் என்பவனும் இருந்தான். நல்ல சதைப் பிடிப்பான கொழுத்த மனிதன் அவன். உற்சாகமில்லாதவன். நேரங் காலமில்லாமல் சதா குறட்டை விடுபவன். ஏதாவது ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கொண்டிருப்பான்.

நெருப்பை மூட்டி அதில் குளிர்காய்ந்து கொண்டிருந்த அனைவரையும் கொடூர பசி ஆட்கொண்டிருந்தது. இரண்டு நாட்களாக ஒன்றுமில்லை.

பெக்கர் தனிமையில் யோசனையில் ஆழ்ந்து போயிருந்தான். சுவானின் கொழுத்த, சிவப்பு நிறமான சதை அவனை வெறிகொள்ளச் செய்தது. எவருமே எதிர் பாராவண்ணம் சுவானை ஒரே வெட்டாக வெட்டி பெருகியோடிய இரத்தத்தை பெக்கர் 'மளமள'வெனக் குடித்தான். அனைவரும் பேயறைந்தாற் போல் பார்த்துக் கொண்டிருக்க 'சதக் சதக்'கென பல துண்டுகளாக அவன் உடலை வெட்டி நெருப்பில் இட்டுக் கறியாக்கி எல்லோருக்கும் பங்கிட்டான்.

அவன் அந்தக் கதையை சொல்லி முடிக்கவும். 'ஜீசஸ்' என நீதிமன்றத்தில் பெருங் கதறல் எழுந்தது. ''கடந்த மூன்று வருடத்தில் மிகுதியான 18 பேரையும் நான் கொன்று தின்று விட்டேன்.'' என்று அவன் மிகவும் அமைதியாகச் சொன்னான்.

மறுபடியும் ஜீசஸ் என்ற அலறலில் நீதிமன்றம் அதிர்ந்தது. ஆனால் அந்தப் பேய் மனிதனோ தனது மஞ்சள் பற்களைக் காட்டி இளித்துக் கொண்டிருந்தான்.



# ஜெயலலிதாவின் கூட்டணிக் கட்சிகள் தமிழகத்தில் ஒட்டு; புதுவையில் வெட்டு!

தமிழக சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா அணியில் சேருவது என்பது மூப்பனார் என்றோ எடுத்துவிட்ட முடிவாகும்.

ஆனால் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் திடீர்க் குத்துக்கரணம் அடித்ததால் மூப்பனாரின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. 33 தினங்களாக இழுத்தடித்துவிட்டு இறுதியில் ஜெயலலிதா வழங்கிய சலுகைகளை ஏற்றுக்கொண்டு சரணடைந்துவிட்டார் மூப்பனார்.

தமிழக சட்டசபைக்கு அ.தி.மு.க. அணியில் போட்டியிட இரு காங்கிரஸ் கட்சிகளுக்கும் 47 தொகுதிகளைத் தந்திருக்கிறார் ஜெயலலிதா.

பாண்டிச்சேரியில் காங்கிரஸ் அணிகள் தனித்துப் போட்டியிடவேண்டியதுதான். அவற்றை எதிர்த்துப் பாட்டாளி மக்கள் கட்சியுடன் சேர்ந்து அ.தி.மு.க. போட்டியிடும்.

அதாவது தமிழகத்தில் அ.தி.மு.க. அணியில் ஜெயலலிதா, மூப்பனார், சோனியாகாந்தி, ராமதாஸ் ஆகியோர் ஒன்று சேர்ந்து கருணாநிதியை எதிர்ப்பார்கள்.

பாண்டிச்சேரியிலோ ஜெயலலிதாவும் ராமதாஸும் ஒன்று சேர்ந்து சோனியா மூப்பனார் அணியை எதிர்ப்பார்கள்.

ஜெயலலிதாவுக்கும் மூப்பனாருக்கும் இடையில் இவ்வாறு தேர்தல் கூட்டு ஏற்பட்டிருக்கிறது. இதன்மூலம் தமிழக மக்களும் பாண்டிச்சேரி மக்களும் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் மூப்பனார் ஜெயலலிதாவுடன் செய்துகொண்ட தேர்தல் கூட்டு காங்கிரஸ் வட்டாரங்களில் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதிலும் தமிழ் மாநில காங்கிரஸின் முக்கிய பிரமுகரும் மூப்பனாரின் தளபதியுமான முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் வெளிப்படையாகவே தமது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்.

அ.தி.மு.கவுடன் தேர்தல் கூட்டு செய்துகொண்டதன் மூலம் தமிழ் மாநில காங்கிரஸுக்கு அபகீர்த்தியைத் தேடித்தந்துவிட்டார் மூப்பனார் என்று சிதம்பரம் சாடியிருக்கிறார். இதன் மூலம் சிதம்பர சக்கரத்தை இன்று மூப்பனார் பார்க்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மாநில காங்கிரஸ் தி.மு.கவுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி வந்தார் சிதம்பரம். ஆனால் சோனியாகாந்தி மீது தனிப்பட்ட மரியாதை கொண்டவர் மூப்பனார். தி.மு.கவில் சோனியா சேரமாட்டார் என்பதற்காக அந்த முயற்சியை அவர் மேற்கொள்ளவில்லை. இறுதிவரை ஜெயலலிதாவே கதி என்று இருந்துவிட்டார். அதன் விளைவை அவர் இன்று எதிர்கொள்ளவேண்டியதாகிவிட்டது.

தமிழகத்தில் மூப்பனாரிடம் 47 தொகுதிகளைக் கொடுத்துவிட்டு இருவரும் பங்கு போட்டுக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார் ஜெயலலிதா. அதன்மூலம் மூப்பனாருக்கு 37 தொகுதிகள் சோனியாவுக்கு 10 தொகுதிகள் என்று கருதப்பட்டது. ஆனால் சோனியா அணியினர் தங்களுக்கு 15 தொகுதிகள் வேண்டும் என்கிறார்கள். இதன்மூலம் உள்வீட்டுச் சண்டை மூளும் அபாயம் இருக்கிறது.

அத்துடன் பாண்டிச்சேரியைப் பிடிப்பதற்கு மூப்பனார் ஜெயலலிதாவுடனும் கருணாநிதியுடனும் மோதும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் ஒரு மூன்றாவது அணியை உருவாக்கி அதற்குத் தலைமைதாங்கும் ஆபத்தைத் தவிர்த்துவிட்டார் மூப்பனார். ஆனாலும் பாண்டிச்சேரியில் மூன்றாவது அணி தோன்றிவிட்டது.

தமிழ்நாட்டுத் தேர்தலில் புரட்சித் தலைவியை ஆட்சியில் இருத்துவோம் என்று மூப்பனார் துதிபாடவேண்டும்.

பாண்டிச்சேரி தேர்தலில் ஜெயலலிதாவும் கருணாநிதியும் ஊழல் பேர் வழிகள் என்று பழி சுமத்தி காங்கிரஸுக்கு மூப்பனார் ஆதரவு திரட்டவேண்டும்.

அவருடைய இந்தத் தகிடு தத்த அரசியல் நாகரிகத்தை தமிழக மக்களும் பாண்டிச்சேரி மக்களும் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்வார்களோ தெரியவில்லை.

ஆனால் மூப்பனாரின் நடவடிக்கை அவருடைய கட்சிக்குள் பெரும் கலகத்தை ஏற்படுத்தி யிருக்கிறது என்பது புரிகிறது. சிதம்பரம் வெளிப்படையாகவே தமது வெறுப்பைத் தெரிவித்திருக்கிறார். தமிழகசட்டசபை த.மா.கா பெண் உறுப்பினர் ஒருவர் தி.மு.காவில் தாம் சேர்ந்து விட்டதாக அறிவித் திருக்கிறார். வேறு சிலரும் கட்சி மாறியிருக்கிறார்கள்

இந்த நடவடிக்கைகளினால் ஆத்திரம் அடைந்த த.மா.கா ஆதரவாளர்கள் கட்சியின் தலைமையகத்தில் சிதம்பரம் மற்றும் அந்தப் பெண் எம்.எல்.ஏ ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்திருக்கிறார்கள்.

இதன்மூலம் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு சிதம்பரம் தலைமையில் 17 த.மா.கா சட்டசபை உறுப்பினர்கள் தி.மு.க அணியில் சேரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பக்கத்து வீடு**

கடந்த தமிழக சட்டசபைத்தேர்தலின்போது ஜெயலலிதாவுடன் இந்திரா காங்கிரஸை இணைக்க அப்போதைய பிரதமர் நரசிம்மராவ் தீர்மானித்தார். ஊழல் மோசடிக்காரியுடன் கூட்டுச்சேர முடியாது என்று அறிவித்து தனிக்கட்சி ஆரம்பித்தவர் மூப்பனார். கருணாநிதியுடன் சேர்ந்து பல வெற்றிகளைக் கண்டவர்.

ஆனால் இன்று அதே ஊழல் மோசடிக்காரி ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்து கொள்வதற்காகத் தமது கட்சியைக் கழுவிலேற்றுகிறார் மூப்பனார். திடமனம் இல்லாத அவருடைய வங்குறோத்து அரசியலை எண்ணிக் கட்சித் தொண்டர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

தி.மு.க அணியில் சேர்ந்தால் தமக்குத் தனிப்பட்ட முறையில் அதிக நன்மை இருக்கிறது என்பதை சிதம்பரம் நன்கு உணர்ந்திருந்தார். அவரைப் புதுடில்லிக்கு அழைத்து மத்திய அரசில் ஒரு அமைச்சராகச் சேர்த்துக் கொள்ளப் பிரதமர் வாஜ்பாய் விரும்புகிறார் என்றும் ஒரு ''கிசுகிசு'' வெளியாகியிருந்தது.

அந்த வாய்ப்பை கருணாநிதி மூலம் பெற்றுக் கொள்ள சிதம்பரம் முயற்சி எடுப்பார் என்று கூறப்படுகிறது. அதற்குப் பிரதிஉபகாரமாக த.மா.கா வை சிதம்பரம் கட்டையில் ஏற்றத்துணியக்கூடும்.

தமிழகத்தில் இத்தகைய அரசியல் நிலை ஏற்படுவதற்கு முக்கிய காரணராக இருப்பவர் ராமதாஸ். அவர் விரும்பிய பாண்டிச்சேரியை ஜெயலலிதா கொடுத்து விட்டார். ஆனால் பாண்டிச்சேரி மக்கள் கொடுப் பார்களா என்பது இன்னும் நிச்சயம் இல்லை. ஆயினும் மூப்பனாருக்கு ஒரு ஆபத்தான நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்.

அதே நேரத்தில் ராமதாஸ் வெளியேறியதனால் கருணாநிதி மண் கௌவ்வப் போகிறார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் கருணாநிதியோ தமது அணியை வேறு வழிகளில் ஸ்திரப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

ராமதாஸுடன் முட்டி மோதியவர்கள் அனைவரும் கருணாநிதியுடன் சேர்ந்து விட்டார்கள். சிதம்பரம் கோஷ்டியும் சேர்ந்தால் கருணாநிதியின் பலம் மேலும் ஓங்கும்.

இதற்கிடையில் ரஜினிகாந்தையும் தமது அணியில் சேர்த்து கொள்ளக் கருணாநிதி முயற்சி எடுக்கிறார்.

ரஜினிகாந்த் வெளிப்படையாகக் கருணாநிதியுடன் சேர்ந்து கொள்ளத் தயங்கக் கூடும். எனவே அதற்கு மறை முகமான ஆயத்தங்களைக் கருணாநிதி செய்கிறார் என்று ரகசிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கருணாநிதி தமக்குப்பின்னர் தமது மகன் ஸ்டாலினைத் தலைமைப் பதவிக்குக் கொண்டு வர முயலுகிறார். எனவே இம்முறை கட்சிக்கு இளம் ரத்தம் ஏற்றும் போர்வையில் சுமார் 50 வேட்பாளர்களை இளைஞர்களாகத் தேர்தலில் நிறுத்த முடிவு செய்துள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணியைச் சேர்ந்த இந்த இள வட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவினர் ரஜினி ரசிகர் மன்றங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவருகிறது.

தமது ரசிகர் மன்றத்தினரை வெற்றி பெறச் செய்வதற்காக ரஜினிகாந்த் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவேண்டியிருக்கும் அதன் மூலம் தி.மு.க வுக்கு அமோக வெற்றி தேடிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளையில் ஜெயலலிதாவைத் தேர்தலில் போட்டியிடத் தேர்தல் ஆணையாளர் அனுமதிப்பாரா என்பது சிதம்பர ரகசியமாகவே இருக்கிறது.

**கதாசி**

## சக்தி TV சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | குட்டிச் சுட்டி | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) குட்டிச் சுட்டி |
| 11.30-12.00 | | | | | | | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16:00 | | | | | | நலந்தானா | வசந்த நிலா |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17:00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | கிருஷ்ண தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | பெப்ஸி உங்கள் சாய்ஸ் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# உரிமை பெற்று தமிழ் மொழியில் சுயாட்சியே தமிழரின் விருப்பம்

## நீதிமன்ற அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் உரை



நீதியரசர்
விக்னேஸ்வரன்

தமிழ் பேசும் மக்கள் தம்மிடமிருந்து பறிக்கப் பட்ட உரிமைகளை மீளப் பெற விளைகிறார்கள். தங்களுடைய தமிழ் மொழியில் தம்மைத் தாமே ஆளவே அவர்கள் விரும்புகிறார்கள்.

இப்படி உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன் மனம் திறந்து கூறினார்.

கொழும்பில் உள்ள உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற வைபவரீதியான அமர்வில் அவர் மும்மொழிகளிலும் உறையாற்றினார்.

தமது உரையை ஆரம்பத்தில் தமிழில் ஆற்றிய அவர் கூறியதாவது:-

சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி எனது தாய்மொழியில் நான் பேசாது விட்டால் வெகு விரைவில் எனது சகோதரரின் மொழியில் மட்டும் நான் பேச வேண்டியிருக்கும். அவர்களின் மொழியில் பேசினால் என்ன என்று சிலர் கேட்கலாம்.

நெருக்குதல் காரணமாகவோ, திட்ட மிட்ட கட்டாயத்தின் நிமித்தமோ அல்லது அதிகார அழுத்தம் காரணமாகவோ அவ்வாறு பேச வேண்டி இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. நாம் அனைவரும் இந் நாட்டு மன்னர் என்பதை மறந்து விடலாகாது.

இலங்கையைப் போன்று சிங்கப்பூரும் ஒரே விதமான மொழிப் பிரச்சினையை முன்னர் எதிர் நோக்கியது.

சிங்கப்பூர் தனது நாட்டில் உள்ள நான்கு மொழிகளுக்கும் சம உரிமை வழங்கியதால் இன்று அந்த நாடு முன்னேற்றப் பாதையில் வீறு நடைபோடுகிறது. ஒரு மொழியைத் திணித்ததினால் இலங்கை சொல்லொணாத் துன்பத்தில் உழல்கிறது.

சுதந்திரம் கிடைக்கும் வரை வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தோரில் பெரும் பான்மையினர் தமிழ் மொழி பேசுவோரே.

ஆகவே அவர்களின் மொழி -

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைத் தழுவிய அவர்களின் கலை, கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள் -

நாட்டின் பிரத்தியேக தட்ப, வெப்ப நிலைகளுக்கு ஏற்ப அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை - அனைத்தும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு, பேணப்பட்டு சுயமாக வளர்ச்சி அடைய விடப்பட்டிருக்க வேண்டும்.

மத்திய மாகாணத்தில் சில இடங்களிலும் அவ்வாறு அனுசரித்து நடந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது விட்டதாலேயே இன்று நாடு இந்த நிலைக்கு வந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சோதனை மிக்க 1979 முதல் 1986 வரையான காலப் பகுதியில் நீதிபதியாக நான் கடமை ஆற்றி உள்ளேன்.

அதனால் அந்த மாகாணத்தின் பெரும் பான்மை மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

நான் அங்கு கடமை ஆற்றிய காலத்தில் அறிந்து கொண்டது என்ன வென்றால், அப்பகுதி மக்கள் அதிகாரப் பகிர்வை மட்டும் எதிர்பார்க்கவில்லை என்பது தான்.

அவர்கள் தாம் முன்னர் அனுபவித்த சகல உரிமைகளையும் திரும்பவும் பெறவே விரும்புகிறார்கள்.

தமது உரிமைகள் வெறும் கணித முறை நடவடிக்கையால் அவர்களிடமிருந்து பறிக்கப் பட்டு விட்டன என்றே அவர்கள் கருதுகிறார்கள்.

அதாவது இரு மாகாணங்களிலும் உள்ள பெரும்பான்மை மக்களை ஏழு மாகாணங் களிலும் உள்ள பெரும்பான்மை மக்களுடன் சேர்த்துக் கூட்டி 9 மாகாணங்களின் சிறுபான்மை மக்களாக அந்த இரு மாகாண மக்களையும் ஆட்சியாளர்கள் ஆக்கி உள்ளனர் என்று அவர்கள் கவலைப் படுகின்றனர்.

இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டமாணவர் சங்கத் தலைவராக 1962 ஆம் ஆண்டில் நான் கடமையாற்றினேன். அதன் பின்னர் தமிழ் பேசும் ஒருவர் சட்ட மாணவர் சங்கத் தலைவராக இன்றுவரை தேர்ந்தெடுக்கப்படவில்லை.

நாங்கள் மாணவர்களாக இருந்த போது நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நான் பல இடங்களிலும் கூறியதுண்டு.

கல்லூரியில் கனிஷ்ட மாணவர்கள் "மாபிள்" விளையாடும் போது சிரேஷ்ட மாணவர்களில் சிலர் எந்த வித உரிமையும் இன்றி தாம் விளையாடுவதற்காக கனிஷ்ட மாணவர்களின் 'மாபிள்கள்' முழுவதையும் அபகரித்து விடுவர்.

கனிஷ்ட மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் போது, பறித்த மாபிள்களில் "10 சதவீதம் தருகிறோம்" "15சதவீதம் தருகிறோம்." "20 சதவீதம் தருகிறோம்" என்று சிரேஷ்ட மாணவர்கள் பேரம் பேசுவார்கள்.

உண்மையில் அவர்கள் அபகரித்துக் கொண்ட மாபிள்கள் அனைத்தும் கனிஷ்ட மாணவர்களுடையவை என்பதை சிரேஷ்ட மாணவர்கள் மறந்து விடுவார்கள். மாபிள்களை அபகரிப்பதற்குத் தமக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்பதையும் சிரேஷ்ட மாணவர்கள் மறந்து விடுவார்கள்.

சட்டமா அதிபரும் நானும் மட்டுமே இத்தகைய புகழ்மிக்க பதவிகளில் தற்போது இருக்கிறோம். ஆகவே ஓரிரு இடங்களில் உள்ள புல், மாரி காலத்துக்கு அறிகுறியாகாது.

உண்மையில் கடந்த நூற்றாண்டின் மத்திய பகுதியில் எங்களைப் போன்று பலர் உயர் பதவிகளில் தங்கள் தகைமைகளின் நிமித்தம் இருந்தார்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

தமிழ் மொழி பேசுவோரின் எண்ணிக்கை படிப்படியாக அரசாங்கத் துறைகளிலும், நீதித் துறையிலும், சட்டத் துறையிலும், ஏன் தனியார் துறைகளிலும் மிகவும் குறைந்து வருகின்றது.

காலக்கிரமத்தில், பறங்கியர் போன்று, எங்களைப் போன்றவர்கள் இருந்த இடம் தெரியாது மறைந்து போய் விடுவரோ என்று யோசிக்க வேண்டி உள்ளது.

இந்த நாட்டின் வருங்கால முன்னேற்றம் கருதி ஒன்று கூற விரும்புகிறேன். இது என் பொருட்டோ, எனது இனத்தவர் பொருட்டோ கூறும் ஒன்றல்ல. இவ்வாறு கூறும் சந்தர்ப்பம் இனிக் கிடைக்குமோ தெரியாது. பொது நன்மைக்காகக் கூறி வைக்கிறேன்.

அதாவது சிங்கள மக்களுக்கு அவர்களின் மொழியும் பாரம்பரியமும் எவ்வளவு முக்கியமோ, அதே போன்று இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களுக்கும் அவர்களின் மொழியும் பாரம்பரியமும் முக்கியமானவை.

தமிழ் மொழியை வேறுநாடுகளில் வளர்க்கிறார்களா, பேணுகிறார்களா என்பது முக்கியமல்ல. எங்களுக்கே உரித்தான முறையில் அம்மொழியையும் பாரம்பரியத் தையும் பேணி வளர்க்கவே இந்த நாட்டுத் தமிழர்கள் ஆசைப்படுகிறார்கள்.

ஆகவே சிங்கள மொழி ஏழு மாகாணங்களில் ஆட்சி மொழியாக அதிகாரம் செலுத்தும் அதே வேளையில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழியே ஆட்சி செலுத்த வேண்டும்.

ஆங்கில மொழி இரு சம உரிமை கொண்டவர்களுக்கிடையில் இணைப்பு மொழியாகப் பயன்படுத்தப்படலாம்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் பிரத்தியேக உரித்து அளிக்கப்படாவிடில் 1956 இல் இயற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தால் ஏற்பட்ட பிழை நிவர்த்தி செய்யப்படாது போய் விடும்;

1947 ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் இருந்த பிரிவு 29(2) போன்ற ஷரத்துக்கள் பின்னைய அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ளாது விடப்பட்டதன் தாக்கம் குறைக்கப்படாது போய் விடும்.

1958 ஆம், 1977 ஆம், 1983 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த இனக்கலவரங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகள் சாந்தி அடையாது போய் விடும்.

அரசியலமைப்பில் தற்பொழுது காணப்படும் அலங்கார ஏற்பாடுகள் வடக்கு- கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு வாழ்வளிப்பதாகத் தெரியவில்லை. வெளியார் தலையீடின்றி தம்மொழியில் கருமம் ஆற்றவே அவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

நான் பிறந்து வளர்ந்த சூழல் என்னை உண்மையான ஒரு இலங்கையராக்கி விட்டுள்ளது. என் பெற்றோர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். நான் பிறந்தது மேல் மாகாணத்தில். எனது ஆரம்பக் கல்வியை வடமேல் மாகாணத்திலும் வடமத்திய மாகாணத்திலும் பெற்றேன். நீதிபதியாக நான் ஊவா மாகாணத்தில் கடமையாற்றியிருக்கிறேன். ஆகவே நான் என்னை இந்த அழகுத் தீவின் மண்ணின் மைந்தனாகவே கருதுகிறேன்.

## அமெரிக்கத் தூதுவரின் யாழ் நகர் உபதேசம்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரை நிகழ்த்தினார்.

இம்மாதம் 7ஆம் திகதி இந்த வைபவம் இடம் பெற்றது.

முற்றிலும் எவரும் எதிர்பாராத விதத்தில் அவரது உரை அமைந்தது.

அங்கு உரை நிகழ்த்திய போது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அமெரிக்க அரசின் கொள்கையை அவர் விளக்கினார். அவர் கூறியதாவது:-

- இலங்கையில் தமிழர்களுக்கு ஒரு தனி நாடு அமைவதை நாம் நிராகரிக்கிறோம்.
- விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத அமைப்பாக நாம் கருதுகிறோம்.
- இலங்கைத்தமிழர்களின் ஏகப் பிரதிநிதி யாக, விடுதலைப் புலிகள் அமைப்பை நாம் கருதவில்லை.
- இலங்கையை பல்லின மக்கள் வாழும், பல மதத்தினர் வாழும், பல மொழிகள் பேசுவோர் வாழும், பல கலாசாரத்தினர் வாழும் ஒரு நாடாகவே நாம் கருதுகிறோம். இலங்கையில் எந்த ஒரு பகுதியாவது குறிப்பிட்ட ஓர் இனத்துக்குரியது என்பதை நாம் நம்பவில்லை.
- இலங்கையில் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் முடிவுக்கு வரவேண்டும். எவ்வளவு விரைவாக யுத்தம் முடிவடையுமோ அவ்வளவுக்கு நல்லது.
- இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் யோசனையை நாம் நிராகரிக்கிறோம்.
- யுத்தத்திற்கான செலவுகள், மனித இழப்புகள், ஊனமுற்றோர் மற்றும் இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இவற்றைத்தொடர்ந்து சகித்துக்கொள்ள முடியாது.
- இவற்றின் காரணமாக இந்தியா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல நாடுகள் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.


## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்**



K.
சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind - S.M.P

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க்கண்ட வியாதி களுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக்கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கைவலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதயநோய்கள், இடுப்புவலி, நெஞ்சுஎரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

**RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM**
**ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்**

**(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தால் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)**



சாலாமிசிரி, பாதாம்பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்பு களுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப் பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப் படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும். மூலச்சூட்டைப் போக்கும்.... இருமல், மார்பு, இடுப்புவலி, கால்கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றிப் பலனடையலாம். பத்தியமில்லை.

**500gram 300/-, 250gram 150/-**

வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**Ayur Dr.K.Sivasubramaniam முருகானந்தா வைத்தியசாலை**

G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நில மாடி) கொழும்பு - 11. Tel :

# அமெ.தூதருக்கு தாயகத்தின் தாற்பரியம் விளங்காது!

## அவர் அமெரிக்காவில் வந்தேறுகுடி வம்சாவளிதானே

### தேரடி அரட்டை

தேரடிக்கு விநாசியரும் பரமலிங்கம் மாஸ்டரும் வந்தபோது, சொல்லிவைத்தது போல் கொம்னிகேஷன் லோகன் செக்கியூரிட்டி டானியலுடன் வந்து சேர்ந்தான்.

அவர்கள் அமர்ந்தவுடனேயே, "தவம் கிடந்து பெற்ற பிள்ளை, பிறந்த உடனேயே, அம்மா, எப்ப தாலி அறுப்பாய் என்று கேட்ட மாதிரி யாழ்ப்பாணத்துக்கு வந்த அமெரிக்கத் தூதர், வடக்கு - கிழக்கை தமிழர் தாயகம் என்று சொல்வது தீவிர வாதம் என்று பெரிய குண்டைத் தூக்கிப் போட்டுட்டார்" என்றாள் சின்னாச்சி.

"அவர் வேறை என்ன சொல்லுவார் சின்னாச்சி அமெரிக்கா செவ்விந்தியர்களின் தாயகம். பெருமையாக தாம் அமெரிக்கர்கள் என்று சொல்லுறவையின் முன்னோர்கள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து அங்கே போய்க் குடியேறினவை. அவை வந்தேறு குடிகள் தானே, தாயகம் என்னும் உரிமை அவைக்கு விளங்காது. தாயகம் என்பதை ஏற்றுக் கொண்டால் அமெரிக்கர்கள் என்று மார் தட்டுறவை செவ்விந்தியர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டி வரும். அதுதான் தாயகம் என்ற சொல் அமெரிக்கத் தூதருக்கு வேப்பங்காய் போல் கசக்கிறது" விளக்கினான் லோகன்.

"அப்ப, விஜயன் இந்தியாவிலிருந்து கப்பலிலை வந்த மாதிரி அவையும் ஐரோப்பாவிலை இருந்து அமெரிக்காவுக்கு போயிருக்கினம். அதுதான் இனம் இனத்தோட சேருது" நக்கல் சிரிப்புடன் சொன்னாள் சின்னாச்சி.

"அமெரிக்கத் தூதரின் உரையைக் கேட்ட பல பிரமுகர்களுக்கு அதிருப்தி ஏற்பட்ட தாம்" கேள்விப்பட்டதைச் சொன்னான் டானியல்.

"அதிருப்தி அடைஞ்சு என்ன பிரயோசனம்? அதை தூதருக்கு வெளிக்காட்டி இருந்தால் தானே, அவருக்கு அது விளங்கியிருக்கும்." வினாவினார் விநாசியர்.

"எங்கடை ஆட்கள் வெள்ளைக்காரன் என்றாலே மாலை போட்டுக்கும்பிடுவினம். வந்தவர் தூதர். அப்படியிருக்கும் போது, அமெரிக்க மிஷனைச் சேர்ந்தவையோ, பதவிகளைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறவையோ, இதுகளை விளக்க எப்படி முன்வருவினம்?" என்றாள் சின்னாச்சி.

"ஏன் சின்னாச்சி, வழக்கமாக பொங்கி' எழுறவையே அரசியல்வாதிகள் மாதிரி, அவரைப் போய் பார்த்து மகஜர் கொடுத்ததோட சரி. அதற்குப் பிறகு தூதர் மகஜர் கொடுத்தவையின்ரை இடத்துக்கே போய் கதைச்சுப் போட்டுப் போயிட்டார்" என்றான் டானியல். "போய் என்ன சொல்லுவார்?" என்று பதிலையும் தானே சொன்னான். "அங்கே இருக்கிற ஆள்களைப் பற்றி என்ன வேணும் என்றாலும் கூறலாம், கொஞ்சப் பேர் அதிருப்தி அடைவினம். இன்னும் கொஞ்சப்பேர் மகஜர் தருவினம். அவ்வளவு தான் நடக்கும் என்று தானே சொல்லுவார்"

அரட்டை வீணான சிக்கலை கொண்டு வரும் திசைக்கு செல்வதை நினைத்த மாஸ்டர் பேச்சைத் திசை மாற்றினார்.

"பிரிட்டிஷ்காரன் கண்டு பிடிச்ச விளையாட்டு கிரிக்கெட் என்று சொல்வது நூற்றுக்கு நூறு பொருத்தம் தான்" என்றார் மாஸ்டர்.

"என்ன மாஸ்டர், ஒருநாளும் இல்லாமல் இன்று கிரிக்கெட்டை பற்றிக் கதைக்கிறியள்" ஆச்சரியப்பட்டான் லோகன்.

"ஓம் தம்பி, விளையாட்டிலை நடக்கிறது வாழ்க்கையிலையும் ஒத்துப் போகுதெல்லே." பொடி வைத்துப் பேசினார் மாஸ்டர்.



மாஸ்டரின் பேச்சுப் புரியாததால் பார்வைகள் கேள்விகளாகின.

விடை சொல்லத் தொடங்கினார் மாஸ்டர்.

"கண்டியிலை நடந்த கிரிக்கெட் போட்டியிலை ஜெயசூரியா அடித்த பந்து நிலத்தில் பட்ட பின்னர் இங்கிலாந்து வீரரால் ஏந்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதனை அவுட் என்று நடுவர் தவறாகத் தீர்ப்பளித்து விட்டாராம். இதனால் கோபமடைந்த ஜெயசூரியா மைதானத்தை விட்டு வெளியேறும் போது கையுறைகளையும் தலைக்கவசத்தையும் கோபத்துடன் வீசி எறிந்தார்.

ஜெயசூரியாவின் இந்தச் செய்கைகள் நடுவரின் தீர்ப்புக்கு அவமதிப்பை ஏற்படுத்தியதாகக் கூறி அவருக்கு அபராதமும் போட்டிகளில் பங்கேற்க 6 மாத ஒத்தி வைக்கப்பட்ட தடையும் விதிக்கப்பட்டிருக்கு."

"இது பழங்கதை, அதுக்கும் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்?" பொறுமையிழந்து கேட்டான் லோகன்.

"கிரிக்கெட் போட்டியிலை நடுவர் தவறாக செயற்படுகிறார். ஒரு அணியைத் தூக்கி நிறுத்தக் கூடிய வீரரை 'அவுட்' என்று தவறாகத் தீர்ப்பளிக்கிறார். அது அந்த அணிக்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதனால் அந்த வீரனுக்கு நியாயமான கோபம் உண்டாகிறது.

நடுவரின் தவறான செயற்பாட்டுக் கெதிரான தன்னுடைய கோபத்தை வெளிக்காட்டுகிறான்."

"உடனே மத்தியஸ்தம் வகிக்கும் நடுவர் சபை, நடுவரின் தீர்ப்பு தவறாக இருந்தாலும் கிரிக்கெட்டின் மரியாதை காப்பாற்றப் படவேண்டும் என்று கூறி பாதிப்படைந்த, நியாயமான கோபமடைந்த வீரனுக்கு தண்டனை வழங்கியிருக்கு. இன்னும் விளங்கேல்லையோ?" என்று கேட்டு நிறுத்தினார் மாஸ்டர்.

"விளங்குது மாஸ்டர், பிரிட்டனின் பயங்கர வாதத்தடைச் சட்டமும் கிட்டத்தட்ட இதே போல இருக்கு என்று சொல்லவாறீங்கள்."

"அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக அரசுகள் என்ற ஒரே காரணத்தால் அவை செய்யிற இன ஒழிப்பு அடக்குமுறைகளைக் கவனத்தில் கொள்ளாது, அடக்கு முறைக்கு எதிராக எதிர்ப்பைக் காட்டும் இயக்கங்களுக்கு தடை விதிக்கினம். இரண்டு சம்பவங்களுக்கும் இடையில் பொருத்தங்கள் இருக்குது தான்."

விளங்கியதை விவரித்தான் டானியல்.

"ஆனால் ஜெயசூரியாவுக்குத் தடை விதித்ததுக்கு முகத்தைச் சுழிக்கிறவை, பிரிட்டனின் தடைக்கு வெற்றி முரசெல்லே கொட்டுகினம்". விசனப்பட்டார் விநாசியர்.

"அவை மட்டுமே, நம்பவச்சு கழுத்தறுக்கிறதிலை தாங்களும் சளைக்கவில்லை என்று பக்கத்திலை இருக்கிறவையும் காட்டிப் போட்டினம் என்றெல்லே கதையடிபடுகுது." பொருமினாள் சின்னாச்சி.

அவள் கூறியதை கவனத்தில் எடுக்காதவர் போல் மாஸ்டர் பேசினார்.

"பிரிட்டனின் தடைக்கு இந்தியாவின் அழுத்தமும் முக்கிய காரணம் என்று சொல்லப்படுகுது.

விடுதலைப் புலிகளின் போராட்டம் வெற்றி பெற்று, இங்கு தமிழருக்கு நல்ல வாழ்வு அமைந்தால் அதனால் முதலில் தாக்கம் ஏற்படுவது இந்தியாவில் தான் என்று கருதப்படுவதால் இங்கு அரசியல் தீர்வு மட்டும், அதுவும், அரசாங்கத்தின் கை ஓங்கிய நிலையில் ஏற்பட வேணும் என்று இந்தியா விரும்புதாம்.

"அதனால் எப்படியாவது, பல கட்சி அரசு முறை கொண்ட ஒரு தீர்வுதான் இலங்கைத் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறதாம்." சொல்லி முடித்தார் மாஸ்டர்.

"நாங்கள் எங்களை நம்பாமல் அடுத்தவரை பெரிய ஆட்களாக நினைக்கிறதாலைதான் விடிவு வராமல் இருக்குது." புறுபுறுத்தபடியே கடலைக் கடையைக் கட்டத் தொடங்கினாள் சின்னாச்சி. தேரடி கலைந்தது.

— ஏகலைவன்

# கோஷங்களாக மாறும் டீஷேர்ட் வாசகங்கள்

இப்போதெல்லாம் ஜீன்சும் டீஷேர்ட்டும் பெனியனும் சர்வதேச உடைகளாகிவிட்டன. ஆண், பெண் வித்தியாசமின்றி அனைவருமே இவற்றை விரும்பி அணிகின்றனர்.

குறிப்பாக கல்லூரி மாணவிகள் டீஷேர்ட்களை விரும்பி அணிகின்றனர். டீஷேர்ட்கள் மற்றும் பெனியன்களில் பல வாசகங்களையும் படங்களையும் பிரின்ட் செய்து அணிவது வழக்கம்.

சமீபத்தில் ஒரு தாத்தாவிற்கு 'சதாபிஷேகம்' (80ஆவது பிறந்தநாள்) வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. இந்த விழாவிற்கு வெளிநாட்டிலுள்ள தாத்தாவின் பேரன், பேத்திகள் வந்தனர்.

அவர்கள் அனைவருமே வெள்ளை பெனியனில் தங்களது தாத்தாவின் உருவத்தைப் பதித்து 'அன்பே வடிவான எங்கள் தாத்தா! சதாபிஷேகம் 2000' என்று எழுதி அணிந்திருந்தனர்.

பெண்கள் அணியும் டீஷேர்ட்கள் பெனியன்களில் என்ன எழுதி வைத்துள்ளனர் என்பதை ஆய்வு செய்து சில வாசகங்களை அறிந்துள்ளனர்.

ஆங்கிலத்திலிருக்கும் அந்த வாசகங்களின் தமிழாக்கம் சில இங்கே:-




நான் ஒரு மூடன். வாயை மூடு.

பாவம் ஆண்களுக்கும் மனது உண்டுதான்..... ஆனால் யார் அதை கண்டு கொள்கிறார்கள்.

அதிசயங்களை நான் நம்புவதில்லை. நானே ஓர் அதிசயம்தானே...!

அடுத்த ஐந்து நிமிடங்களில் மறுபடியும் எனக்குக் கோபம் வந்துவிடும்.

எனக்கு யாரையுமே பிடிக்காது. நீ உட்பட என்னைக் கொலைகாரி ஆக்கி விடாதே!

ஆமா... நீ என்னதான் சொல்ல வர்றே...!

எனக்கு அடிக்கடி கோபம் வரும்... பரவாயில்லையா...?

ம்... நான் ரொம்ப பிசியா இருக்கேன். நீயும் சுமாராத்தான் இருக்கே... பை...பை!

எச்சரிக்கை! எனக்கு யாரை எப்படி சமாளிக்க வேண்டும் என்று தெரியும்!

மனச மூடிட்டு வாயால் மட்டும் பேசிக்கொல்லாதீங்க!

எனக்கு நிறையத் திறமைகள் உண்டு. ஒரே சமயத்தில் பேசவும் உன்னை புண்படுத்தவும் தெரியும்... ஹ...ஹ...ஹா!

எங்கிட்ட மோதாதே... நீ தோற்றுவிடுவாய்...!

உனக்கு நிறைய உரிமைகள் இருக்கு. பேசாமல் இருப்பதும் உன் உரிமை.

# வாசகர் இதயம் பேசுகிறது

சுடச்சுட செய்திகளைப் பெற்றுத்தரும் சுடர்ஒளியே நீ சுமந்து வரும் குடாநாட்டுச் செய்திகள் பிரமாதம். "வடபுலத்தில்.." பகுதியில் நாம் அறிந்துகொள்ள எத்தனையோ தகவல்கள் இருக்கின்றன.

-வா.ஆனந்தராஜ்,புசல்லாவ.

சுடர் ஒளியில் "தடைவரினும் பேச்சுக்கு ஒத்துழைப்பு" என்று அன்டன் பாலசிங்கம் வெளியிட்டிருந்த கருத்து எம்மைக் கவர்ந்துவிட்டது.

- முஸ்னா றஸீக்கா,கல்முனைக்குடி-13.

வாசகர் கேள்விகளுக்குப் பித்தன் தரும் பதில்களும், அவற்றிற்குப் பொருத்தமான கருத்துப்படங்களும் சிறப்பாக இருக்கின்றன.

- எம்.சி.மகேந்திரன் ,பதுளை

"ப்ராடி" எழுதிய "ஹுசைனின் கிரிக்கெட் கிலி" படுஜோர் "மிஸ்டர் க்றோ" வின் பணியும் தொடரட்டும்,சிறக்கட்டும்.

- எஸ்.வி.மது, சந்திவெளி

மூதூர் பிரதேசத்தில் பரந்துபட்ட ஊர்களின் செய்திகள் சுடர்ஒளியில் வெளி வருவது கண்டு மகிழ்ச்சி.

- கவிக்குயிலன்,சேனையூர்-06.

"தேரடி அரட்டை" யில் கொழும்பில் தமிழ் பெண்ணுக்கு இப்படியும் ஒரு சோதனை என்னும் தலைப்பில் வெளிவந்த தகவல் ஆயிரத்தில் ஒரு தகவல். எத்தனை சோதனைகளை நாம் எதிர்கொள்கிறோம்?

- ஆர்.வன்னிமகன், கொழும்பு 06.

மட்டக்களப்பில் உள்ள வாகரைப் பகுதி வன்னியாக மாறும் கெடுபிடி பற்றி அறிந்து மனம் குழப்பம் அடைந்தோம்.

- ம.தவலிங்கம், வவுனியா.

கால் ஊனமுற்ற நங்கையர் தள்ளு வண்டிகளில் அமர்ந்து "டேபிள் டென்னிஸ்" விளையாடும் காட்சியை "மசாலா மிக்ஸ்" பகுதியில் கண்டு ஆச்சரியம் அடைந்தேன்.

- எஸ்.கனகசபை, சிலாபம்.

மலையகத்தில் எதிரொலிக்கும் ஒற்றுமை உணர்வலைகளை நன்கு விவரிக்கும் விதத்தில் வர்ணப்படங்களுடன் தந்தீர்கள். சிறப்பாக இருந்தது.

- எஸ்.வசந்தகுமார், மருதானை.

திருக்கேதீஸ்வரப் பெருமான் ஒரு தடுப்புக் கைதி போல் அவதியுறும் தகவல் அறிந்து மனக்கலக்கம் ஏற்பட்டது.

- வே.செல்லத்துரை, அட்டன்.

திருகோணமலை வைத்தியசாலை பெயரளவில் இயங்கி என்ன பயன்? முக்கிய வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும்.

- எம்.எம்.நஸீர், கம்பளை.

# மடுமாதாவின் தென்னில

## அருள் பொழியும் அன்புத் தாய்

**ம**ன்னார் மாவட்டத்திலுள்ள வன்னிப்பகுதியில் மருதமடுத் திருப்பதி அமைந்துள்ளது.

வனவிலங்குகள் வாழும் அடர்ந்த

**ஒல்லாந்தரின் படையெடுப்பின் பின் கத்தோலிக்கர்கள் இம்சிக்கப்பட்டனர். ஆலயங்கள் இடிக்கப்பட்டன.**

மாந்தையிலும் கொடூரங்கள் நிகழ்ந்தன. இதனால் அஞ்சிய மக்கள் மாந்தையில் இருந்த மாதாவின் அற்புத திருச்சொரூபத்தையும் எடுத்துக் கொண்டு வன்னி காட்டுப் பகுதிக்குச் சென்று மறைந்திருந்தனர். சுற்றுவத்தை என்ற காட்டுப் பிரதேசத்தில் மாதா சொரூபத்தை மறைத்து வைத்துப் பூஜித்தனர்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்துக்கு முன் தென்னிலங்கை கத்தோலிக்க மக்களின் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமாக மடுத்திருப்பதி விளங்கியது. பின்னர் வடக்குக் கிழக்கில் மூண்ட போரை அடுத்து இத்திருப்பதி அகதிகளை அரவணைக்கும் பூமியானது. இன்றும் அகதி மக்களுக்கு புகலிடம் வழங்கி வருகிறது.

மடுத் திருப்பதி சில காலத்துக்கு முன்னர் சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால்



அடர்ந்த கானகத்துள் கம்பீரமாகக் காட்சியளிக்கும் மருதமடு ஆலயம்

தன்னை நாடிவரும் எவரையும் அன்னை கைவிடுவதில்லை



கானகத்தின் மத்தியில் அமைந்துள்ள இத்திருப்பதி பிரசித்தி பெற்ற யாத்திரைத் திருத்தலமாகும். இத்திருத்தலம் 450 ஆண்டுகள் வரலாறு கொண்டது.

மன்னாரிலுள்ள மாந்தை என்ற இடத்திலேயே ( திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு அருகில்) அந்தநாட்களில் மாதா ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது. மாந்தை ஒரு துறைமுக நகராக அப்பொழுது விளங்கியது.

ஒல்லாந்தருக்கு முன் இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரின் ஆட்சியில் கத்தோலிக்க மதம் வளர்ச்சி கண்டிருந்தது.

அக்காலத்தில் மாதாவுக்கு ஆலயம் அமைக்க ஹெலேனா என்ற வெள்ளைக்காரப் பெண் உள்ளூர் வாசிகளுக்கு உதவினார். அந்த ஆலயமே பின்னர் வளர்ச்சியுறத் தொடங்கியது. ஹெலேனா அம்மையாரின் இந்த உதவியினால் மருதமடுமாதா ஆலயம் சுலேனா மருதமடு என்றும் அழைக்கப்பட்டது.

இப்பிராந்தியத்தில் ஆயுதங்களுடனோ, சீருடையுடனோ நடமாட எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

மருதமடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட 75ஆம் ஆண்டு கடந்த ஆண்டு கொண்டாடப்பட்டது. அப்பொழுது மன்னார் மறை மாவட்டத்தின் சகல ஆலயப் பங்குகளுக்கும் மாதாவின் திருச்சொரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது.

## (2001 மார்ச் 14 – ஏப்ர

## மடுமாதாவின் கொழு மறை மாவட்ட பவனியின் விவரம்

**ம**ருதமடு அன்னையின் திருச்சொரூபபவனி 19 ஆம் திகதி திங்கள் காலை கொழும்பு மறை மாவட்டத்தில் ஆரம்பமாகும். அன்று காலை 9 மணியளவில் நீர்கொழும்பு கொச்சிக்கடையில் வைத்து சொரூபம் கொழும்பு மறை மாவட்டத்திடம் ஒப்படைக்கப்படும்.

கடந்த 14 ஆம் திகதி காலை மருதமடுத் திருப்பதியில் இருந்து தென் இலங்கைக்கான அன்னையின் திருச்சொரூப பவனி ஆரம்பமானது.

முதல் கட்டமாக அநுராதபுரம் மறைமாவட்ட மக்கள் அன்னையை வரவேற்றனர். 16 ஆம் திகதி சிலாபம் மறை மாவட்டத்தை பவனி வந்தடையும். அம்மாவட்ட மக்கள் 18 ஆம் திகதி வரை அன்னையைத் தரிசிப்பர்.

19 ஆம் திகதி நீர்கொழும்பு பங்கின் பல ஆலயங்களுக்கும் நடைபெறும் பவனியின் இறுதியில் இரவு 7 மணியளவில் மாதாவின் சொரூபம் புனித மரியாள் ஆலயத்தில் வைக்கப்படும்.

மறுநாள் முன்னக்கரை, தூவ சந்தி வழியே பமுனுகம, போபிட்டிய, சுதுவெல்ல சந்தியை பவனி வந்தடையும்.

21 ஆம் திகதி நீர்கொழும்பு—கொழும்பு வீதி வழியே கந்தானை, மாபோலை, ஹெந்தலை சந்தி, நாயக்ககந்த, எலகந்த, ஹேகித்த ஆகிய இடங்களை பவனி கடந்து சென்று அன்று இரவு வத்தளை அர்ச் அன்னம்மாள் ஆலயத்தில் மாதாவின் சொரூபம் வைக்கப்படும்.

22 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு பவனி மீண்டும் ஆரம்பமாகும்.

என்டேர முல்லை, கிராண்ட்பாஸ், முகத்துவாரம், கொச்சிக்கடை, புதுச் செட்டித்தெரு ஆலயங்களில் பிரார்த்தனைகள் இடம் பெறும். அன்று மாலை 6 மணி முதல் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் திருச்

சொரூபம் வைக்கப்ப

23 ஆம் திகதி கால
மணிக்கு அங்கிருந்து
மீண்டும் ஆரம்பமாகும்
புனித ஜோசப் கல்லூ
சகலபுனிதவான்கள்
கோட்டே புனித தோ
ஆலயம், தெஹிவளை
மரியாள் ஆலயம், கல்சி
சூசையப்பர் ஆலயம், ர
த்தை ஆலயம் ஆகிய
பிரார்த்தனைகள் இட
அன்று இரவு மொறட்
செபஸ்தியார் ஆலயத்
திருச்சொரூபம் வைக்

24 ஆம் திகதி கா
மணிக்கு பவனி மீண்
ஆரம்பமாகும். கட்டுக்
பாணந்துறை, வாதுவ
களுத்துறை வழியாக
புனித சூசையப்பர் ஆ
பவனி சென்றடையு

25 ஆம் திகதி கால
மணிக்கு பவனி மீண்
ஆரம்பமாகி மக்கொன
பேருவளை, அளுத்க
வழியாக ஹங்வெல்ல
அடையும். பின்னர் பவ
கிரிந்திவல, வெலிவே
ஆகிய இடங்களைச்

அன்று இரவு தே
லங்கா மாதா பேராலய
சொரூபம் வைக்கப்ப

26 ஆம் திகதி அங்
பவனி புறப்பட்டு கந்
ஏக்கலை, மினுவாங்
படல்கம வழியே செ

பின்னர் குருணா
மறைமாவட்டத்தில்
திருச் சொரூபம்
ஒப்படைக்கப்படும்.

## மருதமடு செபமாலை மாதாவே எங்களு


முருங்கனில் சகல விதமான விவசாயப் பொருட்கள், உரவகைகள், கிருமிநாசனி, பெயின்ற் வகைகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், துவிச்சக்கரவண்டிகள், சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்:

க.டொனேசன் அன் பிறதர்ஸ்
மெயின் வீதி, முருங்கன்.
சுடர் ஒளி பத்திரிகை முகவர்
T.P: 023-32604

மன்னாரில் சகலவிதமான பாடசாலை புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், காரியாலய உபகரணங்கள், காகிதாதிகள், வயர் வகைகள், கணக்குப் பதிவேட்டுக் கொப்பிகள் முதலியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி வசதிகள் கொண்ட ஒரே இடம்

| நித்தியா புக் சென்ரர் | நித்தியா கொமியூனிகேசன் |
|---|---|
| 25, புதிய பஸ் நிலையம், மன்னார். | 35, புதிய பஸ் நிலையம், மன்னார். |
| T.P: 023-32346 | T.P: 023-32357 |

சுடர் ஒளி பத்திரிகை முகவர்

வவுனியா நகரில் தரமான புதிய, பழைய திரைப்பட வீடியோ புதிய VCD பிரதிகளை பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகலவிதமான வைபவங்களை வீடியோ, ஓடியோ ஒளி, ஒலிப் பதிவுகளை நவீனமுறையில் மிக தத்ரூபமாக எடுப்பதற்கு

ஏசியன் சன் டீவி ஸ்தாபனத்தார்
70B, வைரவப் புளியங்குளம்,
ஸ்டேசன் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024-22870

சகல
மெ
AMIT

சம்பந்தர் வைத்திய நிலையம்
கண், காது, மூக்கு, தொண்டை, நெஞ்சு (பொது), இருதயம், சத்திர சிகிச்சை, மகப்பேறு, சிறு பிள்ளைகள், புற்றுநோய், நரம்பு சத்திர சிகிச்சை போன்ற சகல வைத்திய நிபுணர்களின் சேவைகள்.
ECG, MEDICAL LABORATORY
O.P.D. SERVICE 8.00 AM - 9.00 PM
118 A, காலி வீதி, (தபாற் கந்தோர் அருகாமையில் Market முன்பாக) வெள்ளவத்தை.
தொலைபேசி : 506969

மிருனாஸ் சுப்பர்
வீட்டிற்கு தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், ஐஸ்கிறீம், சொக்லெட், பால்மா, சமையலுக்கான அனைத்து தேவைகளுக்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
MIRUNA'S SUPER
342, Aluthmawatha Road, Colombo-15.
Tel: 525147 Fax: 075-364298
E-mail: miruna@stl.lk



R.T.K. GROUP
No.57/1, Manning Place,
Colombo-06.
Tel : 505059, 074-515083

R.T.K
No
Col
NEW
Col

# லங்கைத் திருப்பவனி

## ஏப்ரல் 2)

## கொழும்பு
## ட்ட
## விவரம்

ரூபம் வைக்கப்பட்டிருக்கும்.
23 ஆம் திகதி காலை 8.30
க்கு அங்கிருந்து பவனி
டும் ஆரம்பமாகும். மருதானை
த ஜோசப் கல்லூரி, பொரளை
புனிதவான்கள் ஆலயம்,
ட்டே புனித தோமையார்
யம், தெஹிவளை புனித
ாள் ஆலயம், கல்கிசை புனித
சயப்பர் ஆலயம், ராவத்தா
தை ஆலயம் ஆகியவற்றில்
ர்த்தனைகள் இடம்பெறும்.
று இரவு மொறட்டுவை புனித
ஸ்தியார் ஆலயத்தில்
ச்சொரூபம் வைக்கப்படும்.
24 ஆம் திகதி காலை 7.15
ரிக்கு பவனி மீண்டும்
ம்பமாகும். கட்டுக்குருந்தை,
ளந்துறை, வாதுவை,
த்துறை வழியாக பயாகலை
த சூசையப்பர் ஆலயத்தை
னி சென்றடையும்.
25 ஆம் திகதி காலை 7.15
ரிக்கு பவனி மீண்டும்
பமாகி மக்கொனை,
வளை, அளுத்கம, மத்துகம
பாக ஹங்வெல்ல பாலத்தை
டயும். பின்னர் பவனி
த்திவெல, வெலிவேரிய, தலுகம
யஇடங்களைச் சென்றடையும்.
அன்று இரவு தேவத்தை
கா மாதா பேராலயத்தில் திருச்
ரூபம் வைக்கப்படும்.
26 ஆம் திகதி அங்கிருந்து
னி புறப்பட்டு கந்தானை,
ளை, மினுவாங்கொடை,
கம வழியே செல்லும்.
பின்னர் குருணாகலை
மாவட்டத்தில் பவனிக்காக
 சொரூபம்
டைக்கப்படும்.



## மன்னார் ஆயரின் ஆசிச் செய்தி

"சமாதானத்திற்கான காலம் இது" சமாதானம் ஏற்படுவதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. இனங்களின் மத்தியில் புரிந்துணர்வு, மன்னிப்பு மனப்பான்மை, ஒற்றுமை ஆகியனவற்றை ஏற்படுத்துவதற்கு கத்தோலிக்கர்கள் ஏனைய மதத்தவர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும். இதற்காகவே மடுத்திருத்தாயாரின் அற்புத திருச்சொரூபம் தென்னிலங்கைக்கு சமாதான பவனியாக எடுத்து வரப்படுகிறது.

மன்னார் ஆயர் வண இராயப்பு ஜோசப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மருதமடு அன்னையின் தென்னிலங்கைக்கான சமாதான பவனி குறித்து 'சுடர்ஒளி'ப் பத்திரிகைக்கு ஆயர் வழங்கிய செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மருதமடு திருத்தலத்தில் ஜுலை 2ஆம் திகதியும் ஆகஸ்ட் 15ஆம் திகதியும் உற்சவங்கள் இடம்பெறுகின்றன. தென் இலங்கையில் இருந்தும் ஏனைய பகுதிகளில் இருந்தும் இரண்டரை லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இந்த உற்சவங்களில் முன்னர் கலந்து கொண்டுள்ளனர்.

அடைக்கலம் தேடி வருபவர்களுக்கு அடைக்கலம் வழங்குவதில் மடுமாதா ஆலயம் என்றும் பின் நின்றதில்லை. 90ஆம் ஆண்டுகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 32ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்த ஆலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர்.



இப்பொழுது சுமார் 9000 பேர் அகதிகளாகத் தங்கியிருக்கின்றனர். போரின் நிமித்தம் பாதிப்புக்குள்ளான மக்கள் இங்கு அடைக்கலம் தேடி வருவதற்குத் தயங்குவதில்லை.

நோய் மற்றும் இயற்கை அழிவுகளின் போதும் பெரும் எண்ணிக்கையானோர் இங்கு அடைக்கலம் தேடி வருவதுண்டு.

சமாதானத்துக்காக இன்று நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

"நித்தியவிளக்கு" கடந்த ஆறு வருடங்களாகத் தொடர்ந்து மாதாவின் பாதத்தடியில் ஒளிவிட்டுப் பிரகாசித்து வருகிறது. "மருதமடு மாதாவே! எங்கள் நாட்டுக்கு நிரந்தர சமாதானத்தைத் தந்திடும்" என்ற வாசகம் மாதாவின் பாதத்தடியில் வைக்கப்பட்டுள்ளது. தினமும் காலை திருப்பலிக்குப் பின் " நற்கருணை எழுந்தேற்றம்" செய்யப்பட்டு இரவு 8 மணி வரையில் பேணப்படுகிறது.

சகல மக்களும் இலங்கையைத் தாய் வீடாக நினைத்து சகோதரபாசத்துடனும் ஒற்றுமையுடனும் கசப்புணர்வுகளை மறந்தும் வாழ வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது நீண்டகாலப் பிரார்த்தனை ஆகும்.

மடுமாதா ஆலயத்திற்கு மக்கள் வர முடியாது என்பதனாலோ அல்லது கொண்டாட்டத்திற்காகவோ உற்சவ கேளிக்கைகளுக்காகவோ திருச்சொரூபம் தென்னிலங்கைக்கு எடுத்து வரப்படவில்லை.

இனங்கள் மத்தியில் புரிந்துணர்வு, மன்னிப்பு மனப்பான்மை, ஒற்றுமை ஆகியனவற்றை ஏற்படுத்தும் நோக்குடனேயே திருத்தாயாரின் சொரூபம் எடுத்து வரப்படுகிறது.

மடுமாதா ஆலயத்தின் 450 வருடகால சரித்திரத்தில் முதல் தடவையாக சமாதானத்திற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தப் பவனியின் போது கிடைக்கும் காணிக்கைகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கும் சமாதான முயற்சிகளுக்கும் செலவிடப்படும். தேசிய நீதி மற்றும் சமாதானத்திற்கான கத்தோலிக்க ஆணைக்குழு இப்பணியை மேற்கொள்ளும்.

## ங்களுக்காக வேண்டிக்கொள்ளும்


சகலவிதமான அரிசி வகைகளை
மொத்தமாக நியாய விலையில்
பெற்றுக்கொள்ள

AMIEKO ENTERPRISE
No. 31, 4th Cross Street,
Colombo - 11.
Phone: 430772 / 347306

எஸ்.சுப்பிரமணியம் அன் கோ பிரைவேட் லிமிடெட்
160, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 435825

NEW CHITRA
Metalware Shop
Manufacturers of: Brassware, Sports cups, Shields, Name Boards, Gift items, Badges, Medals, Trophies

SHOW ROOM:-
148A, Sri Ramanathan Street, Colombo-13.
Tel: 01-335313
(near St. Anthony's Church)

FACTORY:-
83, Ranawana Road, Katugastota
Tel: 078-72975, 08-498261

R.T.K. VIDEO VISION
No.57/1, Manning Place, Colombo-06. Tel : 505059
NEW BRANCH
No.59, Hampden Lane, Colombo-06. Tel : 074-516240

விமான நிலைய போக்குவரத்து வசதிகள்,
இருவழிப் பயணக் கட்டணம் ரூபா. 1050/-
EMERALD TOURS
உள்ளூர் சுற்றுப் பயணங்கள்,
வெளிநாட்டு சுற்றுலாவாளர்கள்,
கல்யாண வைபவங்களுக்கு கொழும்பிலிருந்து
கார்கள், வான்கள் ஏ.சி. வசதிகளுடன்
ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
EMERALD TOURS - 587596, 581365

K. Jeeva
Proprietor
Saloon de Jeeva
Complete beauty Care for Gents, Ladies & Children.
Hair Style & Hair Dressing.
T.P. 593268
257/B, Galle Road, Wellawatte, Colombo-06

# ஆசிரியர்-மாணவன் அடிதடி! அதிபர் மாட்டிக்கொண்டார்!!

## கோயில் குருக்களால் பிரச்சினை ஜனாதிபதி வரை சென்றது

பாடசாலை ஒன்றில் மாணவர் ஒருவர் ஆசிரியரினால் தாக்கப்பட்டுக் காயம் அடைந்தார்.

அவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் மருந்து கட்டுவித்தனர் சக மாணவர்கள் சிலர். தன்னிடம் அனுமதி பெறாது சென்றதாகக்கூறி அவர்களை அதிபர் வீட்டுக்கு அனுப்பினார்.

இந்த விவகாரம் கோயில் குருக்கள் ஒருவருக்குத் தெரியவரவே அவர் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளருக்குத் தகவல் கொடுத்தார்.

அதை அடுத்து அதிபர், பாடசாலைத்திறப்பு என்று கூறி ஒரு திறப்புக் கோவையை கோயில் குருக்களிடம் கொடுத்து அனுப்பினார். பாடசாலையை கோயில் குருக்களையே நடத்துமாறு அதிபர் சொன்னார் என்று திறப்புக் கோவையைக் கொண்டு வந்த மாணவன் குருக்களிடம் தெரிவித்தானாம்.

கோயில் குருக்கள், மன்னார் கல்வி வலயத்துக்குச் சென்று சம்பவம் பற்றி முறையிட்டார். அந்தத் திறப்புக் கோவையை கல்வி அதிகாரியிடம் ஒப்படைத்தார்.

பாடசாலை அதிபர், கோயில் குருக்கள் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினை மன்னாரில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இதில் சம்பந்தப்பட்ட குருக்கள் மன்னார் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயக்குருக்களாக இருந்தவரும் மன்னார்த்தீவு இந்து ஆலயங்களின் பிரதம குருக்களுமான சிவ ஸ்ரீ எஸ். மனோகரசர்மா.

பாடசாலை நிர்வாக்த்தில் கோயில் குருக்கள் தலையிடுவதாக அதிபர் குற்றஞ்சாட்டுகிறார்.

பாடசாலையை நடத்துமாறு கூறி திறப்பைத் தம்மிடம் அனுப்பியதன் மூலம் பாடசாலை அதிபர் தன்னை அவமதித்து விட்டார் என்கிறார் கோயில் குருக்கள்.

இந்த விவகாரம் ஜனாதிபதி வரை சென்றது.

கோயில் குருக்கள் ஜனாதிபதிக்கும், மன்னார் கல்விப் பணிப்பாளருக்கும் இந்த விவகாரம் குறித்து முறையிட்டுள்ளார்.

பெப்ரவரி 22 திகதியிட்டு ஜனாதிபதியிடமிருந்து கோயில் குருக்களுக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் பதிலை எழுதி இருந்தார்.

இந்த விவகாரம் குறித்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சுச் செயலாளரை ஜனாதிபதி பணித்துள்ளார் என்று பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயில் குருக்களின் முறைப்பாடு தொடர்பாக பிரஸ்தாப பாடசாலை அதிபருக்கு மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் கடிதம் ஒன்றை அனுப்பி அதன் பிரதியை கோயில் குருக்களுக்கும் அனுப்பி இருந்தார்

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''பாடசாலைத் திறப்பை தன்னிடம் ஒப்படைத்தமை வேதனைக்குரிய விடயம் என்று மன்னார்த்தீவு இந்து ஆலயங்களின் பிரதம குருக்களான கலாபூஷணம் சிவஸ்ரீ எஸ். மனோகரசர்மா குறிப்பிட்டுள்ளார். இத்தகைய நடவடிக்கையைத் தாங்கள் தவிர்த்திருக்கலாம். இவ்வாறான நிகழ்வுகள் இனியும் இடம்பெறா வண்ணம் நிர்வாகத்தை நடத்துமாறு ஆலோசனை வழங்குகிறேன். இருப்பினும் பாடசாலை நிர்வாகத்தில் பிறர் தலையீடு இல்லாதபடி, ஆசிரியர்கள் மாணவர்களை நெறிப்படுத்துவதோடு, பெற்றோருக்கும் அறிவுறுத்தல் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் எதிர்காலத்தில் பாடசாலைச் சட்டதிட்டங்களுக்கு அமையாத மாணவர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்''

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிவராத்திரியையொட்டி மன்னார் சென்றபோது மனோகரசர்மா குருக்களைச் சந்திக்க நேரிட்டது. இந்த விவகாரம் குறித்து அவரிடம் கேட்டோம். அவர் சொன்ன விடயங்கள் அதிர்ச்சியைத் தந்தன. அவர் கூறியதாவது:-

''ஜனவரி 18ஆம் திகதி உப்புக்குளம் ஸ்ரீசித்திவிநாயகர் கோயிலின் முன்பாக கல்லூரி மாணவர்கள் சிலர் சீருடையுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் அங்கு நீண்ட நேரமாக நின்றது எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவர்களை அழைத்து எதற்காக இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டேன். அப்பொழுது அவர்கள் சொன்ன விடயம் எனக்கு ஆச்சரியத்தை அளித்தது.''

''பாடசாலையின் வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த மாணவன் ஒருவரை அப்பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தாக்கினார். மாணவன் காயம் அடைந்தார். காயம் அடைந்த மாணவனை நாம் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று மருந்து கட்டி விட்டுத் திரும்பி வந்தபோது, அதிபர் எம்மை அழைத்து, வெளியே செல்வதற்கு அனுமதி பெறாத குற்றத்துக்காக, ஐந்து நாட்களுக்கு பாடசாலைக்கு வர வேண்டாம் என்று கூறி எம்மை அனுப்பி விட்டார்'' என்று அவர்கள் சொன்னார்கள்.

''அங்கு நின்ற மாணவர்கள் அனைவரும் உயர்வகுப்பு மாணவர்கள். தற்போதைய நாட்டு நிலைமையில் அவர்கள் அங்கு கூட்டமாக நிற்பது வீண் சந்தேகத்தை ஏற்படுத்தும் என்று கருதினேன். இதனால் மன்னார் கல்விப் பணிப்பாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடந்த விடயத்தைக் கூறினேன்.

''மாணவர்களைப் பாடசாலை செல்லும்படி கூறுமாறும் தாம் அதிபருடன் கதைப்பதாகவும் கல்விப்பணிப்பாளர் கூறினார்.

மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு நான் எனது கடமையில் இருந்தேன் அப்போது, அந்தப்பாடசாலை மாணவன் ஒருவர் திறப்புக் கோவையுடன் அங்கு வந்தார். அதிபர் உங்களிடம் ஒப்படைக்கும்படி பாடசாலைத் திறப்பைத் தந்தார். திங்கட்கிழமை தொடக்கம் உங்களைப் பாடசாலையைப் பொறுப்பெடுத்து நடத்துமாறு அதிபர் கூறினார் என்று அந்த மாணவன் சொன்னான்.

எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. திறப்புக் கோவையை எடுத்துக் கொண்டு மன்னார் கல்வித் திணைக்களத்துக்குச் சென்றேன். அங்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றாவிடம் திறப்புக் கோவையை ஒப்படைத்துவிட்டு நடந்ததைக் கூறினேன்.

இப்படிக் குருக்கள் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதிக்கும் மன்னார் கல்விப்பணிப்பாளருக்கும் மட்டும் அல்ல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மன்னார் அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் தாம் கடிதம் அனுப்பியதாகக் குருக்கள் கூறினார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாகக் கல்லூரி அதிபரிடம் கேட்டோம்.

கேள்வி : இந்தப் பிரச்சினை தொடர்பாகக் குருக்கள் கூறிய விடயங்கள் உண்மையா?

பதில் : பிரச்சினை என்னமோ நடந்தது உண்மைதான். ஆனால் மாணவனே ஆசிரியரை முதலில் தாக்கினார். அதன் பின்பே ஆசிரியர் கையில் இருந்த தடியால் மாணவனை அடித்தார்.

கே : நீங்கள் பாடசாலை மாணவன் ஒருவனிடம் பாடசாலைத் திறப்புக்களை கொடுத்துக் குருக்களை பாடசாலையைப் பொறுப்பேற்று நடத்தும்படி கூறினீர்களாமே ?

ப: திறப்பைக் கொடுத்து திங்கட்கிழமை முதல் பாடசாலைப் பொறுப்புக்களை ஏற்று நடத்தும்படி கூறியது உண்மை. ஆனால் அது ஒரு வேகத்தில் நிகழ்ந்த சம்பவம். கொடுத்த திறப்பும் பாடசாலைத் திறப்பல்ல, பழைய திறப்புத்தான்.

கே : ஏன் அப்படித் திறப்பைக் கொடுத்து பாடசாலைப் பொறுப்பை ஏற்று நடத்தும்படி கூறினீர்கள்?

ப : அரச நிர்வாகம் ஒன்றில் தனியார் தலையிட முடியாது. அதனால்தான் அப்படிச் செய்தேன்.

கே : நீங்கள் அந்த ஆசிரியர் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா?

ப : அவர் எமது பாடசாலையில் தற்காலிக நியமனத்தின் பேரில் பணியாற்றுபவர்.

இது தொடர்பாக மன்னார் வாழ் மக்கள் சிலரிடம் கேட்டோம். அவர்கள் கூறியதாவது:-

✱ ஒரு மாணவனை ஆசிரியர் கண்டிக்கலாம். அதற்காக தடியால் தாக்கி மண்டையை உடைப்பது சரியா?

✱ சம்பவம் நடந்த உடனேயே ஆசிரியர் மீது ஏன் அதிபர் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை?

இந்த விவகாரம் தற்பொழுது ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் கல்வி அமைச்சுச் செயலாளரால் விசாரிக்கப்பட இருக்கிறது. தத்தமது செயல்களை நியாயப்படுத்த இரு தரப்பினரும் ஓடித்திரிவதாக மன்னார்த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

- ஜெ.பிறேம்குமார்.

# வீட்டில் பதிவாகிய இசையை வீதியில் கேட்டு ரசிக்க வசதி

*வீட்டில் பதிவாகியுள்ள இசையை வீதியில் கார்ச் சவாரி செய்யும் போது கேட்டுமகிழ விஞ்ஞானம் வழிசெய்திருக்கிறது.*

*காரில் அடிக்கடி நீண்ட தூரம் பிரயாணம் செய்பவர்கள் சலித்துக் கொள்ள வேண்டியதில்லை. மாறாகத் தங்கள் பயணத்தைக் குஷிப்படுத்தத் தேவையான மல்ட்டி மீடியா வசதிகளுடன் கூடிய பொழுது போக்கு அம்சங்களைத் தமது கார்களில் அமைத்துக் கொள்ள இன்றைய தொழில்நுட்பம் வாய்ப்பளித்துள்ளது.*

*அமெரிக்காவின் ஒரு நிறுவனம் எம்.பி.3 எனும் தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தி டிஜிட்டல் ஜூக் பெட்டி என்ற சாதனத்தைத் தயாரித்துள்ளது. இதன் மூலம் கார்ச் சாரதிகள் தங்கள் வீட்டிலுள்ள கம்பியூட்டரில் பதிவாகியுள்ள பாடல்களையோ, இசையையோ தங்களது காரில் உள்ள ஒலிப்பதிவுக் கருவிக்கு மாற்றிக் கேட்டு ரசிக்க முடியும்.*

*அதாவது கம்பியூட்டர் டிஸ்க்குகளில் உள்ள நூற்றுக்கணக்கான மணி நேரங்கள் அடங்கிய இசைப்பிரிவுகள் எம்.பி.3 பைல்களில் சுருக்கப்பட்ட வடிவத்தில் சேமிக்கப்பட்டு கார்களுக்கு மாற்றப்படுகிறது.*

*இத்தகைய எம்.பி.3 தொழில்நுட்பம் அடங்கிய ஜூக் பெட்டிகள் சில தேர்ந்தெடுக்கப்பட்ட கார்களுக்குக் கிடைக்கவிருக்கின்றன.*

*இனி கார்ச் சாரதிகள் தங்கள் கம்பியூட்டர்களில் உள்ள எந்த இசையையும் எவ்வளவு மணி நேரமானாலும் தங்கள் கார்களில் பயணித்தபடியே கேட்டு மகிழலாம்.*

*இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நேப்ஸ்டர் என்னும் இலவச இசை சேவை நிறுவனம் இசைத் துறையில் ஓர் புரட்சியையே ஏற்படுத்தியுள்ளது. இது சுமார் 40 மில்லியன் எம்.பி.3 தொழில்நுட்ப நுகர்வோரை உருவாக்கியுள்ளது.*

*டெல்ஃபி எனும் மோட்டார் வாகனப் பாகங்கள் தயாரிக்கும் நிறுவனம், வாகனங்களுக்கான செயற்கைக்கோள் டிஜிட்டல் ரேடியோவை அறிமுகப்படுத்தவுள்ளது.*

*இதன் மூலம் தடையில்லா, டிஜிட்டல் தரத்துடன் இசை மற்றும் நிகழ்ச்சிகளை வாகனங்களில் செயற்கைக்கோள் மூலம் டெல்பி ஒலிபரப்பவுள்ளது.*







டாக்டர்: எருமை மாட்டின் மேல் எமன் வாற மாதிரி அடிக்கடி கனவு வருகுது என்று சொல்லி மருந்து வாங்கிட்டுப் போனீங்களே, இப்ப எப்படி இருக்கு..?

நோயாளி: ''கொஞ்சம் பரவாயில்லை டாக்டர். இப்ப எருமை மாடு மட்டும்தான் வருகுது.

# நோயாளர்கள் உற்பத்தி பணியில் யாழ் ஆஸ்பத்திரி!

## ஆச்சரியம், ஆனால் உண்மை; நேரில் பார்ப்பவர்களுக்குத் தெரியும்

யாழ். போதனாவைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரினால் யாழ். நகர மக்களின் சுகாதாரத்துக்குப் பெரும் பங்கம் ஏற்படும் ஆபத்து உருவாகி இருக்கிறது.

ஆஸ்பத்திரி வளவுக்குள் இருக்கும் கிடங்குகளில் சேமிக்கப்படும் கழிவுநீர் - அதாவது நோயாளரின் மலம், சலம் உட்பட சகல கழிவுகளும் - அங்கிருந்து நிலத்தடிக் குழாய்கள் மூலம் பண்ணைப் பகுதிக்கு 'பம்ப்' செய்யப்பட்டு கடலுக்குள் அகற்றப்படுகின்றன.

இந்த நிலத்தடிக் குழாய்கள் மிகப் பழைமை வாய்ந்தவை. அத்துடன் குழாய்களில் வெடிப்புகள் உள்ளன.

இந்த வெடிப்புகள் ஊடாக கழிவு நீர் ஆங்காங்கே தரைக்கு மேலே கசிகின்றது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக - வீதியின் நடுவே ஓரிடத்திலும் இந்தக் கழிவு நீர் தினமும் நிலத்துக்கு வெளியே கசிகிறது.

இதனால் அப்பிரதேசத்தில் சகிக்க முடியாத துர்நாற்றம் எழுகிறது.

நகரில் மக்கள் தினமும் பெரும் எண்ணிக்கையில் கூடும் கேந்திர பகுதியில் - வர்த்தக நிலையங்களும், உணவுச்சாலைகளும் அமைந்துள்ள இடத்தில் - இவ்வாறு கழிவு நீர் கசிவது நகர மக்களின் சுகாதாரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கிறது. ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறும்கழிவுகள் மிகவும் ஆபத்தான நோய்க்கிருமிகளைப் பரப்பக்கூடியவை.

போரினால் சிதைவுற்றுக் கிடக்கும் யாழ். நகரத்தில் தினமும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுத்திகரிப்புப் பணிகளை இந்தக் கழிவு நீர் கசியும் விவகாரம் அர்த்தமற்றதாக்கிவிட்டிருக்கிறது.

ஒருபுறம் கால்வாய்களையும் பொது இடங்களையும் சுத்திகரிக்கும் பணிகள் நடைபெற, மறுபுறம் ஆபத்தான கழிவு நீரை நகரின் மையப்பகுதியில் கசியவிட்டிருப்பது வேடிக்கைக்குரியது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சில வர்த்தகர்களும் அப்பகுதியில் ஓட்டோ மற்றும் கார்களை வாடகைக்கு சேவையில் ஈடுபடுத்துவோரும் ஆஸ்பத்திரிக் கழிவுகளால் பரவும் சகிக்க முடியாத துர்நாற்றம் குறித்து ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கும் பத்திரிகைகளுக்கும் முறையிட்டிருக்கின்றனர்.

இது ஒரு நீண்டகாலப் பிரச்சினை என்கிறது ஆஸ்பத்திரி நிர்வாகம்.

1990களின் முற்பகுதியிலும் யாழ். ஆஸ்பத்திரிக் கழிவுகள் ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக விக்டோரியா வீதிப் பகுதியில் உள்ள கால்வாயினுள் கசிந்து பெரும் பங்கம் ஏற்படுத்தி இருந்தன.

கழிவு நீரை வெளியேற்ற நிலத்துக்கு அடியில் குழாய்களை அமைக்கும் நடைமுறைக்குப் பதிலாக மற்றைய முறையை அமுல் செய்வது மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று ஆஸ்பத்திரி




வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆஸ்பத்திரியில் இருந்து பண்ணைப் பகுதிவரை உள்ள இந்தக் குழாய்கள் பண்ணைப் பகுதியில் பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் சீராக நீர் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

எனவேதான் கழிவு நீர் 'பம்ப்' செய்யப்படும் நாள்களில் நீரோட்டம் தடைப்பட்டு ஆங்காங்கே தரைக்கு மேலே குழாய்களில் உள்ள வெடிப்புகள் ஊடாக நீர் கசிகின்றது என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நிலத்தடிக் குழாய்களை முற்றாக மாற்றி அமைப்பதற்குப் பெரும் தொகை நிதிச் செலவிலான திட்டம் தேவை. இந்தத் திட்டத்தைப் பொறுப்பேற்று நிறைவேற்றக்கூடிய கட்டடப் பொறியியல் திறுவனங்கள் எதுவும் குடாநாட்டில் இல்லை என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் தொற்று நீக்கும் பிரிவு கூட மிகப் பழைய இயந்திரங்களுடன் இழுத்துப்பிடித்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

கழிவுகளை சுத்திகரித்து வெளியேற்றுவதற்கான வாய்ப்பு, வசதிகள் எதுவுமே அங்கு இல்லை.

எனவே இந்தப் பின்னணியில் யாழ். நகர மக்களின் சுகாதாரத்துக்குப் பெரும் கேடு விளைவிக்கும் செயலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது யாழ். ஆஸ்பத்திரி.

யாழ். மாநகர சபையின் சுகாதாரக் குழுவினரோ கழிவு நீர் கசியும் இடங்களைச் சென்று பார்ப்பதோடு நின்றுவிடுகிறார்கள். "இது மாநகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம் அல்ல" என்று மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்த பல வெளிநாட்டுத் தூதர்கள் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்துத் திருப்தியடைந்த நிலையில் கொழும்பு திரும்பி இருப்பதை அறியமுடிகிறது.

அவர்களுக்குக் காட்டப்பட்ட யாழ்ப்பாணத்தின் மறுபக்கம் எப்படியானது என்பதற்கு இந்தக் கழிவு நீர் கசியும் விவகாரம் ஒன்றே போதுமானது.

ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த சில மாதங்களுக்கு முன் ஏட்டிக்குப் போட்டியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு நேரில் விஜயம் செய்து ஆஸ்பத்திரிப் பிரச்சினைகள் குறித்து ஆழ்ந்த அக்கறையுடன் விசாரித்துச் சென்றிருந்தனர்.

இந்தத் திடீர் விஜயங்கள் ஆஸ்பத்திரி நிலைமையில் எள்ளளவேனும் முன்னேற்றத்தை ஏற்படுத்திவிடவில்லை.

குடாநாட்டு மக்கள் நம்பி இருக்கும் ஒரே மருத்துவ நிலையத்தின் இந்த நிலைமை நோயாளர்கள் கொழும்பையும் ஏனைய இடங்களையும் நாடிச் செல்லவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி வருகிறது.

*— வலிகாமத்தான்*

## பித்தன் பதில்கள்



ப : அரசியல் நீரோட்டத்தில் இணைந்த பின்பு வடக்குகிழக்குப் பிரச்சினை அலைக்குத் தீர்ந்த மாதிரித்தான்...!

எஸ்.ஆர். அபுசாலி, கண்டி
கே : காலியில் இன்னிங்ஸ் வெற்றிபெற்ற இலங்கை அணி கண்டியில் தோற்றுவிட்டதே?



ப : நடுவர்களும் சேர்ந்தே காலைவாரி விட்டார்கள். என்ன செய்வார்கள் வீரர்கள்?

எஸ். சுமித்திரா, வெள்ளவத்தை
கே : இந்தியாவிடம் இனி ஒரு போதும் இராணுவ உதவி கோரப்போவதில்லை என்று அமைச்சர் கதிர்காமர் கூறுகிறாரே...?
ப : சோழியன் குடுமி சும்மா ஆடுமா? பாகிஸ்தானிடம் ஏதோ எக்கச்சக்கமாகக் கேட்கப்போகிறார் போல..

வசந்தா, வெள்ளவத்தை
கே : அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரைக்கு சிகல உறுமயவும் கண்டனம் தெரிவித்திருக்கிறதாமே...?
ப : அப்ப அமெரிக்கத் தூதுவருக்கு இரு பக்கமும் இடி என்று சொல்லுங்கோ...!

ஆர்.கருப்புசாமி, மாத்தளை
கே : பித்தனே..! மலையகத்தில் நடைபெறும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் வடக்கு- கிழக்கு தமிழ்க் கட்சிகளும் கலந்து கொண்டுள்ளனவே! அப்படியென்றால் வடக்கு கிழக்கில்?

கலாரஞ்சனி, மொரட்டுவ
கே : பித்தா...! சூப்பர் அக்டர் கமலஹாசன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?
ப : ஆளவந்தானில் பிஸியாக இருக்கிறார்.

மன்னூர் மைந்தன், யாழ்ப்பாணம்
கே : பித்தனே...! சமாதானத்தை விரும்பாத தமிழ்க் கட்சிபற்றி என்ன நினைக்கிறீர்கள்?.
ப : பிழைக்கத் தெரிந்தவர்கள்.

ஆர்.தூயவன், மன்னார்
கே : இன்னும் இரண்டு மாத காலத்தில் புலிகளுடன் பேச்சு நடக்கும் என்று ஜனாதிபதி சொல்லுகிறாரே...!
ப : உலக நாடுகள் நெருக்குதல் கொடுக்கின்றன. ஜனாதிபதியும் ஏதாவது ஒன்றைச் சொல்லித் தப்ப வேண்டுமே...!



கோமதி, தெஹிவளை
கே : பித்தனே...! குறட்டை விட்டுத் தூங்கும் கணவன் பற்றி...?
ப : மனைவியின் பெருமூச்சு அவருக்கு எங்கே கேட்கப் போகிறது.

ஆர். மிதுனா, சிலாபம்
கே : இலங்கையின் அரசஊடகங்களுக்கு விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளாகத் தென்படுகிறார்கள். அதே சமயம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் அவர்கள் போராளிகளாகவும், தீவிரவாதிகளாகவும் போற்றப்படுகிறார்களே...?
ப : சேகுவேரா ஒரு காலத்தில் அமெரிக்கர்களுக்குப் பயங்கரவாதியாகத் தென்பட்டார். ஆனால் இன்று சமீபகால புரட்சியாளர்களில் சேகுவேராவின் பெயரே முன்னணியில் இருந்து வருகிறது.

கே. சாந்தன், கொடாஞ்சேனை
கே : எதிர்பார்த்த அளவுக்கு கிரிக்கெட் சபைத் தேர்தல் சூடு பிடிக்கவில்லையே?
ப : திலங்கசுமதிபாலவுக்குஅவால் விட்டவர்கள் ஒதுங்கிவிட்டனர். போட்டி வேட்பாளர்கள் இருவரும்ராஜினாமாச் செய்யதிலங்க போட்டியின்றி தெரிவாவார் என்றும் கூறுகிறார்கள்.

மு. தனிகைச்செல்வன், மட்டக்களப்பு



கே: தேர்தலுக்காக போலி வேடம் பூண்டு மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகள் பற்றி...!
ப : தமிழ்நாடு சென்று ஜெயலலிதாவிடம் பாடம்கற்றிருப்பார்களோ?

எம்.எச். ரிஸாமா, மாவனெல்லை
கே: பித்தனே...! சிட்டிசன் நாயகி வசுந்தராதாஸைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்...!
ப : கமலின் அழகான அறிமுகம். 'கிக்' கான பாடல்களைப் பாடுவதில் வல்லவர்.

ரா. சேகர், கம்பளை
கே : யாழ்நூலக எரிப்பைப் பற்றி ஓரிரு வரிகள் பித்தனே...!
ப : வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நிகழ்வு.

## கம்பன் விழாவுக்காக பேச்சு, கவிதைப் போட்டி

கொழும்புக் கம்பன் கழகம் ஆண்டு தோறும் எடுக்கும் 'கம்பன்விழா' இவ்வாண்டும் மே மாதம் 4 ஆம் திகதி முதல் ஐந்து தினங்களுக்கு நடைபெறவுள்ளது. வழமைபோலவே இவ்வாண்டும் இவ்விழாவினை ஒட்டி அமரர் துரைவிஸ்வநாதன் ஞாபகார்த்தப் பேச்சு மற்றும், கவிதைப் போட்டிகளைக் கம்பன் கழகம் நடத்தவுள்ளது.

உடன் வழங்கப்படும் தலைப்பில் பேசும், கவிதை இயற்றும் திறமையுள்ளோர் மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளலாம். 25 வயதிற்கு உட்பட்ட எவரும் இப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் ச. ஆ. பாலேந்திரன், கொழும்புக்கம்பன் கழகம், 48-புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13. எனும் முகவரிக்கு 05.04.2001க்கு முன் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்.

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறும் மூன்று போட்டியாளர்களுக்கு தங்க, வெள்ளி, வெண்கலப்பதக்கங்கள் அமரர் துரைவிஸ்வநாதன் ஞாபகமாக வழங்கப்பட உள்ளன.

போட்டி விவரங்கள் தேவையானோர் 321 349 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளும் படி கேட்கப்படுகிறார்கள்.

## நூல் வெளியீட்டு விழா

*ஒலிபரப்புத் துறையில் பொன் விழாக் காணும் "வானொலிக் குயில்" திருமதி இராஜேஸ்வரி சண்முகத்தின் "காற்றின் சுவடுகள்" (நெஞ்சில் நிறைந்தவையும், நினைவில் பதிந்தவையும்) நூல் வெளியீட்டு விழாவும் பாராட்டு விழாவும் 16.03.2001 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறுகிறது.*

# இலங்கை வீரர்களுக்கு சோதனைக் காலம்!

இலங்கைக் கிரிக்கெட் நாயகர்களுக்கு இது சோதனைக் காலம் போலும்!

கண்டியில் நடைபெற்ற இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியில் 3 விக்கட்டுகளால் தோல்வியுற்றது இலங்கை அணி. 10 வருடங்களுக்குப் பின் முதன்முறையாக இங்கிலாந்திடம் இலங்கை அணி தோற்றுள்ளது.

இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸ் இலங்கைக்கு அதிஷ்டமில்லாததாக அமைந்துவிட்டது.

நடுவரின் தவறான தீர்ப்பினால் அநியாயமாகக் களத்தை விட்டகன்றார் அணித்தலைவர் சனத் ஜயசூரிய. அதனால் ஏற்பட்ட உணர்ச்சிகளால் தனது தலைக்கவசத்தை வீசியெறிந்தார். இது அவருக்கு மேலும் சோதனையை ஏற்படுத்தி விட்டது.

இச்செய்கைக்காக அவரது ஊதியத்தில் அறுபது சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் இரு டெஸ்ட் மற்றும் இரண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்கு ஆறுமாதகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட தடைக்கும் ஆளானார் சனத்.

இலங்கையின் பிரதான துரும்புச் சீட்டான முத்தையா முரளிதரனும் இம்முறை ஏமாற்றிவிட்டார்.

இலங்கையின் சார்பில் 300 விக்கட்டுகளை வீழ்த்திய ஒரே வீரர் அவர். சராசரியாக ஒரு இன்னிங்ஸில் 3 விக்கட்டுகளுக்கு மேல் வீழ்த்தும் சாதனையாளர். ஆனால் கண்டி டெஸ்ட்டின் இரண்டாவது இன்னிங்ஸில் 27 ஓவர்கள் பந்துவீசிய போதும் ஒரு விக்கட்டை மாத்திரமே அவர் கைப்பற்றினார்.

வெளிநாட்டு மைதானங்களில் கூட அனாயாசமாக விக்கட்டுகளை வீழ்த்துபவர் முரளி. இம்முறை தனது சொந்த மண்ணிலேயே அவரால் சோபிக்க முடியவில்லை.

இப்போட்டியில் தமக்குச் சிறிதளவும் அதிஷ்டமிருக்கவில்லை என்கிறார் சனத் ஜயசூரிய.

இவர்கள் நிலை இப்படியிருக்க, இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவும் வீண் சச்சரவுகளில் சிக்கியுள்ளார். அசோக வித்தியாலய மாணவர்கள் சிலரைத் தாக்கியதாக அர்ஜுன மற்றும் அவருடைய சகோதரர் பிரசன்ன ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் புகழ்பெற்ற பிரஜைகளுள் ஒருவரான அர்ஜுன மேற்படி விவகாரத்தால் ஒரு சந்தேக நபராக நீதிமன்றப் படியேறிக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# தவறான தீர்ப்புகளால் திணறிய டெஸ்ட்

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 3விக்கட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

இரண்டாவது இன்னிங்ஸில் 88 ஓட்டங்களுக்கு முதல் ஆறு விக்கட்டுகளை இழந்தமை இலங்கையின் தோல்விக்கு அடித்தளமானது.

இப்போட்டியில் சதம் குவித்த மஹேல, நஸார் ஹுஸைன் ஆகியோர் இருக்கும்போது இரண்டு இன்னிங்ஸ்களிலும் சிறப்பாகப் பந்து வீசிய டெரன்கொவ் ஆட்ட நாயகனாகத் தெரிவாகியுள்ளார்.



டெரன் கொவ்

பயிற்சிப் போட்டிகளின் போது இருதடவை ஒழுங்கீன நடத்தைக்காக எச்சரிக்கைக்கு உள்ளான கொவ்ஃபிற்கு இப்பரிசு ஒரு ஆறுதல்.

போட்டியில் வீரர்களின் ஆட்டத்தை விட நடுவர்களின் தீர்ப்புகளே மிகவும் முக்கியத்துவம் பெற்றன.

காலியில் நடைபெற்ற முதலாவது போட்டியிலும் நடுவர்களின் தீர்ப்புகள் சில சர்ச்சைக்குரியனவாக இருந்தன. அதில் அநேகமானவை இங்கிலாந்து அணிக்குப் பாதகமானவை.

ஆனால் கண்டி டெஸ்டில் பெரும்பாலானவை இலங்கை அணிக்குப் பாதகமான தீர்ப்புகளே தவறாக அமைந்தன.

அதில் இலங்கை அணித் தலைவர் சனத் ஜயசூரியவுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு ஆட்டத்தின் முடிவையே மாற்றிவிடவல்லது.

தான் எதிர்கொண்ட முதலாவது பந்துவீச்சிலேயே தவறான தீர்ப்பினால் ஆட்டமிழந்தார் சனத். அவர் தொடர்ந்து களத்திலிருந்தால் இலங்கையின் தோல்வியைத் தவிர்த்திருக்கவும்கூடும்.

மேலும் முறையற்ற பிடிகளுக்கு ஆட்டமிழப்பு அறிவிக்கப்பட்டதுடன் ஆட்டமிழப்பு அறிவிக்கப் படவேண்டியபோது அது தவிர்க்கப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் நஸார் ஹுஸைனும் நடுவர்களின் தீர்ப்புகளை யிட்டு அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இலங்கை நடுவர்களைப் பற்றி ஏற்கனவே பலர் புகாரிட்டுள்ளனர். அப்போதெல்லாம் 'தாய்நாட்டுப் பற்று' காரணமாக தமது அணிக்குச் சார்பான தீர்ப்புக்களை அளிக்கிறார்கள் என்றே கருதப்பட்டது.

அப்போது நடுவர்களின் தீர்ப்புகளை விமர்சிப்போரையும் சிலர் குறை கூறினார்கள். இம்முறை இலங்கை அணியே தவறான தீர்ப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கை ரசிகர்கள் பலரின் கோபத்திற்கும் நடுவர் பீ.சி.கூரே ஆளானார்.

இங்கிலாந்து- இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட முதலாவது சுற்றுப்போட்டி ஆகையால் இது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகக் கருதப்படுகிறது.

அதேவேளையில் தவறான தீர்ப்புகள் நிறைந்த ஒரு தொடராகவும் இச்சுற்றுப்போட்டி வரலாற்றில் நினைவு கூரப்பட வாய்ப்புள்ளது.

# முதல் இந்தியர்

இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது இந்திய வீரர் ஹர்பஜன் சிங் ஹட்ரிக் சாதனை புரிந்துள்ளார்.



ஹர்பஜன்

கொல்கத்தா நகரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போது அவர் இச்சாதனையைப் புரிந்தார்.

போட்டியின் முதல்நாளான 11.03.2001 அன்று அவரது 16ஆவது ஓவரில் ஆஸி வீரர்களான ரிக்கி பொன்டிங், அடம் கில்கிறிஸ்ட், ஷேன் வோர்ன் ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இப்போட்டியின் முதலாவது இன்னிங்ஸில் 123 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுகளை வீழ்த்தினார் ஹர்பஜன் சிங்.

1932முதல் இந்தியா டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி வருகிறது. 69 வருடகால டெஸ்ட் வரலாற்றில் இந்தியர் ஒருவர் ஹட்ரிக் சாதனைபுரிந்தமை இதுவே முதற் தடவையாகும்.

இதுவரை மொத்தம் 26 வீரர்கள் டெஸ்ட் போட்டிகளில் ஹெட்ரிக் சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் ட்ரம்பின், மத்தியூஸ், வஸீம் அக்ரம் ஆகியோர் தலா இருமுறை இச்சாதனையைப் புரிந்துள்ளனர். இதில் மத்தியூஸ் ஒரே நாளில் இருமுறை ஹெட்ரிக் சாதனை புரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை டெஸ்ட் ஹெட்ரிக் விக்கட்டுகளை வீழ்த்தியோர் விவரம் பின்வருமாறு:

| பெயர் | அணி/எதிரணி | நகரம் | வி/ஓ. | திகதி |
|---|---|---|---|---|
| 1. எவ். ஸ்பொர்த் | ஆஸி.- இங்கி. | மெல்போர்ன் | 6/48 | 02-01-1879 |
| 2. டபிள்யூ. பேட்ஸ் | இங்கி.-ஆஸி. | மெல்போர்ன் | 7/28 | 20-01-1883 |
| 3. ஜே. பிரிக்ஸ் | இங்கி.-ஆஸி. | சிட்னி | 4/69 | 02-02-1892 |
| 4. ஜி. லெஹ்மன் | இங்கி.-தெ.ஆ. | போர்ட்எலிசபெத் | 8/7 | 14-02-1896 |
| 5. ஜே.ஹார்னே | இங்கி.- ஆஸி. | லீட்ஸ் | 4/50 | 30-06-1899 |
| 6. எச். ட்ரம்பிள் | ஆஸி.-இங்கி. | மெல்போர்ன் | 4/49 | 04-01-1902 |
| 7. எச். ட்ரம்பிள் | ஆஸி.-இங்கி. | மெல்போர்ன் | 7/28 | 08-03-1904 |
| 8. ஜே. மத்தியூஸ் | ஆஸி.-தெ.ஆ. | மஞ்செஸ்டர் | 3/13 | 28-05-1912 |
| 9. ஜே. மத்தியூஸ் | ஆஸி.-தெ.ஆ. | மஞ்செஸ்டர் | 3/38 | 28-05-1912 |
| 10.எம்.அலொம் | இங்கி.-நியூ. | கிறைஸ்ட்சேர்ச் | 5/38 | 10-01-1930 |
| 11.ரி. கோடார்ட் | இங்கி.-தென்.ஆ. | ஜோஹனஸ்போர்க் | 3/54 | 26-12-1938 |
| 12. லோடர் | இங்கி-மே.இ.தீ. | லீட்ஸ் | 6/36 | 25-07-1957 |
| 13.எல். கிளைன் | ஆஸி.-தெ.ஆ. | கேப்டவுன் | 3/18 | 03-01-1958 |
| 14. வெஸ்லி ஹோல் | மே.இ.தீ.-பாக். | லாகூர் | 5/87 | 29-03-1959 |
| 15.ஜி.நிஃபின் | தெ.ஆ-இங்கி | லோர்ட்ஸ் | 4/87 | 24-06-1960 |
| 16.லான்ஸ் கிப்ஸ் | மே.இ.தீ.-ஆஸி. | அடிலெய்ட் | 5/97 | 30-01-1961 |
| 17.பி.பெத்ரிக் | நியூ.-பாக். | லாகூர் | 3/103 | 10-10-1976 |
| 18. கொட்னி வோல்ஸ் | மே.இ.தீ.-ஆஸி. | பிரிஸ்பேன் | 4/62, 3/61 | 20-11-1988 |
| 19. மத்தியு ஹியூஸ் | ஆஸி-மே.இ.தீ. | பேர்த் | 5/103, 8/87 | 04-12-1988 |
| 20. டேமியன் பிளமிங் | ஆஸி.-பாக். | ராவல்பிண்டி | 3/86 | 09-10-1994 |
| 21.ஷேன் வோர்ன் | ஆஸி-இங்கி. | மெல்போர்ன் | 3/16 | 29-12-1994 |
| 22.டொமினிக் கோர்க் | இங்கி-மே.இ.தீ. | மஞ்செஸ்டர் | 4/111 | 30-07-1995 |
| 23.டெரன்கொவ் | இங்கி.-ஆஸி. | சிட்னி | 3/61 | 02-01-1999 |
| 24.வசீம் அக்ரம் | பாக்-இலங். | லாகூர் | 4/30 | 06-03-1999 |
| 25.வசீம் அக்ரம் | பாக்-இலங். | டாக்கா | 3/33 | 14-03-1999 |
| 26.நுவான் சொய்ஸா | இலங்-ஸிம். | ஹராரே | 3/22 | 26-11-1999 |
| 27.அப்துல் ரஸாக் | பாக்-இலங். | காலி | 3/35 | 21-01-2000 |
| 28.கிளென் மெக்ராத் | ஆஸி-மே.இ.தீ. | பேர்த் | 3/48 | 01-12-2000 |
| 29.ஹர்பஜன் சிங் | இந்தி-ஆஸி. | கொல்கத்தா | 7/123 | 11-03-2001 |

(இங்கி:இங்கிலாந்து, ஆஸி: அவுஸ்திரேலியா,மே.இ.தீ:மேற்கிந்தியத் தீவுகள், தெ.ஆ.: தென்னாபிரிக்கா, பாக்: பாகிஸ்தான், இலங்:இலங்கை,ஸிம்: ஸிம்பாப்வே,இந்தி: இந்தியா, ஓ.வி. குறித்த இன்னிங்ஸில் பெற்ற மொத்த விக்கட்டுகள்,கொடுத்த ஓட்டங்கள்)

# சார்ஜா போட்டிகள் ஏப்ரல் 8இல் ஆரம்பம்

கொகாகோலா கிண்ணத்திற்கான முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஏப்ரல் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சார்ஜாவில் நடைபெறும் இப் போட்டிகளில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன. ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளை தலா இருமுறை எதிர்த்தாடவுள்ளன.

சகல போட்டிகளும் பகல் - இரவு போட்டிகளாகவே நடைபெறும். இலங்கை நேரப்படி பிற்பகல் 5.00 மணிக்கு இப்போட்டிகள் ஆரம்பமாகும்.

தெற்காசியாவைச் சேர்ந்த இவ்வணிகளுக்கிடையிலான போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட காலத்திற்குப் பின் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் ஒரே சுற்றுப் போட்டியில் மோதவுள்ளதால் இப்போட்டிகள் கிரிக்கெட் ரசிகர்களால் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றன.

**போட்டிகள் விவரம்:**

- ஏப்ரல் 8: பாகிஸ்தான் - இலங்கை
- ஏப்ரல் 10: இந்தியா- இலங்கை
- ஏப்ரல் 12: இந்தியா -பாகிஸ்தான்
- ஏப்ரல் 13: இந்தியா -இலங்கை
- ஏப்ரல் 15: இந்தியா -பாகிஸ்தான்
- ஏப்ரல் 17: பாகிஸ்தான்- இலங்கை
- ஏப்ரல் 20: இறுதிப் போட்டி

## திருத்தம்

கடந்தவாரம் 'கப்டன் கூல் சூடானபோது...' எனும் தலைப்பில் வெளியான செய்தியில் ஓரிடத்தில் பிரசன்ன ரணதுங்க என்பதற்குப் பதிலாக தம்மிக ரணதுங்க என்ற பெயர் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தம்மிக அவ்விடயத்தில் தொடர்பற்றவர்.

இதே செய்தியில் ரணதுங்கவின் தாயார் வீட்டிலுள்ள பேசும் திறனற்ற பணியாளர் ஒருவர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் பெண் பணியாளர் அல்லர் ஆண் என்பதே சரியானது. தவறுகளுக்கு வருந்துகிறோம்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# எவ்.ஏ. கிண்ணத்திற்கு 116 கழகங்கள் மோதல்

இவ்வருடத்திற்கான எவ்.ஏ கிண்ணக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 116 கழகங்கள் பங்குபற்றுகின்றன. 30 மைதானங்களில் மொத்தம் 114 போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் நொக்அவுட் (விலக்கல்) அடிப்படையில் நடைபெறுகிறது. காலிறுதிக்கு முன் 4 சுற்றுக்களை இப்போட்டித் தொடர் கொண்டுள்ளது.

1949 ஆம் ஆண்டுமுதல் எவ்.ஏ கிண்ணப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த வருடம் ரட்ணம் கழகம் சாம்பியனானது. சோண்டர்ஸ் கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இவ்விரு கழகங்களோடு கடந்த வருடம் அரையிறுதியில் பங்குபற்றிய றினோன், புளூ ஸ்டார் ஆகிய கழகங்கள் இம்முறை நேரடியாகக் காலிறுதிக்கு முன்னரான சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் தற்போது நடைபெறும் பிரீமியர் லீக் போட்டிகளில் பங்கு பற்றும் 18 கழகங்கள் இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளன.

இவ்வருடத்திற்கான எவ்.ஏ கிண்ணப் போட்டிகளுக்கு 'சாப்' இலத்திரனியல் பொருட்களைச் சந்தைப் படுத்தும் பிரவுன் அண்ட் கம்பெனி நிறுவனம் அனுசரணை வழங்குகின்றது.

இச்சுற்றுப் போட்டிக்காக 30 லட்சம் ரூபாவை இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்திற்கு பிரவுன் அண்ட் கம்பனி வழங்கியுள்ளது. இலங்கையில் ஏற்கனவே கிரிக்கெட் ஹொக்கி, வலைப்பந்தாட்டம் என்பனவற்றுக்கு இந்நிறுவனம் அனுசரணை வழங்கியுள்ளது. எனினும் கால்பந்தாட்டத்துறையுடன் இணைந்துள்ளமை இதுவே முதற் தடவையாகும். பிரிட்டனின் பிரபல கால்பந்தாட்டக் கழகமான மஞ்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்கும் மலேஷிய கால்பந்தாட்டச் சம்மேளனத்திற்கும் சாப் தயாரிப்பாளர்களே பிரதான அனுசரணையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



சாப் எவ்.ஏ. வெற்றிக்கிண்ணத்தை பிரவுன் அண்ட் கம்பனி அதிகாரிகள் கால்பந்தாட்ட சம்மேளன அதிகாரிகளிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

இவ்வருடத்திற்கான எவ்.ஏ கிண்ணப் போட்டிகளில் தகுதிகாண் சுற்று கடந்த 3ஆம் திகதி ஆரம்பமானது. முதலாவது சுற்று எதிர்வரும் 24,25,31ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இரண்டாவது சுற்று ஏப்ரல் 21,22ஆம் திகதிகளிலும் மூன்றாவது சுற்று மே மாதம் 5,6ஆம் திகதிகளிலும் முன்காலிறுதிச் சுற்று மே 19,20ஆம் திகதிகளிலும் காலிறுதிச் சுற்று ஜூன் 2,3ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

# சுற்றி வளைப்பு

சுடர் ஒளி சிறுகதை

க. திவ்வியன்

வயல்களும் வாழைகளும், கன்னிகளும் கிளைமோர்களும் கொண்ட மண்ணையுடைய எங்கள் கிராமத்திலே எட்டுக் கடைகளும் ஓர் அரைக்கும் ஆலையும் மட்டுமே இயங்கி வந்தன. கால ஓட்டத்திலே சீருடையினரின் கடை ஒன்றும் அங்கு திறந்து வைக்கப்பட்டது. சுமாராக ஒரு கிராமத்திற்கேற்ற மக்கள் வசிப்பதால் வீதிகளும், கடைகளும், வீடுகளும் கலகலத்த படிதானிருக்கும். இருந்தபோதிலும் இறுதியாக நடந்த உக்கிரமான தாக்குதலினால் ஏற்பட்ட பேரிழப்புக் காரணமாக மாலை ஆறு மணிக்குக் கடைகளை மூடிவிட வேண்டும் என்பது உத்தரவு. கால் மணித்தியாலம் கூடுதலாகக் கடையைத் திறந்தவர்கள் பலர் கன்னத்தி வறை வாங்கிய சோகக் கதைகளைச் சொன்னால் வெட்கக்கேடு. ஆறு மணியென்றால் ஆட்கள் என்ன ஆடுமாடுகள் கூட வீட்டிலடைக்கப்பட்டுவிடும்.

அவர்கள் வந்த அடுத்த மாதமே பூரணக்காவின் மகன் ராகுலனின் தங்கையும் அவளுடைய மூன்று தோழிகளும் கைதாகினர். அதன் பின்னர் தகவல் எதுவுமில்லை.

பெண் கிளிக் கூட்டம் காவலரணருகே வருகின்ற வேளை அவர்களுக்காக காத்திருப்பவர்கள் "தங்கச்சி எங்க போறத்து?" என்று தொடங்குவார்கள். கேள்விகள் மெல்ல மெல்ல வளர்ந்து "உங்களுக்கு என்னாப் பேரு?" "நாம் ஒங்கள காதலிக்கிறம்" என்பது வரை செல்வது ஊரவருக்குத் தெரியும்.

கிளிக் கூட்டத்தின் சிரிப்பொலிகளும் ஒவ்வொரு வினாவுக்கும் வசனத்திற்குமேற்ற வகையில் ஆர்முடுகி, அமர்முடுகுவது பின்னர் மாறா வேகத்தில் நீண்டு ஒலித்துக் கொண்டு போவது யாருக்கும் ஒரு பொறாமையாகத்தானிருக்கும். எல்லா நாட்களிலும் சீருடைகள் காத்திருக்க முடியாது வேலைப்பழு, லீவு, என்று சீருடைகள் அவ்விடத்திற்கு வராத நாட்களில் காவலரணில் நிற்கின்றவர்களிடம் (சில சீருடைகளின் பெயரைக் கூறி) "அந்த ஐயா எங்க" "இந்த சேர் எங்க" என்று கேட்கச் சிப்பாயும் "இது சிசிர நிவாடு கெவாலட ஜனவா" என்ற வசனங்கள் அர்த்தம் புரியாவிட்டாலும் அடிக்கடி காதுகளில் ஒலிக்கும்.

காலச்சக்கரம் மெல்ல மெல்ல உருள நால்வரான அந்தப் பசுங்கிளிகளிலே ஒருத்தி சுமாரான நிறமும் வடிவும் கொண்டவள். அந்த முகாம்காரருடன் சென்றுவிட்டதாகச் சில வாய்கள் கிசுகிசுத்தன. பெத்தவர்கள் பித்து மனம் கொண்டவர்கள் பேயாக அலைந்தனர். பயனேதுமில்லை.

சில நாட்களிற்கு முன்னர்தான் தொலைபேசியில் கதைத்த "ரட்ணா அண்ணா "வயற்கரைச் செல்லத்துரையின்ர மகள் மொறட்டுவவில தன்னோட படிக்கிற ஒரு சிங்களப் பையனின் அண்ணாவீட்டில் வேலைக் காரியாய் நிற்கிறா. ஒவ்வொரு நாளும் பேச்சுத்தான் கேட்கும். சரியான கொடுமையாக்கும். ஏன் பிள்ளையை வேலைக்கு விடுற அளவுக்கு அவ்வளவு கஷ்ரமோ?" என்று கேட்டு விட்டுப் பதிலுக்காய் காத்திராமல் தொலைபேசியை வைத்து விட்டார்.

அந்தக் கதையை நேற்றுவரை ஒரு குடும்ப ரகசியமாகக் காத்த பெருமை எமது குடும்பத்தையே சார்ந்தது. அந்தப்பிள்ளையை மட்டும் தெரிந்த ரட்ணா அண்ணைக்கு எவ்வாறு அந்தப் பிள்ளை மொறட்டுவைக்குச் சென்றது என்ற கதையின் அடி நுனிகூட இன்னும் தெரியாத ஒன்றே.

சனிக்கிழமை அம்மா கோயிலுக்குச் சென்றுவிட்டார். அப்பா பத்திரிகையுடன் வாசலில் இருந்தார். ஏழரைக்கு ரியூசன். அதற்காக அவசர அவசரமாய்ச் சாப்பாட்டை முடிக்க அம்மா கோயிலால் வந்து பிரசாதங்களை எனக்கும் அப்பாவிற்கும் தந்தவாறே "பரணி, நேற்று உன்ர சாதகத்தைப் புளியடிச் சாத்திரியிடம் காட்டினனான். உனக்கேதோ எட்டில வியாழனிருக்குது வீட்டை விட்டுக் கிழப்பும்" என்று கூற அதற்கு வலுச்சேர்த்துக் கொள்ள அப்பாவும் "ஓம் உனக்கு நசனல் ஐசியுமில்லை படிச்சாங்களெண்டால் உவட மெல்லாம் அலைய என்னால ஏலாது. கவனம்" என்று சொன்னார்.

வன்னியிலிருந்து வந்த அன்றிலிருந்து கேட்டுச் சலித்த வார்த்தைகள் என்பதால் சரி சரி என்று கூறி விட்டு துவிச்சக்கர வண்டியுடன் படலையடிக்கு வர படலையை அம்மா திறந்து வழியனுப்ப வண்டித் துடுப்புக்களை ஊன்றி மிதித்தேன்.

சிறு பாதை வழியே வந்து மெயின் ரோட்டில் ஏறிய போது தான் நகரில் நகர சுத்திகரிப்புத் தொழிலாளிகளின் ஞாபகம் வந்தது. இதற்குக் காரணம் குப்பை லொறிகள் சகிதம் நின்ற சீருடையினர் தான். சனிக்கிழமை சந்தை கூடும் நாளாதலினால் தெருக்களிலே சனக்கூட்டம்.


சந்தைத்திடல் சற்று மங்கலாகவே தூரத்தில் தென்பட்டது. துவிச்சக்கர வண்டிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு பெரிய கூட்டமாக நிற்பதை உணர முடிந்தது.

அதற்கப்பால் துவிச்சக்கர வண்டிகளைப் போல பன்மடங்கு அதிகமான ஆட்களையும் அவர்களைச் சூழ அவர்களை விடப் பன்மடங்கு அதிகமான சீருடையினரையும் காண முடிந்தது. இந்தக் காட்சியைக் கண்டவுடன் கதைக்கக் கூடிய அத்தனை ஜீவராசிகளும் "ரவுண்டப்" என்று முணு முணுக்காமல் இருக்க முடியாது.

சனிக்கிழமை சந்தையடி ரவுண்டப்பில் ரியூசனுக்கென்று சென்ற நானும் மாட்டிக் கொண்டேன். நேரமும் ஏழரை, எட்டரை, ஒன்பதரை ஆயிற்று; பத்தரைக்குப் "பெரியதொரை" வந்தார். பதினொரு மணிக்கு தலையாட்டி வந்தவுடன் அனைவரும் எழுந்து வரிசையாக நின்றனர்.

வரிசையில் நின்ற நானும் செத்துப் பிழைத்துத் துவிச்சக்கர வண்டியை எடுக்கும் முகங்களையும் வாழ்வா? வதைப்பா? என்று ஏங்கி மருளும் முகங்களையும் கடைக் கண்ணாற் பார்த்தபடி "இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்கப் பொக்கற்றிலிருந்த ஐசியை கையில் சுமந்தபடி மெல்லத் தலையாட்டியைக் கடந்த பின்னர் தான் அடி நெஞ்சிலே நீரூறியது. துவிச்சக்கர வண்டியைத் திறந்து மெல்ல உருட்டிச் சென்று அப்பால் கால்களை ஊன்றி ஏறி வீட்டை நோக்கி வலித்தேன்.

அடுப்பில் அப்பளம் பொரித்துக் கொண்டிருந்த அம்மா இடுப்பில் செருகியிருந்த சேலைத் தலைப்பால் வியர்வையைத் துடைத்தபடி "என்னடா ரெண்டு மணிக்குத்தான் வாறதெண்டாய் மணி பன்னிரெண்டு மணிக்கே வந்திட்டாய்" என்று கேட்க ரவுண்டப்



கதையைக் கூறியபடி மதிய உணவை முடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்து சற்று ஓய்வெடுத்தேன்.

எவ்வாறோ தெரியவில்லை மாலை நான்குமணி ஆகிவிட்டது. மைதானத்திற்கு சென்று வருகிறேன் என்று கூறிவிட்டு அம்மாவின் பிரசங்கத்தையும் கேட்டபடி, துடுப்புகளை வலித்தேன்.

தூரத்தில் வருவது அவளே தான் என்று திடமாக முடிவு செய்தபடி நானும் துவிச்சக்கர வண்டியின் வேகத்தைக் குறைத்து அவளையும் நிற்குமாறு சைகை செய்தேன். ஆம், ராகுலனின் தங்கச்சி தான் அவள். உடனேயே சுற்றிவளைக்காமல் சுத்தமாகக் கதைக்கத் தொடங்கினேன்.

"ஏன் இப்படியெல்லாம் திரியிறீங்கள் ஊர்ச்சனம் உங்களைப்பற்றி என்ன கதைக்குதெண்டு தெரியுமே? அண்ணையையும் அவங்கள் கொண்டு போன அந்த அறிவு கூட இல்லையே உங்களுக்கு. சுமதி இப்ப என்னபாடுபடுகிறா? என்றதெல்லாம் உங்களுக்கெப்படித் தெரியப்போகுது..." என்று தொடர்ந்து "இனி உங்கட இஷ்டம் யோசித்துச் செய்யுங்கோ" என்று முடித்து விட்டு, ஒரு கூட்டத்தைத் திருத்தி விட்ட மகிழ்வில் மைதானம் நோக்கி விரைந்தேன்.

அங்கு ஒருவரையும் காணவில்லை. "என்ன விசயம் இண்டைக்கு ஒருத்தரையும் காணேல்ல?" என்று எதிரே வந்த சிவாக்காவைக் கேட்க "உதிலை நில்லாதையெடா பரணி இதுக்க விளையாடக் கூடாதென்று அவங்கள் சொல்லிப் போட்டாங்களாம். அதுதான் ஒருத்தரும் வரேல்ல. இதைமீறி யாரென்றாலும் வந்தால் தாங்கள் வந்து அள்ளிக் கொண்டு போடுவினமாம்" என்று கூறி முடித்தா.

"சரி அப்ப நான் வாறன்" என்றபடி மீண்டும் என் வீட்டுக்கு விரைந்தேன். நேரம் மாலை ஆறரை. அவங்கட நேரம் ஏழுமணி வானொலியைக் கேட்டு விட்டு வெள்ளிக்கிழமை பள்ளியிலை படித்த பாடங்களை மீட்டி விட்டு நாளை ரியூசனுக்கான கொப்பிகளை அடுக்கி வைத்துவிட்டு இராப் போசனத்தை முடித்துக் கொண்டு அப்பனே முருகா என்றபடி பாயிலே சாய்ந்தேன்.

அந்த ஆலயக் காண்டாமணி உதயகாலப் பூஜைக்காக ஒலித்தது. "அம்மா காளியாச்சி" என்றபடி கண்களைக் கசக்கிக் கொண்டு வெளியே தெரியும் வெளிச்சத்தைக் கொண்டு நேரத்தை ஊகித்துக் கொள்வதற்கு மட்டை இடுக்குகளினூடாக பார்வையை வெளியே திருப்பிய எனக்குப் பெருத்த ஆச்சரியம். வெளியே எமது வீட்டை பதினைந்திருபது துப்பாக்கி முனைகள் எந்தக் கணத்திலும் தோட்டாக்களைக் கக்கித்தள்ளத் தயாராக இருப்பது தெரிந்தது.


முற்றத்திற் காலடியோசை, கேள்விகள், அப்பாவின் பதில் என்பன சற்று மெலிதாகக் காதுகளில் ஒலித்து ஓய்ந்தது. இறுதி நீண்ட வரியாக "உங்க மகன் தேவையில்லாமல் ஒரு பொம்பிளைப்பில்லையை ஏசியிருக்கார். அது ரொம்ப ரொம்ப நல்ல பில்லை. முந்தி ஒரு பில்லையை நாம பிடிச்சதென்று இவர் அவகிட்ட சொல்லியிருக்கார். எல்லாத்தையும் விசாரிக்க பெரிய தொரை இவரைக் கூட்டிக்கிட்டு வரச் சொன்னார். அம்மா, அப்பா வேணாம். நாம விசாரிச்சிட்டு சுருக்கா விடுவம்." என்ற தமிழ் வார்த்தைகள் தெளிவாகவே கேட்டன.

சட்டென்றெழுந்து ஐசிப்பேழை எடுத்துக் கொண்டு சேட்டும் ஜீன்சும் போட்டுத் தலையைச் சீவிவிட்டுப் பாயில் உட்கார்ந்தேன். காலடியோசை முன்னேறியது. அப்பாவை அலட்சியம் செய்து விட்டு என்னை வருமாறு சைகை செய்தது ஒரு சீருடை. மெல்ல எழுந்து சென்றேன். இறுதி முறையாக அம்மாவையும் அப்பாவையும் நோக்குவது போல் வாழ்விலே என்றுமே கலங்காத அப்பாவின் கண்கள் கூட ஆறாக நீர் மல்கி நின்றன.

அந்த அனுபவத்தை என்னால் விவரிக்க முடியவில்லை. இருவரும் ஒருவரை ஒருவர் ஆற்றவோ, தேற்றவோ முடியாமல் ஏங்கித் தவித்தோம். அணை கடந்த வெள்ளம் எப்படிப் பாய்ந்தால் என்ன? கைகளில் விலங்கு மாட்டப்பட்டது. நானும் அனைவரும் அந்தக் கரும்பசிய வாகனத்தில் ஏற அழுகையொலி உச்சஸ்தாயியில் ஆரோகணித்தது அது எப்பொழுது ஓயும் என்பதற்கு எனக்கு விடை தெரியவில்லை.

சிறு மண்பாதையில் ஒரு முடக்கைத் தாண்டிய வாகனம், ராகுலனின் தங்கச்சியைக் கண்டு பலமுறை 'கோணை' ஒலித்து விட்டுக் கணத்திற் கடந்து அப்பாற் சென்றது. அந்த நேரத்தில் அவளைச் சந்தித்து அம்மா சிறு வயதிலே சொல்லித்தந்த "குரங்கும் தூக்கணாம் குருவிக் கூடும்" என்ற கதையைச் சொல்ல வேண்டும் போல் இருந்தது.

சட்டென்று கீழே விழுந்த நான் திடுக்கிட்டு எழுந்தேன். 'பத்துமணிக்கு நித்திரையாகியவன் ஒரு மணிக்குத்தான் முழித்திருக்கின்றான்" என்று அம்மா கத்துவது காதில் விழுந்தது. சரி சரி அப்பொழுது தான் எனக்குப் புரிந்தது நான் மேற்படி சிறு கதையை வரைந்தமைக்காக விசாரணைக்கு என்னை இராணுவம் அழைத்துச் செல்வதாகக் கனவு கண்டு விட்டே கட்டிலின் கீழே சட்டென்று விழுந்தேன் என்று! இந்தப் பகற்கனவு பலிக்குமா?



# வெள்ளிப் பனிமலையில் வெயில் சூடு அதிகமா?

வெள்ளிப் பனிமலையில் உலாவி ஆனந்தக் களிப்பில் ஆழ்ந்திருப்பார்கள் எத்தனையோ பேர். ஆனால் ஐரோப்பிய நாடுகளிலோ சின்னஞ்சிறு குன்று கூட ஒரு வெள்ளிப்பனி மலைபோல்தான் இருக்கும். பனிமலையில் ஆய்வு நடத்தச் சென்றிருக்கும் இவர் எதற்காக இவ்வாறு மலைத்து நிற்கவேண்டும்? வெள்ளிப் பனிமலையில் வெயில் சூடு அதிகமாக இருக்குமோ?



# உயரப் பறக்கும் ரங்கராட்டினம்

ரங்கராட்டினம் வானுயரச் சுற்றி உயரப்பறக்கும் போது அதில் அமர்ந்து இருப்பவர்களுக்கு சிம்ம சொர்ப்பன மாகத்தான் இருக்கும். ஆனால் அம்மாவும் பிள்ளையுமான இவர்கள் இவ்விதம் குதூகலமாக இருக்கிறார்களே எப்படி...? ரங்கராட்டினத்தில் சுற்றிவருவது இவர்களின் அன்றாடக் கருமம் போலும்.

# சைக்கிளில் கட்டி இழுத்து செல்வதற்கு சிறு வண்டி

ஐரோப்பிய நாட்டவர்கள் தங்கள் பிள்ளை குட்டிகளுடன் வார இறுதி நாட்களில் சுற்றுலா மேற்கொள்ளத் தவறமாட்டார்கள். டென்மார்க் நாட்டு இளம் தம்பதிகள் தங்கள் குழந்தைகளுடன் சைக்கிள்களில் சுற்றுலா செல்லும் காட்சி இது. ஒரு சைக்கிளில் ஒரு சிறு தள்ளு வண்டியைக் கட்டி இழுத்துச் செல்கிறார்கள். கைக்குழந்தை ஒன்று படுத்திருக்கும் சின்னஞ்சிறிய வண்டிதான் அது. குழந்தைகளுக்குத் தான் எவ்வளவு குதூகலம்.





# இதழ் விரித்த மலரிலே தேன் சுவைக்க ஆசை

இதழ் விரித்த மலரில் தேன் சுவைக்க தேனீக்களுக்கு அளவு கடந்த ஆசைதான். தேனைச் சுவைப்பதுடன் மரத்தில் கூடு கட்டித் தேனைச் சேமித்துவைக்கும் பணியையும் தேனீக்கள் செய்கின்றன. அத்துடன் மலர்களின் மகரந்தச் சேர்க்கைக்கும் அவை துணை புரிகின்றன. மனிதன் செயற்கையான தேன் கூடுகளை உருவாக்கித் தேனீக்களைக் கொண்டு தேன் சேரிக்கத் தொடங்கிவிட்டான் இன்று.



மார்ச் 4 'சுடர்ஒளி' மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை கௌசல்யாவுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதியனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு.

# ஒளிந்திருக்கும் முகம் எது?

1. எம்.ஜெயராஜ், சிலாபம்.
2. ஏ.ஆர். ரியாஸ், கதுருவல.
3. த. தர்மராஜா, அட்டன்.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதியனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (11.03.2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.


இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? சக நடிகரைத் திட்டி, அடித்து ரசிகர்களைச் சிரிக்க வைக்கும் நடிகர் இவர்.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்றிக்கா வீதி,
கொழும்பு – 06.

# தூண்களில் கால் பதித்து கைகளால் மந்திரஜாலம்



நீண்டு உயர்ந்த தூண்களில் கால் பதித்துக் கீழே விழாமல் நிற்பதற்கே எவ்வளவோ பாடுபடவேண்டும். ஆயினும் எடின்பரோ நகரத்தின் இந்தத் தெருக்கலைஞரோ இவ்விதம் தூண்களில் கால் பதித்து நிற்பதுடன் தனது கைகளால் மந்திரஜாலமும் செய்து மற்றவர்களைக் குதூகலப் படுத்துகிறாரே.


## மிருனாஸ் சுப்பர்

வீட்டிற்கு தேவையான சகல விதமான மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள், ஐஸ்கிறீம், சொக்லெட், பால்மா, சமையலுக்கான அனைத்து தேவைகளுக்கும்

நம்பிக்கையுடன் நாடுங்கள்

MIRUNA'S SUPER

342, Aluthmawatha Road, Colombo-15.
Tel: 525147 Fax: 075-364298
E-mail: miruna@stl.lk



## மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே. சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை நன்மைக்கே இடம் நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்ததிகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாணத் தடை நீக்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை நோகாது செயல்படுவதாலும் இந்நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு. தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9மணி முதல் இரவு 9மணி வரையே தொலைபேசி, அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

DR. P.K. SAAMI J.P. (Hon. Prof. IUMA)
162, KOTAHENA ST. MAYFIELD ROAD, COLOMBO 13.
Tel : 0094-1-342463, 466271 Fax : 0094-1-344831
E-Mail: drpksamy@sltnet.lk
Web site: www.imexpolanka.com/drpksami

# தம்பதியருக்கு மட்டும்



"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்று கூறுவார்கள். நல்ல குடும்பம் என்பது கணவன் – மனைவி இருவரின் பயனுள்ள, பண்புள்ள வாழ்வில்தான் தங்கியுள்ளது.

மகிழ்ச்சியாகக் குடும்பம் நடத்த ஒவ்வொரு கணவனும் மனைவியும் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் ஆறு உள்ளன.

## மனைவி கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்

* எந்த நிறைவேறாத எண்ணத்திற்கும் ஆசைக்கும் நான் பலியாக மாட்டேன்.
* பயனற்ற உணர்ச்சிகளுக்கு நான் உட்பட மாட்டேன்.
* வீட்டையும், வீட்டுப் பொருள்களையும், என் உடலையும், உள்ளத்தையும் தூய்மையுடன் வைத்திருப்பேன். உணவையும், உணவுப் பொருள்களையும் வீணாகாமல் வைத்துக் கொள்வேன்.
* அன்பின்றிப் பேச மாட்டேன். என் பேச்சில் அசட்டுத்தனமோ, சுயநலமோ, கொதிப்போ இருக்கவே இருக்காது. எப்போதும் நான் சோம்பலின்றிச் செயலாற்றுவேன்.
* காரணமின்றிச் சிரிக்க மாட்டேன். தேவையின்றி வீட்டை விட்டுப் புறப்பட மாட்டேன்.
* என் கடமை எல்லாம் என் கணவனைக் குறித்தே ஏற்பட்டிருக்கின்றது என்பதை என்றும் நான் உணர்ந்து நிற்பேன்.

பிரதீபா – பசீனா

பெண்

## கணவன் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்

* குடும்பம் நடத்துவது நான் மட்டுமே என்று எண்ண மாட்டேன். அதில் என் மனைவிக்குரிய பங்கை முழு மனதோடு கொடுத்து விடுவேன்.
* எந்த ஒரு நேரத்திலும் என் பொறுமையை இழந்து என் மனைவியை மதிக்காமல் இருக்க மாட்டேன்.
* என் மனைவிக்குரிய குடும்ப உரிமைகளைக் குறைவின்றி வழங்கி விடுவேன்.
* என் மனைவியிடம் குறை கண்டு பிடித்து ஏசுவதையோ, தூற்றுவதையோ என்னுடைய அன்றாட அலுவலாக வைத்துக் கொள்ள மாட்டேன்.
* மனைவியுடன் வாழ்வது என்பதைப் பிள்ளைப் பேற்றுக்காக என்று எண்ணாமல் "இல்லத்தின் இன்னொரு கண் அவள்" என்ற உயர்வான கருத்தையே கொண்டு நிற்பேன்.
* என்னுடைய வருமானம் எவ்வளவு என்பதை மறைக்காமல் அவளிடம் சொல்லிவிடுவேன்.

இந்த விடயங்களைக் கணவனும் மனைவியும் தமது மனங்களில் ஆழப்பதித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் குடும்பத்தைக் குறைவின்றி நடத்திச் செல்ல முடியும்.



சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு இம்மாதம் 8ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ரேணுகா ஹேரத் தலைமையில் ஐ.தே.கவின் பெண்கள் பிரிவினரால் ஊர்வலம் ஒன்று கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் நடத்தப்பட்டது.

பொருட்களின் விலை உயர்வைக் கண்டிக்கும் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் பெண்கள் செல்வதைக் காணலாம்.

படப்பிடிப்பு: இராமலிங்கம்

# எடையைக் குறைக்க எளிய வழி



இன்று பலருக்கும் பெரும் பிரச்சினையாக இருப்பது பருமனான உடலாகும்.

உடலில் அதிகப்படியான கொழுப்புச் சத்து சேர்வதாலேயே உடல் பருக்கின்றது. இதனால் உயிராபத்தை ஏற்படுத்தும் நீரிழிவு, இருதயநோய், இரத்த அழுத்தம், முதுகுவலி, மூச்சுத் திணறல், மூட்டுக்கால் வருத்தம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

அதிகமானவர்கள் எடையைக் குறைப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு, கலோரிக் கணக்கில் சாப்பிடுவது போன்ற முறைகளையே பின்பற்றுகின்றனர்.

உடலில் கலோரியின் அளவு குறைவதால் பசி உணர்வு, எரிச்சல், கோபம், சோம்பல், தலைமுடி உதிர்தல், தசைகளில் வலி போன்றவை ஏற்படுகின்றன.

எடையைக் குறைக்க உணவுக் கட்டுப்பாட்டை மேற்கொண்டால் ஆரோக்கியக் குறைவே ஏற்படுகின்றது.

சிலர் எடையைக் குறைக்க கடுமையான உடற்பயிற்சியை மேற் கொள்கின்றனர். இதனால் பசி அதிகரித்து உடலின் எடை அதிகரித்து விடுகின்றது.

உடலின் எடை குறைய பின்வரும் முறைகளைக் கடைப் பிடியுங்கள்.

* நார்ச்சத்து அதிகமுள்ள, கொழுப்புச் சத்து குறைவாக உள்ள காய்கறி, பழவகைகளைச் சாப்பிடுங்கள்.
* அசைவ உணவை உண்பவர்கள் குறைந்தளவு மாமிசத்தை உட்கொள்ளுங்கள்.
* அதிக நார்ச்சத்துடைய முழுக் கோதுமை, ஓட்ஸ், கோதுமை ரொட்டி ஆகியவற்றைச் சாப்பிடுங்கள்.

இவை உடலில் சுரக்கும் "இன்சுலின்" அளவில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படாமல் தடுக்கின்றன.

* பச்சைக் காய்கறிகளை சலாதாகவோ, சூப், இளநீர், எலுமிச்சைச் சாறு கலந்தோ சாப்பிடலாம்.

இதனால் உடல் எடை குறைவதோடு சத்துக் குறைவும் ஏற்படாது. உடல் ஆரோக்கியமும் பாதுகாக்கப்படும்.

இவற்றாலும் எடை குறையா விட்டால் விஞ்ஞான ரீதியிலான, நவீன சிகிச்சை முறையான "Scientific Body Solution" மூலம் படிப்படியாக எடை யைக் குறைக்க முடியும்.

எனவே உடலை அளவாக வைத்து அழகுள்ளவர்களாகத் திகழ்வோம்!


வெளிநாடு செல்லும் பெண்களுக்கு குறுகிய காலத்தில் Beauty Culture Course குறைந்த கட்டணத்தில் அவரவர்க்கு ஏற்ற நேரத்தில் ஒழுங்கு செய்து பயிற்சியளிக்கப்படும்

மணப்பெண் அலங்காரம் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் பெண்களை அலங்கரிப்பதில் 15 வருட அனுபவம்



அழகு சம்பந்தமான ஆலோசனைகளும் குறிப்புகளும் வழங்கப்படும்.

Services & Classes

Facial
Eyebrow Shaping
Bleaching
Waxing
Pedicure, Manicure
Hair Styles
Hair Cutting
Perming
Hair Dying
Pimple Treatment

Shree Beauty Care

We've shifted to: 30, Lilly Avenue, Colombo-06. Tel: 595927 / 586979






# ராசி பலன்

18.03.2001 முதல் 24.03.2001 வரை
பொ.சந்திரன்.



**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

இராசிநாதன் சுயபலம் பெற்று தன் பிறிதொரு இராசியில் இருப்பதும் இராசியில் உள்ள சனி அடுத்த வாரமளவில் விலகுவதும் நல்ல அறிகுறிகள். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இல்லை. தேவை இல்லாத பொருளை வாங்குவதன் மூலம் செலவை உண்டாக்கும். எதிரிகள் மனம்மாறி நண்பராவர். குடும்பத்தில் அமைதி நிலவும். காதலர்கள் மன அடக்கத்துடன் செயல்படுவர். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குறுந்தூரப் பிரயாணம் அமையும். தொழில் போட்டி ஓய்ந்து அமைதி நிலவும். நண்பர்களால் உதவி உண்டு. பேர் புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.



**இடபம்: கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2.**

இராசிநாதன் இலாபத் தானத்தில உச்சம் பெற்று இருப்பது விசேஷம். ஆட்சி பெற்ற செவ்வாயின் பார்வையும் நன்மை செய்யும். பணப்பற்றாக்குறை இருக்கும். கல்வியில் ஆர்வம் குறையும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் அன்பாய் இருப்பர். மன அமைதியுண்டு. மனம் யதார்த்தமாக சிந்தித்து நடைமுறைச் சாத்தியமான முடிவுகளை எடுக்கும். எதிரிகள் பகையுணர்வற்று நட்புணர்வோடு செயல்படுவர். குடும்பத்தில் கணவனும் மனைவியும் சமபலம் பொருந்தி இருப்பதால் சமரசமாக இருப்பர். தேகசுகம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் அமைதி இல்லை. காதலர்கள் விசுவாசமாக இருப்பர். நண்பர்களால் சில தொல்லைகள் ஏற்படலாம்.



**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இராசிநாதன் பாக்கிய ஸ்தானமான ஒன்பதாம் வீட்டில் இருப்பது நலம். இராசிக்கு சனியின் பார்வை சற்றுப் பின்னடைவு தான். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் உலகியல் இன்பத்தை நாடும். கற்பனை சுகம் காணும். எதிரி வலுவாக இருப்பதால் நாம் விலகி இருப்பது மேல். குடும்ப உறவு திருப்திகரமாக இல்லை. சிலசமயம் விலகி இருக்கவும் கூடும். காதலருள்ளும் கருத்தொற்றுமை இல்லை. தேக சுகம் நன்று. தொழில் முன்னேற்றம் உண்டு. நண்பர்கள் உதவி உண்டு.



**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

இராசிநாதன் ஆறாம், ஏழாம், எட்டாம் வீடுகளில் சஞ்சரிப்பார். ஏழாம் வீட்டில் இருக்கும் போது நன்மையான பலனை எதிர்பார்க்கலாம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். நீங்கள் சகோதரருக்கு உதவமுடியும். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் அன்பாய் இருப்பர். மனம் பூரண அமைதியாய் இருக்கும். நல்ல ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றும். எதிரிகள் நண்பராகலாம். குடும்ப உறவு திருப்திகரமாக இருக்கும். காதலர்களுக்கு யோககாலம். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில்துறை விருத்தியடையும். நண்பர்களின் உதவியுண்டு. பிரயாணவாய்ப்பு பிரகாசம்.



**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1**

இராசிநாதன் மறைவுத் தானத்தில் இருந்தாலும் சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்கள் இராசியைப் பார்ப்பதால் விசேஷம் உண்டு. கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் கற்பனையில் மூழ்கினாலும் ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்றும். எதிரி பலவீனமாக இருப்பதால் ஆபத்தில்லை. குடும்ப உறவு திருப்திகரமாக இல்லை. காதல் வாழ்வில் புயல் வீசலாம். தேக சுகம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. மதிப்பு உண்டு. நண்பர்கள் உதவி செய்வர்.



**கன்னி: உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2.**

இராசிநாதன் மறைவுத் தானத்தில் இருந்தாலும் இராசிக்கு குரு, சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்களின் பார்வை கிடைப்பது யோகம். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உற்றார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனச் சஞ்சலம் இருக்கும். கற்பனையில் சுகம் காணும். வீண்கற்பனையில் காலவிரயம் ஏற்படும். எதிரிகள் பலவீனமாக இருப்பதால் உடனடி ஆபத்தில்லை. குடும்பசுகம் உண்டு. அமைதியுண்டு. காதலர் விசுவாசமாக இருப்பர். தொழில்துறையில் அமைதி இல்லை. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.




**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.**

இராசிநாதன் கெட்டவனுடன் கூடி மறைத்தானத்தில் இருந்தாலும் பலமாக இருப்பதால் ஆறுதல் உண்டு. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரர்கள் மத்தியில் மனக்கசப்புத் தோன்றலாம். வீடு, வாகனங்களால் வரவும் செலவும் சரியாய் இருக்கும். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். மனம் கட்டுப்பாடு இல்லாமல் இயங்கும். வீண் கற்பனையில் சுகம் காணும். உங்கள் கை ஓங்கி எதிரி பலவீனமாக இருப்பதால் "இன்று போய் நாளை வா" என்று சொல்லலாம். குடும்பத்தில் பதற்றத்துடன் கூடிய அமைதி நிலவும். காதலர் வாழ்வு களைகட்டும். தேக சுகம் நன்று. தொழில் விருத்தியுண்டு.



**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை.**

இராசிநாதன் இராசியில் பலம் பொருந்தி இருப்பதும் குருவின் பார்வை கிடைப்பதும் விசேஷமே. கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி எதிர்பார்க்க முடியாது. வீடு, வாகனங்களால் செலவு ஏற்படும். உற்றார் உறவினர் ஏனோ தானோ என்று இருப்பர். மனம் ஓர் அளவு அமைதியாய் இருக்கும். ஒருகால் உலக நாட்டத்திலும் மறுகால் ஆன்ம நாட்டத்திலும் ஈடுபடும். எதிரி உங்களிடம் சரண் அடையலாம். அப்படியானால் மன்னிக்கவும். குடும்ப சுகம் உண்டு. அமைதி உண்டு. இன்பம் உண்டு. காதலர்களுக்கு பொற்காலம். தேக சுகம் உண்டு. தொழில் விருத்தியுண்டு.



**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

இராசிநாதன் மறைவுத் தானத்தில் இருந்தாலும் சூரியனின் பார்வை கிடைப்பதால் ஓரளவு ஆறுதல் உண்டு. பணத்தட்டுப்பாடு வரவாய்ப் புண்டு. கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியை எதிர்பார்க்க முடியாது. வீடு, வாகனங்களால் இலாபமும் இல்லை நட்டமும் இல்லை. சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். மனம் வீண் கற்பனையில் சுகம் காணமுயலும். எதிர் மறையான எண்ணங்கள் தோன்றும். எதிரி வலுவாக இருப்பதால் நாம் பணிந்து போவது மேல். குடும்பத்தில் உறவும் இல்லை பகையும் இல்லை. காதலர்கள் அறிவுபூர்வமாக செயல் படுவர். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் சிறப்புண்டு. நண்பர்கள் உதவியுண்டு.



**மகரம்: உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2.**

இராசிநாதன் சுகஸ்தானத்தில் இருப்பது நலம். குரு, சனி ஆகிய கிரகங்களின் பார்வை கிடைப்பது சிறப்பு. பணத்தட்டுப்பாடு வரும் சமாளிப்பீர்கள். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தும். சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். மனம் ஆனந்தமாக இருக்கும். நல்ல ஆரோக்கிய எண்ணங்கள் உதயமாகும். எதிரிகள் நிலை தடுமாறி இருப்பதால் நாம் அமைதியாக இருக்கலாம். குடும்ப சுகம் உண்டு. அமைதி யுண்டு. காதலர் வாழ்வு அன்பு மயம். தேக ஆரோக்கியம் நன்று. தொழில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வுண்டு. நண்பர்கள் உதவி செய்வர். பிரயாண வாய்ப்புண்டு.



**கும்பம்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3.**

இராசிநாதன் வீரியஸ்தானத்தில் இருப்பதும் இராசிக்கு செவ்வாயின் பார்வை கிடைப்பதும் புதுத் தெம்பைத் தரும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி உண்டு. வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர், அயலார் விசுவாசமாக இருப்பர். மனம் அலைபாயும். மன ஒருமைப்பாட்டோடு வேலை செய்ய இயலாது. எதிரி உங்களோடு பழகும் சந்தர்ப்பம் வரும் நிதானம் வேண்டும். குடும்ப விசுவாசம் குறையலாம். மனத்தளவில் விலகி இருக்க வாய்ப்புண்டு. காதலர் வாழ்வில் அமைதியுண்டு. தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் சிறப்பு உண்டு. நண்பர்கள் உதவுவர்.



**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசியில் உள்ள சுக்கிரனுக்கும் இராசி நாதன் குருவுக்கும் பரிவர்த்தன யோகம் இருப்பதால் பொதுவாக நன்மை உண்டு. பொருளாதாரம் தடைப் பட்டாலும் சமாளிக்கலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவியுண்டு. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். சொந்தக்காரர் விலகியே இருப்பர். மனம் அமைதிப்படாது அறிவு வசப்படாமல் கற்பனையில் சுகம் காணும். எதிரி பலமாக இருப்பதால் காலம் கனியும் வரை காத்திருக்கவும். குடும்பத்தில் ஓரளவு அமைதியுண்டு. குடும்ப சுகம் இல்லை. காதலர் வாழ்வில் வசந்தம் வீசும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழிலில் பிரச்சினை இருக்கும்.

## சாயம் பூசுவோர் கவனம்; அது மோசம் செய்துவிடும்!

தலைமுடிக்குத் தொடர்ந்து சாயம் பூசுவோர் இனி அழகு முக்கியமா, ஆரோக்கியம் முக்கியமா என்பது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

அமெரிக்க ஆய்வாளர்கள் தொடர்ந்து தலைக்குச் சாயம் பூசும் 697 பேரிடம் ஆய்வு நடத்தியுள்ளனர். லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள தெற்கு கலிபோர்னிய பல்கலைக்கழக மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் ஞானிகள் டாக்டர் மானுயேலாகாகோ கோபின்டு பேஸ் தலைமையில் இந்த ஆய்வை நடத்தினார்.

குறிப்பாக தலைமுடிக்குச் சாயம் அடிப்பதற்கும் சிறுநீர்ப்பைகளில் புற்றுநோய் ஏற்படுவதற்கும் தொடர்பு இருக்கக்கூடும் என்று எழுந்த சந்தேகத்தின் காரணமாக இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

"நிரந்தரமாக தலைமுடிக்குச் சாயம் பூசுவதை நிறுத்துங்கள் என்று உடனடியாக அறிவித்துவிட முடியாது அதை உறுதி செய்ய இன்னும் விரிவான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டியுள்ளன" என்கிறார் ஆய்வுக்குழு தலைவர் டாக்டர் மானுயேலா. என்றாலும் இந்த முடிவுகளை ஒதுக்கி விடவும் முடியாது என்பது அவரது வாதம்.

பெண்களில் மாதம் ஒருமுறை தொடர்ந்து தலைக்குச் சாயம் பூசுபவர்களுக்கு, தலைமுடிச் சாயமே பூசாதவர்களைவிட சிறுநீர்ப்பைப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்கிறது இந்த ஆய்வு

ஆராய்ச்சியின் விரிவான முடிவுகள் 'இன்டர்நேஷனல் ஜர்னல் ஆப் கேன்சர்' என்ற ஆராய்ச்சிப் பத்திரிகையில் வெளியாகியது.

இதே போல உடல்நலம் குறித்து நடத்தப்பட்ட மற்றும் ஒரு ஆய்வு 'பூச்சி உருண்டை' என்று பரவலாக அறியப்படும் நாப்தலீன் உருண்டைகள் எலிகளின் மூக்கில் புற்று நோயை உருவாக்கி உள்ளன என எச்சரிக்கிறது

பூச்சி உருண்டை வாசம் பலருக்கும் பிடிக்கும் அலுமாரிக்குள் சேலைகளுக்குள்ளும், படுக்கையறை, குளியலறைக்குள்ளும் நாப்தலீன் உருண்டைகளைப் போட்டு வைக்கும் வழக்கம் உள்ளவர்கள் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. அமெரிக்க 'தேசிய நச்சுப்பொருள் திட்டம்' என்ற அமைப்பு இது தொடர்பாக எலிகளில் விரிவாக ஆய்வு செய்து மூக்குக் குழல்களில் புற்றுநோய் ஏற்படுவதை உறுதி செய்துள்ளது

## காதலுக்கு முதுமை இல்லை

இங்கிலாந்தில் லண்டன் அருகே உள்ள கிராமத்தில் ஒரு முதியோர் இல்லம் உள்ளது. அங்கு தங்கியிருக்கும் 85 வயது 'குடு குடு' கிழவியைக் காதலிப்பதில் இரு தாத்தாக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. அவர்களில் ஒருவருக்கு 90 வயது இன்னொருவருக்கு 93 வயது.

காதல் விஷயம் என்பதால் இருவருமே விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை.

இருவரும் அடிக்கடி முறைத்துக் கொண்டனர். தகராறு முற்றி இருவரும் கட்டிப்புரண்டு சண்டை போடும் அளவுக்கு நிலைமை மோசமானது.

கைகலப்பில் காயம் அடைந்த 90 வயதுக் கிழவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு 8 நாட்களுக்குப்பிறகு உயிர்இழந்தார்.


## 104 வயது பாட்டிக்கு புதுப்பல்

ரஷ்யாவைச் சேர்ந்த பாட்டி மரியா வசிலிவாவுக்கு 104 வயது. இந்தப் பாட்டிக்குத் தள்ளாத வயதில் புதிதாகப் பல் முளைத்து இருக்கிறது. இவர் தென்மாகாண மாஸ்டாராஸ் தானில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் கோழிப்பண்ணை வைத்து வாழ்ந்து வருகிறார்.

இவருக்கு இந்த வயதில் புதிய பல் முளைத்து இருப்பது டாக்டர்களை வியப்பில் ஆழ்த்தி உள்ளது. அவர்கள் இந்த அரிய நிகழ்ச்சி பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

புதிதாகப் பல் முளைத்து இருப்பது மரியாவுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. பிஸ்கட் மெல்வதற்கு பல் கிடைத்து இருக்கிறது என்று கூறி அவர் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டார்.

# சர்வதேச ரீதியில் புலிகளுக்கு நம்பிக்கைப் பங்காளர் யார்?




கடந்த வருடம் அக்டோபர் மாதம் 23ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அணி திருகோணமலைக் கடற்படைத்தளம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தியது.

ஆனால் இந்தத் தாக்குதலில் இருந்து கடற்படைத்தளம் மயிரிழையில் தப்பியது.

ஈழப்போர்III ஆரம்பமான பின்னர் திருகோணமலைத் துறைமுகம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய இரண்டாவது பாரிய தாக்குதல் இதுவாகும்.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'ரணசுறு' 'சூரயா' எனப் பெயரிடப்பட்டிருந்த இரண்டு அதிவேகப் பீரங்கிப்படகுகளை, கடற்புலிகளின் 'நீரடி நீச்சல்' பிரிவைச் சேர்ந்த போராளிகள் தாக்கி முற்றாக மூழ்கடித்தனர்.

அதன் பின்னர் திருகோணமலை கடற்படைத்தளப் பாதுகாப்பு முன் எப்போதும் இல்லாதவாறு பலப்படுத்தப்பட்டது.

அப்படி இருந்தும் அக்டோபர் 23 இல் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் பிரபல, சர்வதேச பாதுகாப்பு சஞ்சிகையான 'ஜேன்ஸ்' சஞ்சிகையின் புலனாய்வுக் கண்ணோட்டத்தில் (Janes intelligence review) ரோஜர் டேவிஸ் என்பவர் திருகோணமலைக் கடற்படைத்தளம் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலை ஆராய்ந்துள்ளார்.

அவர் தனது ஆய்வில் தெரிவித்துள்ளதாவது:-

வட கொரியத் தயாரிப்பு 107 மி.மீ 'கட்யூஷா' ரக ராக்கெட் மற்றும் இலகு ஏவுகணைகளை புலிகள் இந்தத் தாக்குதலின் போது உபயோகித்திருப்பது தெரியவந்துள்ளது.

புலிகளால் விட்டுச் செல்லப்பட்ட வீடியோ ஒளிப்பதிவு நாடாவில் அது தெளிவாகப் பதியப்பட்டுள்ளது. தாக்குதலுக்குப் புலிகள் பயன்படுத்திய இரண்டு படகுகளும், கடற்படையினரிடம் உள்ள அதிநவீன ராடார்களின் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டுச் செல்லக்கூடிய தொழில்நுட்பத்திறனை உடையவை.

ரோஜர் டேவிஸின் இந்த ஆய்வு கடற்படையினரின் அடிவயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

பல கோடி அமெரிக்க டொலர்களைச் செலவு செய்து இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு எம்.பி.வி (Multi Purpose Vessels) கப்பல்களும் பருமனில் பெரியவை. 'கப்றியல்' ஏவுகணைகளைத் தன்னகத்தே கொண்டவை.

இவற்றை யுத்தப் பிரதேசங்களுக்கு அடிக்கடி நகர்த்துவது கடினம்.

இதே வேளை சர்வதேச ரீதியாகவும் புலிகளின் ஆயுதக் கடத்தலைத் தடுக்க வேண்டும். அதற்கெனப் பிரத்தியேக விமானப்பிரிவு ஒன்றை உருவாக்க வேண்டும். இந்தக் காரணங்களுக்காக கடற்படையின் முன்னாள் தளபதியின் பணிப்பின் பேரில் இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 'சுகன்யா' ரக ஹெலிகொப்டர் தாங்கிக் கப்பலான 'ஹெலிபாட்' கரையோரக் கண்காணிப்புக் கப்பலும் (Off shore Patrol Vessel) தனது சேவையைச் செவ்வனே வழங்க முடியாத நிலையில் உள்ளது.

ஆகவே, கடற்படையைப் பொறுத்தவரை, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ராணுவ தளவாடக் கொள்வனவுகள் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையிலேயே உள்ளன.

திருகோணமலைக் கடற்படைத் தளம் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதல் படைத்தரப்பில் பல தகவல்களை விட்டுச் சென்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் இலக்கான திருகோணமலைக் கடற்படைத் தளத்திலிருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள 'மாபிள் பீச்' பகுதியில் தாக்குதல் அணிகளைத் தேவைக்கேற்றவாறு புலிகள் இடம்மாற்றியிருந்தனர்.

கடற்புலிகளின் தாக்குதலுக்கு முன்னரே, இரவோடிரவாக மாபிள் பீச் பகுதிக்கு வந்திறங்கிய புலிகள் கடற்படைத்தளம் மீது மோட்டார்த் தாக்குதலை நடத்தினர்.

புலிகளின் தாக்குதலை அது வரை எதிர்பாராத கடற்படையினர் உடனடியாக விமானப்படையினரின் உதவியை நாடினர்.

மாபிள் பீச் பகுதியில் நிலை கொண்டிருந்த புலிகளை அழிக்கத் தரைப் படைக்கு உதவியாக சீனன்குடா விமானப்படைத்தளத்திலிருந்து ரஷ்யத் தயாரிப்பான எம்.ஐ-24 ரக தாக்குதல் ஹெலிகொப்டர் அனுப்பப்பட்டது.

ஆனால் அந்தக் ஹெலிகொப்டரின் வரவை முன்கூட்டியே எதிர்பார்த்துக்காத்திருந்த புலிகள் அதன் மீதும் எதிர்த்தாக்குதல் நடத்தினர். ஏவுகணை எதிர்ப்பு வசதிகளைத் (Anti - Missiles System) தன்னகத்தே கொண்ட ரஷ்யத் தயாரிப்பான எம்.ஐ-24 ரக 'கன்ஷிப்' ஹெலிகொப்டர் மீது விடுதலைப்புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளால் தாக்குதல் நடத்தினர்.

> **"எம்.ஐ -24" ரக ஹெலியைத் தயாரிப்பது ரஷ்யாதான். அதைச் சுட்டு வீழ்த்தக்கூடிய வெப்பத்தை நாடிச் சென்று தாக்கக்கூடிய எஸ்.ஏ-14 ரக மற்றும் எஸ். ஏ-16 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளைத் தயாரிப்பதும் ரஷ்யாதான். அப்படியானால் இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் ரஷ்யா ஆயுதங்களை விற்பனை செய்கிறதா?**

புலிகளின் "ராதா" விமான எதிர்ப்புப் படைப்பிரிவினரே இந்தத் தாக்குதலுக்காகக் களத்தில் இறக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் ஏவிய ஏவுகணைக்கு இலக்காகி எம்.ஐ- 24 ரக ஹெலிகொப்டர் திருகோணமலைக்கடற்பரப்பில் தீப்பிழம்பாக வீழ்ந்து மூழ்கியது.

எவ்வாறாயினும் புலிகளின் முயற்சியை முப்படையினரும் இணைந்து முறியடித்தனர். இந்தத் தாக்குதலின் போது படையினரை ஏற்றி இறக்கப் பயன்பட்ட "லங்காராணி" கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. அத்துடன் அதிவேகத் தாக்குதல் படகு ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டது.

புலிகளின் நான்கு வெடிமருந்து நிரப்பிய படகுகளும் இலக்கை அடையும் முன்னரே, துறைமுக வாயிலில் வைத்துக் கடற்படையின் ஆர்.பி.ஜி தாக்குதலுக்கு உள்ளாகி மூழ்கடிக்கப்பட்டன.

தாக்குதல் இடம் பெற்று, ஒரு வாரத்தின் பின்னர், தாக்குதலுக்கு இலக்கான கடலில் மூழ்கிய எம்.ஐ -24 ரக ஹெலிகொப்டரின் சிதைவுகளில் பெரும்பாலானவை உருகிய நிலையில் கடற்படை சுழியோடிகளால் மீட்கப்பட்டன.

சிதைவுகளின் ஆய்வுக்காக ரஷ்யாவில் இருந்து விசேட அழைப்பின் பேரில் பைலட், பொறியியலாளர் கேணல் அலெக்சாண்டர் என்பவர் இலங்கை வந்தார்.

எஸ்.ஏ -14 மற்றும் எஸ்.ஏ -16 ரக இலகு குறுந்தூர விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதல் மூலமே ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அவர் உறுதி செய்தார்.

எஸ்.ஏ-14, எஸ்.ஏ -16 ரக ஏவுகணைகளை ரஷ்யாவே உற்பத்திசெய்து விற்பனை செய்து வருகிறது.

இவை மற்றைய ஆயுதங்களைப் போல் அல்லாது கிடைத்தற்கரியவை. அத்துடன் வாங்குபவரே இறுதியில் பாவனையாளர் என்று அத்தாட்சிப் படுத்தும் (End User Certificate) பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே ஒரு நாடு இதனைக் கொள்வனவு செய்ய முடியும்.

அப்படியானால் விடுதலைப் புலிகள் சர்வதேச ரீதியில் நம்பிக்கைப் பங்காளர்களை வைத்திருக்கிறார்களா? என்ற கேள்வி இங்கு எழுகிறது. எம்.ஐ-24 ரக ஹெலிகொப்டர் தயாரிப்பது ரஷ்யாதான். அதைச் சுட்டு வீழ்த்தக் கூடிய - வெப்பத்தை நாடிச் சென்று தாக்கக் கூடிய - எஸ்.ஏ-14 ரக மற்றும் எஸ்.ஏ-16 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளைத் (Heat Seeking Anti Aircraft Missiles) தயாரிப்பதும் ரஷ்யாதான்.

அப்படியாயின் ரஷ்யா இலங்கை அரசுக்கு எம்.ஐ-24 ஹெலிகொப்டரையும் புலிகளுக்கு எஸ்.ஏ-14, எஸ்.ஏ-16 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் விற்பனை செய்ததா?

இதில் இன்னொரு முக்கிய விடயம் என்னவென்றால், தெற்காசியாவிலேயே இவ்வாறான இலகு ரக குறுந்தூர விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இந்திய ராணுவத்திடம் மட்டுமே உள்ளதாக வெளிநாட்டு ராஜதந்திர அதிகாரி ஒருவர் கூறினார்.

அப்படியானால் இந்திய ராணுவத்திடமுள்ள எஸ்.ஏ-14, எஸ்.ஏ-16 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் புலிகளுக்கு எவ்வாறு கிடைத்தன?

இந்தியா தொட்டிலையும் ஆட்டி, பிள்ளையையும் கிள்ளுகிறதா?

சர்வதேச சமூகங்கள் தத்தமது ஆயுதங்களை விற்பனை செய்ய இலங்கையில் யுத்தம் நீடிப்பதையே விரும்புகின்றன.

இதில் இந்தியா தற்போது இலங்கைக்கான முக்கிய ராணுவ தளவாட விற்பனையாளராக மாறிவருவதை அவதானிக்க முடிகிறது.

இது இவ்வாறு இருக்கையில் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஒரு தடையாக இருக்கிறது என்று அண்மையில் வெளியாகிய செய்தியையும் உதாசீனம் செய்ய முடியாது.

அதாவது, நோர்வே அரசு இலங்கையின் சமாதான முயற்சிகளில் 'அனுசரணையாளன்' என்ற நிலையில் இருந்து சற்று மேலே சென்று 'மத்தியஸ்தன்' என்ற நிலையை எட்டக் கூடாது என்பதில் இந்தியா மிகவும் உன்னிப்பாகச் செயற்படுகிறது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்தைப் பரஸ்பரம் கொண்டுவந்து, பேச்சுக்களை ஆரம்பிக்கவும், முன்னெடுத்துச் செல்லவும் வசதியாக நோர்வே அரசு 'புரிந்துணர்வு உடன்படிக்கை' ஒன்றைத் தயார் செய்தது.

மத்தியஸ்தன் என்ற ஒரு நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்குடனேயே நோர்வே இதனை உருவாக்கியதாக இந்தியா கருதுவதாக நம்பப்படுகிறது.

அதைத் தடுத்து நிறுத்த இந்தியா தனது ராஜதந்திர உத்திகளைக் கையாண்டு இலங்கை மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகக் கருதப்படுகிறது.

இதனாலேயோ என்னவோ நோர்வேயின் சமாதானத் தூதுவர் இலங்கை வரும்போதெல்லாம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தியைச் சந்திக்கத் தவறுவதில்லை.

ஆனாலும் மேற்படி ஊகங்களை இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது. இந்தியா எப்போதும் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஆதரவு வழங்கும் என்கிறார் இந்திய உயர் அதிகாரி ஒருவர்.

இதேவேளை, இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ராணுவ ராஜதந்திர உறவுகள் அண்மைக் காலமாக விரிவடைந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இதற்கு பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவரும் இலங்கையின் முன்னாள் ராணுவத்தளபதியும், பாகிஸ்தான் ராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்பின் நெருங்கிய நண்பருமான ஜெனரல் சிறிலால் வீரசூரியாவின் அயராத உழைப்பு முக்கிய காரணம்.

பாகிஸ்தானுக்குக் கடந்த இரு வாரங்களாக வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் அடுத்தடுத்து விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை விமானப்படையின் பொன் விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள விஜயம் செய்த பாகிஸ்தான் பிரதி விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் சலீம் அர்ஷத் இலங்கையின் சகல விமானப்படைத் தளங்களுக்கும் விஜயம் செய்துள்ளார்.

இலங்கைக்கான ராணுவ உதவிகளை அதிகரிக்க பாகிஸ்தானின் ஆரம்ப நடவடிக்கைகளில் ஒன்றாக இது அமையலாம்.

**மனோதத்துவ வைத்தியம்**

**GENERAL PSYHO THERAPHY**

Dr. P.ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் மார்ச் 18 - 25 திகதிகளில்

DR.ARUMUGAM (S.A.M.P) REG. 9492

New Ahmed Tourist Inn, Brag Brad Building, Entrance Bankshall Street,
No.10, Reclamation Road, Colombo-11.

T.P 074-715547, 074-715546, செல்டல் - 072 664867

கல்முனையில் ஏப்ரல் 3-4 திகதிகளில்

T.M.M. பாமசி கல்முனை. T.P: 067-29329

வவுனியாவில் ஏப்ரல் 11 - 14 திகதிகளில்

(தயவுசெய்து பதிவு செய்துகொள்ளவும்)

Vanni Inn, 2ம் குறுக்குத் தெரு, ... வவுனியா. T.P:- 072-664867

கடிதத் தொடர்பு

Resident Tele Phone:- 065-24019
Dr.P. Arumugam,
No.51/5, Koolavady Road, Batticaloa, Sri Lanka.

**வாழ்வோரை வாழ்த்துவோம்**

இன்று எம் மத்தியில் பல பாராட்டப்பட வேண்டிய விடயங்களில் தேர்ச்சியுடைய எத்தனையோ பேர் அவரவர் திறமைகளை வெளிக்காட்ட முடியாமல் அவர்கள் திறமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அத்தாட்சிப் பத்திரங்களும் ஏதுமின்றி அதற்கு சந்தர்ப்பமும் இன்றி திரைமறைவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதோ அவர்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம்.

அவரவர் திறமைகளை இலங்கை வாழ் மக்களுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் எடுத்துக்காட்டும் வகையில் பல வருடங்களாகக் கல்வித்துறையில் சாதனை படைத்து மக்கள் மத்தியில் நீங்கா இடம்பிடித்த முன்னணி தபால் மூலக் கல்வி நிறுவனமான

**கண்டி UNION STUDY CENTRE**

திறமையுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் அனைத்து வயதினரையும் இன, மொழி வேறுபாடின்றி இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவரவர் திறமைகளைப் பரீட்சித்து திறமைகளுக்கு ஏற்றவாறு சான்றிதழ்கள் வழங்க முன்வந்துள்ளது. உங்கள் திறமைகள் எதுவாயினும் அதற்குரிய பயனைப் பெற இப்போதே தொடர்புகொள்ளுங்கள்.

மேலதிக விவரங்களுக்கு 3.50 ரூபா முத்திரை ஒட்டப்பட்டு சுய விலாசம் எழுதப்பட்ட நீள காகித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**UNION STUDY CENTRE**
**P.O.Box: 143, Kandy.**
**Phone: 077-805419**

# மீன்பாடும் தேன்நாட்டை வனாந்தரமாக்கும் நடவடிக்கை

## பறவைகளின் சரணாலயங்கள் படையினரின் பதுங்கு குழிகளாகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை வரையிலான பிரதான வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள மரங்களை வெட்டி அகற்றும் நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்ட நடவடிக்கையாக சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை மற்றும் கும்புறு மூலை ஆகிய பகுதிகளில் இருந்து வாழைச்சேனை வரை இந்த மரம் தறிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

நூற்றுக்கணக்கானபனை, தென்னை மரங்களும் முந்திரி மரங்களும் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரில் இருந்து வெளியே செல்லும்போதும், விடுமுறையைக்கழித்தபின்னர் கடமைக்குத்திரும்பும்போதும் படையினர் அடிக்கடி விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது.

வீதிக் கண்காணிப்புப் பணிகளில் படையினர் நிறுத்தப்பட்டாலும் படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுப் புலிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பெரும்பாலும் மரங்களிலேயே குண்டுகள் மறைத்துவைக்கப்பட்டுப் படையினரின் வாகனத் தொடரணி மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இந்தத் தாக்குதல்கள் கூடுதலாக இடம்பெறும் கறுவாக்கேணி, சுங்கான்கேணிப் பகுதிகளிலேயே படையினரால் மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பனை வளத்தினாலும் தென்னை வளத்தினாலும் மற்றும் கனி தரும் மரங்களினாலும் சோலையாகக் காணப்பட்ட மட்டக்களப்பின் வீதிகள் பாலைவனமாகி வருகின்றன. அது மட்டும் அல்ல, வெறும் காணிகளில் உள்ள தென்னை, பனை மரங்களும் வெட்டப்பட்டு பதுங்கு குழிகளையும் காவலரண்களையும் சென்றடைகின்றன. இவற்றுக்காகத்தான் எத்தனையோ நூற்றுக்கணக்கான மரங்கள் இதுவரை தறிக்கப்பட்டுள்ளன.

"வடக்கு – கிழக்குத் தவிர ஏனைய மாகாணங்களில் நாட்டின் இயற்கை வளங்களைப் பேணிப்பாதுகாத்து மரநடுகைத் திட்டங்களை அரசு மேற்கொண்டு வருகிறது.

"அதோடு வீதியின் இருமருங்கிலும் குளுமை தரும் மரங்களை நட்டு அரசு பாதுகாத்து வருகிறது.

"ஆனால் வடக்கு– கிழக்கில் இயற்கை வளங்களை அழித்துவருவது வேதனை தரும் செயல்" என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட மட்டக்களப்பு நகருக்கு வடக்காகப் பிள்ளையாரடியில் இருந்து தன்னாமுனை வரையிலான கன்னா மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டு வருவது வேதனைக்குரியது.

வாவியின் ஓரத்தில் செழிப்புடன் பசுமையாகக் காணப்படும் கன்னா மற்றும் கண்டல் மரங்கள் மண் அரிப்பைத் தடுப்பதுடன் மீன் இனங்கள், இறால்கள் என்பவற்றின் உற்பத்தி அதிகரிப் பதற்கும் காரணிகளாகும்.

அத்துடன் குட்டிச் சரணாலயமாகவும் இந்தக்காடு விளங்குகிறது. பருவகாலங் களில் புதுப்புதுப் பறவையினங்கள் இந்தக் காட்டில் மாதக்கணக்கில் தங்கிக் கழித்துவிட்டு செல்வது வழக்கம்.

தற்போது இந்த மரங்கள்வெட்டி அழிக்கப்படுவதால் மீன், இறால் இனங்கள் அருகி வருகின்றன. பறவைகளுக்கு சரண் அளித்த நிலைமாறி படையினர் பதுங்கியிருக்கும் பூமியாகிவிட்டது.

— சத்துருக்கன்

# ஆதரவு தேடும் பேரியல் அஷ்ரப்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப் விஜயம் மேற்கொண்டார்.

9ஆம் 10 ஆம் திகதிகளில் அவரது விஜயம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கட்சி ஆதரவாளர் களைக் கவர்ந்திழுக்கும் ஒரு செயலாக அவரது விஜயம் கருதப்படுகிறது.

அவரது விஜயத்தை முன்னிட்டு காத்தான்குடி, ஏறாவூர் நகரங்கள் பச்சை, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதி அமைச்ச ருமான ஏ.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் இந்த நிகழ்வுகளில் முன்னணியில் நின்றார்.

அமைச்சர் அஷ்ரப் விமான விபத்தில் மரணமானதைத் தொடர்ந்து கட்சித் தலைமைத்துவத்துக்கிடையில் பனிப்போர் இடம்பெற்றுவருகிறது.

அமைச்சர் ரவூப் ஹக்கீமே தலைமைத்துவத்தை வைத்திருக்கவேண்டும் என ஒருசாராரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் பேரியல் அஷ்ரப்பே கட்சிக்குப் பொருத்தமான தலைவர் என மறுசாராரும் கோரிவருகின்றனர்.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாக விளங்கும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது ஆதரவை ஸ்திரப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக அவரது விஜயம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புலிகள் பங்கு பற்றிய விளையாட்டுப் போட்டி

மட்டக்களப்பு, வவுணதீவு ராணுவ முகாம் தாக்குதலின் நான்காவது ஆண்டு நிறைவு நிகழ்வு கள் கடந்த 6ஆம் திகதி மட்டக்களப்பு படுவான்கரையில் வெகு விமரிசையாக இடம்பெற்றன.

இந்த இராணுவ முகாம் தாக்குதலின்போது உயிரிழந்த லெப்.கேணல் பாலேந்திரா, லெப்.கேணல் மதனா உட்பட 103 பேரினதும் உருவப்படங்கள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப் பட்டன. இந்த ஊர்வலம் வந்த பாதையில் மக்கள் திரண்டு நின்று மலர் தூவி அஞ்சலி செய்தனர்.

கரடியனாற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வுகள் காலை 8 மணிக்கு ஆரம்ப மாகின. மட்டக்களப்பு மாவட்டத் தளபதிகளில் ஒருவரான நாகேஸ் ஈகைச் சுடரேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்துவைத்தார். விடுதலைப் புலிகளின் கொடியை சிறப்புத் தளபதி ரமேஷ் ஏற்றினார்.

குறிஞ்சி, முல்லை, மருதம் என மூன்று பிரிவுகளாக விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

அழகாக அலங்கரிக்கப்பட்ட இல்லங்களில் பெண் போராளிகள், ஆண் போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் நிஷாம் தலைமையில் அன்றைய தினம் இரவு மைதானத்தில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்குச் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தலைவர் ரமேஷ் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார்.

மேற்படி நிகழ்வுகளில் பொதுமக்கள் சிலரும் பிரமுகர்களும் உரைநிகழ்த்தினர்.

**— நேரன்**

# முகமூடித் திருடர்களால் மட்டக்களப்பில் கிலி

மட்டக்களப்பு நகர எல்லைப்புறக்கிராமங் களில் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது.

பொதுவாகக்களவு மற்றும் கொள்ளைகள் இரவில் தான் நடப்பது வழக்கம் ஆனால் மட்டக் களப்பு நகர்ப்புறங்களில் பகல் வேளைகளிலும் துணிகரக் கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

கொள்ளையர்கள் சர்வசாதாரணமாக நடமாடு வதாகத் தெரிகிறது.

அண்மையில் மட்டுநகர் இருதயபுரம், ஊறணி, ஜெயந்திபுரம் ஆகிய இடங்களில் கொள்ளையர்கள் பல்லாயிரம் ரூபா பெறுமதியான நகைளையும் மற்றும் பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கறுப்புத்துணியால் முகத்தைக் கட்டிக் கொண்டு சிறுசிறு துப்பாக்கிகளுடன் கொள்ளை யர்கள் நட மாடுகின்றனர்.

வீட்டில் இருப்போரை விரட்டிப்பணம், நகை ஆகியவற்றை இவர்கள் கொள்ளையிட்டுச் செல்வ தாகபொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

குறிப்பாக வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றவர்களின் வீடுகளிலேயே இந்த கொள்ளைச் சம்பவங்கள்இடம்பெறுகின்றன.




### லண்டன் போக வாரீங்களா?

புலித் தடையைத் தடுக்க பிரிட்டன்வரை போக முயன்ற தமிழ்க்கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான காந்தமானவர் கூட்டமைப்புக்குத் தெரியாமல் விரைவில் அங்கு செல்லவுள்ளாராம். போவது எதற்கு என்பதைப் பரமரகசியமாக அவர் வைத்திருந்தாலும் குட்டு வெளியாகியிருக்கிறது."

"காந்தமானவரே இங்கு விரைவில் வரவுள்ளார். உங்களால் ஏன் வரமுடியவில்லை" என்று ஒரு ராசியை தன் பெயருக்கு முன்னால் வைத்திருக்கும் சிங்கமொன்று லண்டனில் இருந்து தொலைபேசி மூலம் ஒரு தமிழ் தலைவரிடம் கேட்ட பின்பே இந்தக் 'குட்டு' அம்பலமாகியிருக்கிறது.

பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாக அந்தத் தலைவரால் வரமுடியவில்லை என்று லண்டனில் இருந்து பேசிய சிங்கத் தாருக்கு தெரிவிக்கப்பட்டதாம்.

தகவல் வெளியானதைத் தொடர்ந்து உடனடியாகச் செயலில் குதித்த ஓரிரு தமிழ்க்கட்சித் தலைவர்கள் பிரிட்டிஷ் தூதரக அம்மையாருடன் தொடர்புகொண்டு கேட்டதாகவும் தெரிய வருகிறது.

"காந்தமானவர் பிரிட்டன் போவது பற்றி எனக்குத் தெரியாது. அப்படிப் போவதானால் தமிழ்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திப் போகமுடியாது" என்கிறார் ஒரு கட்சியின் செயலர் ஒருவர்.

செல்லமானவரையும் மன்னார் பிரதம மதகுருவானவரையும் பயன்படுத்திப் பிரச்சினைக்குரிய இயக்கத்தாருடன் உறவைப் பலப்படுத்திக்கொள்வதே காந்தமானவரின் திட்டம்" என்று விமர்சிக்கிறார் இன்னொரு கட்சியின் தலைவர்.

"காலஞ்சென்ற குமாரரின் பணியைச் செவ்வனே செய்வது ஒன்றே அவரின் விருப்பாகத் தெரிகிறது. அப்படியானால் அவர் அதனைச் சிறப்பாகச் செய்யக்கூடியவர். அந்தவகையில் அவர் ஒரு 'ஏபல் லீடர்' (Able Leader) என்று சான்றுப்பத்திரம் கொடுக்கிறார் மற்றுமொரு கட்சியின் செயலர்.

### அம்மாளின் புது ஆயுதம்

வேலை ஆயுதமாகக் கொண்டுள்ள அந்த அம்மாள் மேற்குத் திசை சபையில் அமர்வதற்கு புதிய ஆயுதமொன்றை ஏந்தத் தீர்மானித்திருக்கிறாராம்.

மேற்குத் திசை சபையில் அவர் அமர்வதற்கு காத்திருந்த காலம் 2 வருடம். எனினும் பச்சைக் கட்சித் தலைமைத்துவம் 'இன்றல்ல நாளை' என்று இழுத்தடித்து வருகிறது. இந்த இழுத்தடிப்பினால் பொறுமை இழந்த நிலையிலேயே புதிய ஆயுதத்தைத் தாம் ஏந்த வேண்டியிருக்கிறது என்று தமக்கு நெருக்கமானவர்களிடம் அந்த அம்மாள் கூறிவருகிறாராம்.

"மேற்குத் திசைச் சபைக்குப் போட்டியிட்டதில் 'கரு'வான வெற்றிச் சூரருக்கு, அடுத்து அதிக வாக்குகளைப் பெற்றது நானே. அவரின் பதவி விலகலுக்குப் பின் எனக்கே அந்த இடத்தைத் தந்திருக்கவேண்டும்" வாதிடுகிறார் அந்த அம்மாள்.

வாதத்தை ஏற்றுக்கொண்ட பச்சைக் கட்சித் தலைமை 'விரைவில் நியமிக்கிறோம்' என்று அவருக்கு உறுதிமொழி கொடுத்து இரண்டு வருடமாகிவிட்டது.

ஏன் தாமதம் என்று அம்மாளைக் கேட்டால் 'விரைவில் தருவார்கள்' என்பார். ஆனால் இன்னும் காலம் தாழ்த்தியே நியமனம் செய்வார்கள் என்று பச்சைக் கட்சிப் பக்கம் ஒரு பேச்சு அடிபடுகிறது.

"காலம் தாழ்த்தி இறுதி நேரத்தில் நியமனம் தந்தால் அதை யார் ஏற்றுக்கொள்வார்கள்? அந்தளவுக்கு நான் அரசியலில் தாழ்ந்து போகவில்லை" என்று அம்மாள் இப்போது முழங்குகிறார்.

"இப்போதும் என்னை ஆளும் கட்சிக்காரர்கள் தங்கள் பக்கம் இழுக்க தூது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள். உறுதியளித்தது போல விரைவில் நியமனம் வழங்காவிடில் ஆளும் கட்சிக்குப் போகத் தயங்கமாட்டேன். போவதால் இப்போதுள்ளதைவிட நன்மைகள் அதிகம்" என்று உறுதியாகக் கூறுகிறாராம்.

ஆனால் பச்சைக்கட்சித் தலைமையின் தலையில் அது இன்னும் ஏறவில்லையாம்.

### மேடையில் நாற்காலிக்குப் போட்டி

முஸ்லிம்களுக்கான அந்தக் காங்கிரஸின் தலைவர்கள் கட்சி நலனுக்காகத் தமது நலன்களைத் தியாகம் செய்து ஒன்றுபட்டாலும், கூட இருப்போர் சிலர் ஒற்றுமைக்குக் குழிபறிக்கும் செயல்களில் தீவிர ஆர்வம் காட்டுகிறார்களாம்.

ஏறாவூரில் நடந்த கூட்டத்தில் பெண் தலைவிக்கு நல்ல வரவேற்பு. இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் பற்றி விவரங்கள் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்தாலோசித்தே எடுக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு முன்னாள் ஈரோஸ்காரர். ஆண் தலைவரின் அணியைச் சார்ந்தவர்.

இவரைக் கலந்தாலோசிக்காமல் நிகழ்ச்சி நிரல்களை தயாரித்துச் செயற்படுத்தியவர் பெண் தலைவியின் அணியைச் சேர்ந்தவர். எனினும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

கூட்டத்துக்கு வந்த முன்னாள் ஈரோஸ் காரருக்கு மேடையில் தகுந்த ஆசனம் ஒதுக்கப்படாமல் இருந்ததாம். ஒதுக்கப்பட்டிருந்த தகுந்த ஆசனங்கள் இரண்டில் பெண் தலைவியும் கூட்ட ஏற்பாட்டாளரும் அமர்ந்திருந்தனராம்.

தகுந்த ஆசனம் ஒதுக்காமல் தமது பிரதிநிதி அவமதிக்கப் படுவதைப் பொறுக்காத ஆதரவாளர்கள் கல்லடி, போத்தல டிகளில் இறங்கிய பின்னரே ஆசனம் போடப்பட்டதாம்.

பெண்தலைவியின் ஆதரவாளர் ஒழுங்கு செய்தநிகழ்ச்சிகளுக்குப் புறம்பாக முன்னாள் ஈரோஸ்காரர் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகளிலும் பெண் தலைவி கலந்துகொள்ள வேண்டி ஏற்பட்டதாகத் தெரிகிறது.

முன்னாள் ஈரோஸ்காரருக்கு அவமதிப்பு ஏற்படும்படியாக நடந்துகொண்ட அந்த ஏற்பாட்டாளருக்கு பெண் தலைவி நல்ல 'டோஸ்' கொடுத்ததாகவும் ஒரு கசமுசா காதில் விழுகிறது.

### காத்திருந்து கழுத்தறுப்பு

மலையகத்தில் தொழிலாளர்களுக்கு ஆதரவு கொடுக்கச் சென்ற தமிழ்க்கட்சி ஒன்றின் செயலருக்கு மேடையில் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இதற்குப் பொறுப்பாக இருந்தவர் யோகமான ஒரு ராஜனாம்.

மாமனிதரின் மரணத்தின்போது இதே கதி அந்த ராஜனுக்கு ஏற்பட்டதாம். அதற்குப் பொறுப்பானவர் இந்தச் செயலர்தானாம்.

மேடைக்கு வந்திருந்த தமிழ்க்கட்சிகளில் யார் யாரெல்லாம் பேசுவது என்று அவர்களின் பெயர்களைக் கேட்டுக்கொண்டிருந்தார் இன்னுமொருதிவ்யமானராஜன். அவ்வேளையில் பின்னால் இருந்த யோகமான ராஜன் இவரைப் பார்த்துக் கையசைத்துப் 'பேசவிடக் கூடாது' என்று சைகை செய்ததைப் பலகண்கள் நோட்டமிட்டனவாம்.

"யோகமானவர் தன்னை நிச்சயமாகப் பழிவாங்குவார்" என்று ஊகித்துக்கொண்ட தமிழ்க்கட்சியின் செயலர் பக்கத்தில் இருந்த இன்னுமொரு தலைவரிடம் இதுபற்றிக் கூறினாராம். "இல்லை. நிச்சயமாக நீங்கள் பேச அனுமதிக்கப்படுவீர்கள்" என்று அந்தத் தலைவரும் தைரியம், சமாதானம் எல்லாம் சொன்னாராம்.

எனினும் எதிர்பார்த்தது நடந்தது. செயலர் பேசுவதற்கு அழைக்கப் படவேயில்லை. உரையாற்றும் நிகழ்ச்சிகள் முடிந்து தலைவர்கள் வெளியேறும்போது திவ்யமானராஜன் பவ்யமாக வந்தாராம்.

அவரைக் கண்ட அந்தச் செயலர் "நீங்கள் என்னைப் பேச அழைக்காவிட்டாலும் பத்திரிகைக்காரர்கள் என்னிடம் பேட்டி எடுத்துக்கொண்டார்கள்" என்ற கூறியபோது அவர் அசடு வழிந்தாராம்.

இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட கொழும்பிலுள்ள இன்னுமொரு தமிழ்க் கட்சியின் செயலர் ஒருவர் "உங்களை இப்படிக் காத்திருந்து கழுத்தறுத்தவர் நான் அங்கு போயிருந்தால் என்னை எப்படிப் பழிவாங்கியிருப்பார் என்று நினைத்துப்பார்க்கிறேன்" என்று சம்பந்தப்பட்ட செயலரிடம் ஆறுதலாகக் கூறினாராம்.

# நிதி நெருக்கடி வேளையில் ஜனாதிபதிக்கு மாளிகையா?

## அதுவும் 60 கோடி ரூபா செலவில்; ஐ.தே.க. கோபாவேசம்

நாட்டுக்குப் புதிய ஜனாதிபதி மாளிகை ஒன்று அவசியமா இல்லையா? என்பது குறித்து இப்பொழுது சர்ச்சை ஒன்று நடைபெற்று வருகிறது. பெரும் பணச்செலவில் புதிய மாளிகையை அமைப்பது அவசியமற்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சி கூறுகிறது.

மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி) இந்த மாளிகை அமைக்கப்படுவதை எதிர்க்கிறது.

அரசாங்கமோ இந்த மாளிகை அமைக்கப்படுவது அவசியமானது என்று வாதாடி வருகிறது. அதற்கான காரணங்களையும் எடுத்துக் கூறுகிறது.

கொழும்பு, கோட்டை நகரின் மத்தியில் ஜனாதிபதி மாளிகை தற்பொழுது அமைந்துள்ளது. அந்நியர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட இந்த மாளிகை 14 அறைகளைக் கொண்டது. மூன்று ஒன்றுகூடல் மண்டபங்களும் அதில் உள்ளன. நாடு முழு சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இந்த மாளிகை 'ராணி மாளிகை' யாக விளங்கியது.

ஜனாதிபதி மாளிகை இடம் மாற்றப்படுவதற்கான காரணம் என்ன?

ஐ.தே.க இது குறித்து தெரிவிக்கும் கண்டனங்களுக்கு அமைச்சர் மங்கள சமரவீர விரிவாகப் பதிலளித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. காலி முகத்திடல் அருகே உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்குப் பதிலாக கோட்டேயில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை அமைக்கத் தீர்மானித்தது. அப்பொழுது கொழும்பு நகரத்தை தெற்கு ஆசியாவில் சிறந்ததொரு வர்த்தக கேந்திர நிலையமாக மாற்றும் திட்டமும் முன் வைக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட விசேட நினைவு மலரில் தலைநகரின் சகல நிருவாக கட்டடங்களும் இடம்மாற்றப்பட வேண்டிய இடமாக கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர குறிப்பிடப்பட்டது. இறுதியில் புதிய நாடாளுமன்றக் கட்டடம் அங்கு அமைக்கப்பட்டது.

இந்த விவரங்களை எல்லாம் அமைச்சர் மங்கள சமரவீர சில தினங்களுக்கு முன்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டுள்ளார். அவர் மேலும் விவரங்களை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு நகரை வர்த்தக நகராக அபிவிருத்தி செய்யும் திட்டம் 12 ஆண்டுகளாகச் செயற்படுத்தப்படவில்லை. இதனால் 1994 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இத்திட்டத்தைத் தயாரிப்பதற்கான நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்தது. 1997ஆம் ஆண்டில் இக்குழுவின் பூர்வாங்க திட்டம் பூர்த்தியானது. அரசாங்கத் தலைவர்களின் அதிகாரபூர்வ இல்லங்களும் கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்துக்கு இடம் மாற்றப்பட வேண்டுமென அத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டது.

இதையடுத்து ஸ்ரீஜயவர்தனபுர மாதிவல பகுதியில் புதிய ஜனாதிபதி மாளிகையை அமைக்க அரசு தீர்மானித்தது. அரசுத் தலைவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழக்குவதே இந்த இடமாற்றத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. புதிய மாளிகை ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லம், செயலகம், பாதுகாப்புப் பிரிவு, சேவைகள் வழங்கற் பிரிவுகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

ஜனாதிபதி மாளிகை இரண்டு மாடிகளைக் கொண்டது. ஐந்து படுக்கை அறைகள், இரு மண்டபங்கள், வாசிகசாலை, சமையலறை ஆகியனவும் மாளிகையில் அடங்கும். மாளிகையின் மொத்த பரப்பளவு 12,879 சதுர அடிகள். நிர்மாணச் செலவு 60 கோடி ரூபா.

ஜனாதிபதி செயலகம் நான்கு மாடிகளைக் கொண்டிருக்கும். அதன் இடவசதி 1,70,000 சதுர அடிகள் 80 கோடி ரூபா செலவாகும்.

கட்டடங்களுக்கான அத்திவார வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு அடுத்த மாதம் அவை பூர்த்தியடையும். கட்டட நிர்மாணப் பணிக்கு கேள்விப் பத்திரங்கள் கோரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு மத்தியில் புதிய மாளிகையின் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ரி.வி.யில் நேரடி விவாதம்?

கோட்டே, மாதிவல பகுதியில் ஜனாதிபதி மாளிகை அமைக்கும் விவகாரம் குறித்து நகர அபிவிருத்தி, நிர்மாண, பொதுவசதிகள் அமைச்சர் மங்கள சமரவீர சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகையாளர் மாநாடு நடத்தினார் அல்லவா? அம்மாநாட்டில் அவர் வெளியிட்ட தகவல்கள் தொடர்பாக நேரடி தொலைக்காட்சி விவாதத்துக்கு முன் வருமாறு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சவால் விடுத்தார். அச் சவாலை அமைச்சர் சமரவீர ஏற்று தொலைக்காட்சி விவாதத்துக்கு முன் வந்துள்ளார். திகதி பின்னர் தீர்மானிக்கப்படலாம்.

புதிய ஜனாதிபதி மாளிகை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிக்கும் கண்டனங்கள் "கண்ணாடி வீட்டில் இருந்து கல்லெறிவது போன்றவை" என்று அமைச்சர் சமரவீர வருணித்துள்ளார்.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் வேளையில் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்து ஜனாதிபதி மாளிகை கட்ட வேண்டுமா என்று ரணில் விக்கிரமசிங்க வினவி வருகிறார். இந்த மாளிகை கட்டப்படவிருக்கும் இடம் பெரும் சதுப்பு நிலம் எனவும் சிங்கள மன்னர் ஆட்சிக் காலத்தில் எதிரிப் படைகளை மடக்கவே இந்த சதுப்பு நிலம் பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் விவரித்து வருகிறார்.

ஐ.தே.க. வெகுஜன ஊடக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின் போது ரணில் விக்கிரமசிங்க இந்த வரலாற்றுக் கதையை விரிவாகக் கூறியிருக்கிறார்.

"ஆரியச் சக்கரவர்த்தியின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணம் இலங்கையின் பிரதான இராஜதானியாக மாறியது. யாழ்ப்பாண இராஜதானியின் படைகள் கம்பளை இராஜதானியைத் தாக்கித் தோல்வியுறச் செய்தன. இறுதியில் கம்பளை இராஜதானியின் மன்னன் புவனேகபாகு யாழ்ப்பாணத்துக்கு வரி செலுத்த வேண்டிய தாயிற்று. அது மட்டுமல்ல தென்னிலங்கையின் வாசனைத் திரவிய வியாபாரத்தையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வரவும் ஆரிய சக்கரவர்த்தி குறி வைத்தார்.

அக்காலத்தில் புத்தளம் முதல் அம்பாந்தோட்டை வரையிலான கரையோரப் பிரதேசத்தில் வசித்த முஸ்லிம் வியாபாரிகளே இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். கேரள நாட்டு வியாபாரிகளும் இதில் ஈடுபட்டனர். ஆரிய சக்கரவர்த்தி இந்த வியாபாரத்தைக் கைப்பற்றினால் தமது வியாபாரத்துக்கு பெரும் அடி விழுமென இந்த வியாபாரிகள் அஞ்சினர். இதனால் றைகமயை ஆண்ட நிசங்க அழகேஸ்வராவைச் சந்தித்த இந்த வியாபாரிகள் ஆரியசக்கரவர்த்தியின் படைகளைத் தோற்கடிக்க முடியுமா என வினவினர். அதற்கான பணத்தை வழங்கவும் முன்வந்தனர்.

இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நிசங்க அழகேஸ்வரா ஆரிய சக்கரவர்த்தியின் படைகளைத் தோற்கடிக்கத் திட்டம் தீட்டினார்.

இதற்கான ஓர் இடத்தை அவர் தேடினார். முழு மேற்கு மாகாணத்திலும் தியவன்னா ஓயாவுக்கு அருகில் உள்ள சதுப்பு நிலத்தையே சிறந்த இடமாக அவர் கண்டார். அந்த இடத்துக்கு அருகில் கோட்டை ஒன்றை கட்ட அழகேஸ்வரா தீர்மானித்தார். அந்தக் கோட்டைக்கு அருகில் பெரிய அகழி ஒன்றையும் வெட்டினார். இன்றும் அந்த அகழியின் சிதைவுகளைக் காண முடியும்.

ஆரியசக்கரவர்த்தியின் படையைக் கோட்டேக்கு வரவழைத்து சண்டையிட அழகேஸ்வரா தீர்மானித்தார். ஆரிய சக்கரவர்த்தியின் வரி வசூலிப்பாளர்கள் கோட்டேக்கு வந்தவேளை அவர்களைப் பிடித்த அழகேஸ்வரா அவர்களின் தலைகளைக் கொய்து முண்டங்களைத் தனது கோட்டையின் மதிலில் தொங்க விட்டார்.

இந்த சவாலுக்குப் பதிலளிக்க ஆரிய சக்கரவர்த்தி தனது படையை கோட்டேக்கு அனுப்பினார். அழகேஸ்வராவின் கோட்டையை படைகள் தாக்கின. ஆனால் தியவன்னா ஓயா, சதுப்பு நிலம், முதலைகள் நிறைந்த அகழி என்பவற்றால் கோட்டை இச்சண்டையில் காப்பாற்றப்பட்டது. இந்த நிலையில் மேலதிக படை ஒன்றை வேறு ஒரு பக்கத்துக்கு அனுப்பிய அழகேஸ்வரா எதிரிப் படைகளை சதுப்பு நிலத்தில் சிக்க வைத்து முற்றாக அழித்தார். அந்த அளவுக்கு இந்த சதுப்பு நிலம் ஆழமானதாகும்.

இதுவே ரணில் கூறிய வரலாற்றுக் கதை.

அன்று நிசங்க அழகேஸ்வரா இந்த சதுப்பு நிலத்தைப் பயன்படுத்தி ஆரிய சக்கரவர்த்தியின் படைகளைத் தோற்கடித்து விரட்டியது போல இந்த அரசை நாமும் விரட்டியடிக்க வேண்டும் என்றும் ரணில் கூறியிருந்தார்.

ஜனாதிபதி மாளிகை அமைக்கும் இப்பிரச்சினையால் சிக்கலில் மூழ்கப் போவது அரசா? ஐ.தே.க.வா?

– எட்வேர்ட்

# விட்டு விட்டு உடற்பயிற்சி செய்யுங்களேன்!

உடலைக் கட்டாக வைத்துக் கொள்ள உடற்பயிற்சி மிகவும் அவசியம் என்பதை பெண்கள் இப்போது உணரத் தொடங்கி விட்டனர் தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்ற ஆசை அதிகரித்துள்ளது.

உடற்பயிற்சி செய்யும் போது, ஒரேயடியாக ஒரு மணி நேரமோ அரை மணி நேரமோ சேர்ந்தாற்போல் செய்கிறார்கள். அதை விட, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை பத்து நிமிடங்கள் என்று விட்டு விட்டுச் செய்வது இன்னும் நல்ல பலனைக் கொடுக்கும் என்று சமீபத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

காலையில் எழுந்து வேகமாக நடப்பது, சைக்கிள் ஓட்டுவது, நடனப் பயிற்சி செய்வது என்று ஒட்டுமொத்தமாக உடற்பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். அதை விட, விட்டு விட்டு உடற்பயிற்சி செய்பவர்களின் இருதயம், சுவாசப்பை ஆகியவை நல்ல முறையில் இயங்குகின்றன என்றும் இந்த ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

உடல் எடையைச் சீராக வைத்துக் கொள்பவர்கள் தங்கள் உடலைப் பாதுகாக்க ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது நல்லது. ஆனால், அது நீண்ட நேரமாக இல்லாமல் ஒரு நாளில் பத்து நிமிடங்கள் கூட ஒதுக்கினால் போதுமானது.

ஆனால், அந்தப் பத்து நிமிடங்களில் வேறு எந்த சிந்தனையும் இன்றி ஒருமுகமாக உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

தினமும் சரியாக அந்தப் பத்து நிமிடங்களை ஒதுக்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம், இரண்டு மணிநேரம் உடற்பயிற்சி செய்வதற்கு அடுத்து இரண்டு நாட்கள் செய்யாமல் விட்டுவிடுவது, பிறகு திரும்பவும் இரண்டு நாள் உடற்பயிற்சி செய்வது இப்படி செய்வது மிகவும் தவறு.

எடையைக் குறைக்க விரும்புபவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை பத்து நிமிடங்கள் என்று விட்டு விட்டு உடற்பயிற்சி செய்யலாம். இதனாலும் நல்ல பலன் கிடைக்கும்.

"என்ன இது! இந்த நோயாளியின் இருதயத்தைக் காணவில்லையே...!!!"

"இவர் தன்ரை காதலியிடம் இருதயத்தைப் பறிகொடுத்து விட்டார்...!!!"



# அற்புத கலாசாரச் சின்னங்கள் அழிப்பில் தலிபான் அரசு தீவிரம்

## உலகின் மிகப்பெரிய புத்தர் சிலையும் ஆப்கானில் தகர்ப்பு

ஆப்கானிஸ்தானில் 1,500 வருட காலம் பழைமை வாய்ந்த புத்தர் சிலை அது.

மலைப் பாறையில் அது செதுக்கப்பட்டிருந்தது. 55 மீற்றர் உயரமான அந்தப் புத்தர் சிலையின் சில அவயவங்கள் கடந்த காலங்களில் இடம் பெற்ற சில சம்பவங்களினால் சிதைந்திருந்தாலும் அதன் கம்பீரத்தில் எந்தவித குறையும் இல்லாதிருந்தது.

13ஆம் நூற்றாண்டில் படையெடுத்துவந்த செங்கிஸ்தானிடமிருந்து இந்தப் புத்தர் சிலை தப்பியது. அதன் பின்னர் போர் தொடுத்த, ஈவிரக்கமற்ற தைமூரிடமிருந்தும் அது தப்பித்துக் கொண்டது.

ஆனால் தற்போது தலிபானின் பீரங்கிக் குண்டுகளுக்கு அது தப்பமுடியவில்லை.

''அல்லாஹ் மட்டும்தான் உண்மையான கடவுள் போலியான சின்னங்களை எல்லாம் தகர்க்க வேண்டும்'' என்று தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமார் அண்மையில் கூறியிருந்தார்

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள அருங்காட்சியகத்திலுள்ள புராதன சிலைகள் தகர்க்கப்படுகின்றன என்ற செய்தியே முதலில் வெளியாகியது. இதனை அடுத்து மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று அங்கு சென்றது.

அதனால் கோபமடைந்தே புத்தர் சிலைகளையும் தகர்க்கும் திடீர் அறிவிப்பு தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமாரினால் பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் கலாசாரத் தொடர்புத்துறை அமைச்சர் குத்ரதுல்லா ஜமாலை மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள் குழு பெப்ரவரி 26ஆம் திகதி சந்தித்துப் பேசியது.

ஆனால் அருங்காட்சியகத்துக்குள் அவர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அந்த அருங்காட்சியகத்தினுள், பௌத்த, கிரேக்க நாகரிக காலத்து அரும்பொருள்கள் பல உள்ளன. ஏழாம் நூற்றாண்டில் படையெடுத்து வந்த அரேபிய இராணுவம் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் வரையிலான கலாசார வரலாற்றுச் சான்றுகள் பலவும் அங்கு பாதுகாக்கப்பட்டிருந்தன.

ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாமியரின் வருகைக்கு முன்னரும் புராதன புத்தர் சிலைகள் உட்பட பல கலாசார சின்னங்கள் அங்கு அழிக்கப்பட்டிருந்தன.

இதனைவிட 80 களின் பிற்பகுதியில் சோவியத் ரஷ்யா ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய பின்னர் இயக்கங்கள் மத்தியில் இடம் பெற்ற கோஷ்டி மோதல்களின் போதும் தலைநகர் காபூலில் உள்ள அருங்காட்சியகத்தில் பல அரும்பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டன, நாசமாகின.

ஆப்கானிஸ்தானின் கலாசார விழுமியங்களை உலகுக்குப் பறைசாற்றும் பல சின்னங்கள் கடந்த சில வருடங்களாக பெஷாவர் வழியாக பாகிஸ்தானுக்குக் கடத்தப்பட்டுள்ளன.

அவை ஏனைய நாடுகளிலுள்ள அரும் பொருள்கள் சேகரிப்போருக்கு விற்கப்பட்டன. அவற்றில் எஞ்சியவை ராக்கெட் வீச்சுகளுக்கும் துப்பாக்கி ரவைகளுக்கும் இரையாகின.

பிற மதங்களின் கலைப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டும் என்று ஒரு காலத்தில் உத்தரவு போட்ட தலிபான் தலைவர் முல்லா ஓமார் தற்போது தீவிரமான போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்.


காபூலிலிருந்து 90 மைல் தொலைவிலுள்ள பாமியன் தொல் பொருள்கள் அழிக்கப்பட்டமை, உலகநாடுகள் பலவற்றையும் பெரிதும் கவலை கொள்ளச் செய்துள்ளது. மிகச் சிறந்த அகழ்வாராய்ச்சித் தளம் அது.

அங்கு இரண்டு புத்தர் சிலைகள் உள்ளன. அவற்றில் ஒன்றின் உயரம் 55 மீற்றர். உலகிலேயே உயரமான நின்ற நிலை (Standing Buddha) புத்தர் சிலை அது.

சோவியத் ரஷ்யப் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்த போது பாமியன் தொல்பொருள் ஆராய்ச்சித் தளத்தைச் சுற்றிலும் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன.

**சுமார் 1,800 ஆண்டுகளுக்கு முன், 'புத்தம் சரணம் கச்சாமி' என்று கோஷம் எழுப்பிய படி ஆப்கானிஸ்தானின் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் இந்தியாவில் இருந்து பிக்குகள் அங்கு சென்றனர். பல தசாப்தங்களின் பின்னர் உலகமே பிரமிக்கும் வகையில் கடுமையான மலைச் சிகரங்களில் மாபெரும் புத்தர் சிலைகள் எழும்பின. அந்த மலைச்சிகரங்களில் அன்று அந்தச் சிலைகள் எழும்பியிரா விட்டால் வரலாற்றில் ஒரு முக்கிய ஏடு காணாமல் போய் இருக்கும். 1,500 ஆண்டுகளுக்கு முன் மனிதன் எட்டியிருந்த நாகரிகத்தின் உச்சம் எவருக்கும் தெரியாமல் போய் இருக்கும்.**

சோவியத் ரஷ்யப் படைகள் வெளியேறி



உலகிலேயே மிகவும் உயரமான புத்தர் சிலை இதுதான். மலையைக் குடைந்து வடிக்கப்பட்டது. தலிபான் பீரங்கிகளின் பிரதான தாக்குதல் இலக்கு இந்த புத்தர் சிலை தான். 55 மீற்றர் உயரமான இந்த புத்தர் சிலை கால்கள் அழிக்கப் பட்ட நிலையில் காணப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு யுத்தம் மூண்ட பின்னர் 1998 இல் தலிபான் கொமாண்டர் ஒருவரின் ராக்கெட் தாக்குதலுக்கு இலக்காகி அங்கிருந்த 33 மீற்றர் உயரமான சிறிய புத்தர் சிலையின் அங்கிப் பகுதி உடைந்து விட்டது. பெரிய புத்தர் சிலையின் இடுப்புப் பகுதி சிதைந்தது.

நங்கர்ஹர் என்ற பகுதியின் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஹட்டா மற்றும் காபூலிலிருந்து 60 மைல் தொலைவிலுள்ள கஜினி ஆகிய நகரங்களிலும் புத்தர் சிலைகளும் புத்த மதப் புனிதப் பொருள்களும் உள்ளன. பாமியனில், செங்கிஸ்தான் வரும் வரை புத்த மதம் ஆழமாக வேரூன்றி இருந்தது. இதற்குச் சான்றாக அசோகரின் கல்வெட்டுக்களைப் பார்க்கலாம்.

புத்தர் சிலைகளையும் மற்றும் புராதன சிலைகளையும் உடைக்கும் தலிபான் தலைவர் முல்லா ஓமாரின் உத்தரவுக்கு உலகின் பல தரப்பிலிருந்தும் கண்டனங்கள் கிளம்பி உள்ளன.

''நைந்து போன சமுதாயத்தைச் சீரமைப்பதும் ஆப்கானிஸ்தான் மக்களின் இன்னல்களைக் களைவதுமே ஆப்கானிஸ்தான் அரசுக்கு உள்ள முன்னுரிமைகள்'' என்று கூறியுள்ளார் ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான்.

தலிபானின் நடவடிக்கை காட்டுமிராண்டித் தனமானது என்கிறது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு.

''பல்வேறு மதத்தினரும் புனிதமாகக் கருதும் பாரம்பரியச் சின்னங்களை அழிப்பது ஆத்திரத்தை ஊட்டுகிறது'' என்கிறார் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளர் ஃபிலிம் ரீகர்.

''எகிப்துக்கு பிரமிட்டுக்கள், ஃபெரோக்கள் எப்படியோ அப்படியே ஆப்கானிஸ்தானுக்கு இந்தச் சிலைகள் மற்றும் கல்வெட்டுக்கள். ஆப்கானிஸ்தான் 1200 வருடங்களாகத் தீவிர முஸ்லிம் நாடாக இருந்து வருகிறது. ஆனால் எந்த ஒரு முல்லாவும் இது போன்ற காரியங்களில் இறங்கியதில்லை'' என்று கூறுகிறார் தலிபானுக்கு முன் ஆட்சியிலிருந்த புர்ஹனுத்தீன் ரபானி.

இந்தப் புத்தர் சிலைத் தகர்ப்பினால் உலகம் முழுவதும் உள்ள பௌத்த மதத்தினர் கொதித்துப் போயுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா, தாய்லாந்து, மியன்மார், நேபாளம் ஆகிய நாடுகளுக்கான இலங்கைத் தூதர்கள் ஆகியோர் புத்தர் சிலைகளைக் காப்பாற்றும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

யுனெஸ்கோ தலைவர் கொய்சிரோ மாட்சுரா, கலாசாரச் சின்னங்களை அழித்தொழிக்கும் முயற்சியைக் கைவிடுமாறு தலிபானுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடனை ஒப்படைக்க ஆப்கானிஸ்தான் மறுத்ததால் கடந்த ஜனவரி மாதம் முதல் ஆப்கானிஸ்தான் மீது பொருளாதாரத் தடை தீவிரப்படுத்தப்பட்டது. அந்தத் தடையைத் தளர்த்தும் முகமாகவே ஆப்கானிஸ்தான் இத்தகைய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அபினை உற்பத்தி செய்வதற்குத் தேவையான கசகசா செடியை ஆப்கானிஸ்தானில் பயிரிட தலிபான் தடை விதித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் விவசாயிகள் தடையை மீறுவதில்லை என்று ஐ.நாவே ஒப்புக் கொள்கிறது.

இதன் மூலம் ஹெரோயின், அபின் ஆகிய வற்றின் உற்பத்தியை நிறுத்த வேண்டும் என்ற உலக நாடுகளின் கோரிக்கையையும் தலிபான் நிறைவேற்றி வருகிறது.

ஆனால் கலாசார விடயத்தில் உலக நாடுகளின் விருப்பத்துக்கேற்ப நடந்துகொள்ள தலிபான் தலைவர் முல்லா ஓமாரால் முடியாத காரியம் போல் தென்படுகிறது.

சுமார் 2000 ஆண்டு வரலாறும், காணக் கிடைக்காத அரும் பொருள்களும் குரங்கின் கை பூமாலையாகிவிட்டன என்பது மட்டும் உண்மை.

-நன்றி: இந்தியா டுடே












இப்பத்திரிகை கொழும்பு 06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர்பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2001 மார்ச் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.